# வணிக வனிதை





இதழ் - 19

## வணிக மாணவர் ஒன்றியம்

2017

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**




**QUANTITY SURVEYING**

HND

Leading to **BSc (Hons)** from the UK Universities

**CIVIL ENGINEERING**

HND

Leading to **BEng / BSc (Hons)** from the UK Universities

**COMPUTING**

HND

Leading to **BSc (Hons)** from the UK Universities

**Jaffna Campus**
16, Point Pedro Road,
Jaffna.

**Corporate Office**
32, Dharmarama Road,
Colombo 6.
T : 0112597217

Academic Impact Winner by QSi - UK 2016

Ranked as No.1 Higher Education Provider (Private Sector) Survey by LMD 2014

BTEC Gold Partner by Pearson - UK 2013

Performance Excellence Award by Pearson - UK 2011

us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

யாழில் கொழும்பு பிறின்டேர்ஸ் - 0771974875





QUANTITY SURVEYING



HINDU LADIES' COLLEGE
LIBRARY
JAN 2017

# வணிக வனிதை

IT OUGHT TO BE BEAUTIFUL I LIVE HERE
JHLC - ESTD:10.09.1943

## இதழ் - 19

## 2017

வணிக மாணவர் ஒன்றியம்

யாழ்.இந்து மகளிர் கல்லூரி

## COMMERCE STUDENT'S UNION

J/JAFFNA HINDU LADIES' COLLEGE

# வணிக வனிதை

## 2017

## இதழ் - 19

**இதழாசிரியர்கள் :**

*ஞா.நிலக்ஸ்சினி*

*லோ.மதுமிதா*

வணிக மாணவர் ஒன்றியம்

யாழ். இந்து மகளிர் கல்லூரி,

யாழ்ப்பாணம்

# கல்லூரிக் கீதம்

1. திருமிகுமெங்கள் யாழ்நகர் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெருவருமிந்துப் பெண்களுக்
கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உன்னைப்
பெருகிடும் அன்பால் புந்தியில்
வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

2. இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடும் கல்லூரி - உயர்
சிந்தை வளம் பெற மெய்ப்
பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி
அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த் தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

3. மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை
யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய
மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண்டன்புடன் பாடி
அனுதினம் ஏந்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

4. கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் தொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனை
தலைமுறையாகத் தொழு துளங்
குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

# வணிக மன்ற கீதம்

வாழ்க மன்றம் வணிக மன்றம் வாழ் வாழ்கவே - என்றும்
மாண்புமிகு மாணவரின் மகிமை நிலைக்கவே
மண்ணுலகில் நுட்பங்கள் மறைந்திடலாமே - எங்கள்
இந்து மகளிர் வணிக வனிதை வாழ்க வளர்கவே

மனித நாகரிகம் வெற்றி பெற்று உயரவே
வணிகவியல் முதுகெலும்பாய் ஆச்சு உலகிலே
வணிகவியல் ஓங்க தேசம் சொர்க்கமாகுமே
குனிவிலாத வாழ்வை அளிக்கும் வணிகக்கல்வியே - என்றும்

வணிக வனிதையர் ஒன்று இணைந்து சேரவே
வணிகவியல் நுட்பம் யாவும் கண்டு கொள்ளுதே
வணிகக் கல்வியாலே ஊரும் உலகும் ஓங்கவே
வந்துதித்த வனிதை தன்னை போற்றிப் பாடுவோம்

வணிக மன்றம் இன்று வீறுநடை போடுதே
வளர்ந்து தனது காலில் நின்று வலிமை கொள்ளுதே
தகவல் யுகம் தன்னில் இன்று இணைந்து கொள்ளுதே
தலைமுறைக்குத் தரவுகளை அள்ளித் தருகுதே

வணிகக்கல்வி புதுமை புகுத்தி மாண்பு பெறவே
மகிழ்ந்து நாமும் இந்த நூற்றில் வளர்ந்து வாழவே
செழுமை கொண்டு சிறப்புப் பெற்று சீரும் பெறவே
நெகிழ்ச்சி பெற்று உயர்ந்து வனிதை வளங்கள் சேர்க்கவே.



## அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரியின் வணிக மன்றத்தினால் வெளியிடப்படும் 19வது வெளியீடான ***"வணிக வனிதை"*** சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

எமது கல்லூரியின் இணைபாடவிதான செயற்பாடுகள் மாணவர்களின் ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக் கொண்டு வருவதோடு அவர்களின் ஆளுமை விருத்தியிலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

இன்று உலகில் ஏற்பட்டு வரும் விரைவான மாற்றங்களுக்கு நாமும் முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். எங்கும் எதிலும் இலத்திரனியல் சாதனங்களின் சாதனை நிலை நாட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனினும் மாணவர்களின் தேடல்களுக்கும் வாசிப்புக்கும் களமமைக்கும் முகமாக இச் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

மாணவர்களது ஆக்கங்களுடன் ஆசிரியர்களினதும், விரிவுரையாளர்களினதும் ஆக்கங்களை தாங்கி இம்மலர் கனதியுடையதாக வெளிவருகின்றது. இச் சஞ்சிகை வெளிவர முன்னின்று உழைத்த மாணவிகளையும் அவர்களை, நெறிப்படுத்திய மன்றப் பொறுப்பாசிரியரையும், துறை சார்ந்த ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு வணிக வனிதை தொடர்ந்து வலம் வர வேண்டுமென கல்லூரியில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் நடுத்தோட்ட இராஜவரோதய பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

*திருமதி.மிமலாதேவி விமலநாதன்*
**அதிபர்**
**யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி**

# எங்கள் அதிபர்





## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவர்களால் வருடம் தோறும் வெளிக்கொணரும் "***வணிக வனிதை***" இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மனநிறைவடைகின்றேன். இக்க்லூரியில் கல்வி பயின்று பல பரிமாணங்களில் பலர் சமுதாய முன்னேற்றத்திற்கு அயராது உழைத்து வருகின்றனர். இத்தகைய திறன் வாய்ந்த பெண்களின் படைப்புக்கள் பல்துறை சிறப்புமிக்கவை. உழைப்பும், சிக்கனமும் நிருவாகத்திறனும் உள்ளத்தில் ஊன்றிய உயரிய பெண்களின் சீரிய படைப்புக்கள் சிறப்பு வாய்ந்தனவாக வணிக இதழ் சுமந்து நிற்கின்றது. இவ்விதழ் கட்டவிழ்த்து விடும் தேடல் சிதறல்கள் தேடிக்கற்கும் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நல்விருந்தாக அமைகின்றன. இவ்விதழில் வெளிவரும் ஆக்கங்கள் நிச்சயம் ஊக்கத்தையும் உத்வேகத்தையும் தூண்டும் என்பதில் சந்தேகமில்லை. இவ் வணிக வனிதை இதழ் சிறப்புற மலர்ந்து மணம் கமழ எனது வாழ்த்துக்கள்.

ந.தெய்வேந்திரராஜா
**வலயக்கல்விப்பணிப்பாளர்**
**வலயக்கல்விப் பணிமனை**
**யாழ்ப்பாணம்**



## வணிக வனிதையை வாழ்த்தி.........

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் வணிகக் கழகத்தினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் வணிக வனிதை இதழானது இவ்வருடமும் புதுப் பொலிவுடன் வெளிவருவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இவ்விதழானது ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் கனதிமிக்க ஆக்கங்களைத் தாங்கி வந்துள்ளது. இது வணிகத்துறை சார்ந்த மாணவர்களுக்கு மட்டுமன்றி இதனை வாசிக்கும் அனைவருக்கும் ஏதோ ஒரு விதத்தில் பயனுடையதாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

இவ்விதழ் தொடர்ந்தும் புதுப் பொலிவுடனும் புதிய விடயங்களுடனும் வருடந்தோறும் வெளிவர இறைவனை வேண்டி இவ்விதழ் சிறப்புடன் வெளிவர துணை நின்ற அனைவரையும் பாராட்டி நிற்கின்றேன்.

*திருமதி.வேழினி பாலேந்திரா*
**உதவிக் கல்விப் பணிப்பாளர்**



## பகுதித்தலைவரின் உள்ளத்திலிருந்து

எமது கல்லூரியின் வணிகமன்றமானது ஆண்டு தோறும் *"வணிக வனிதை"* எனும் சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் பத்தொன்பதாவது இதழாக வனப்புடன் வெளிவரும் வணிக வனிதையை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.

வணிகத்துறையிலே பெரும் சாதனைகளைப் படைத்து வரும் எமது மாணவிகள் 2016ம் ஆண்டிலும் க.பொ.த உயர்தர பரீட்சையில் பத்து மாணவிகள் "3A" சித்தியை பெற்றதன் மூலம் பாடசாலைக்குப் பெருமைசேர்த்துள்ளனர். அவ்வணிக வனிதைகளின் வருங்காலஞ்சிறக்கவும், மென்மேலும் வணிக வானில் வனிதைகள் உலா வந்து உயர் சாதனைகள் படைக்கவும் வாழ்த்துகிறேன்.

வணிக மன்றமானது பல்வேறு செயற்பாடுகள் மூலம் மாணவிகளின் ஆற்றல்கள், திறன்களை வெளிப்படுத்தி வருகிறது. பாடசாலை மட்டத்தில் வணிகப்போட்டிகளை நடாத்தி வருவதுடன் மட்டுமல்லாது பல்கலைக்கழகம் வரை நடாத்தும் பல்வேறு போட்டிகளிலும் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிக்காட்ட வகை செய்கின்றது.

வணிக வனிதையின் வருகையானது மாணவர்கள் தமது கற்றற் செயற்பாடுகளுடன் மட்டும் நின்றுவிடாது, அவர்களது அறிவுப்புலம் சார்ந்த தேடல்களுக்கும் ஆய்வுகளுக்கும் களம் அமைத்துக் கொடுப்பதுடன் பல்வேறு படைப்பாளிகளின் உள்ளார்ந்த திறன்களின் ஒருங்கு சேர்ந்த வடிவமாக அமைவதைக் காணலாம். இவ்விதழில் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விப்புல வளவாளர்கள் தமது துறை சார்ந்த ஆக்கங்களைப் பதிவு செய்துள்ளார்கள்.

வணிக வனிதையின் தொடர் வருகைக்கும், வெற்றிக்கும் காரணமாக இருந்த அனைவரையும் வாழ்த்தி, இச்சஞ்சிகையானது தொடர்ந்தும் புதிய சிந்தனைகளுடன் வெளிவர இறையாசி வேண்டி வாழ்த்துகிறேன்.


*திருமதி. பத்மஜா பாஸ்கரக்குருக்கள்*

**பகுதித்தலைவர், வணிகத்துறை**

**உதவி அதிபர்,**

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**



## பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து.........

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரியின் வணிக மன்றம் என்பது நீண்ட காலப் பாரம்பரியத்தையும் தனக்கென்று ஒரு தனித்துவத்தையும் கொண்டதாக கல்லூரியின் ஒழுக்கம், பண்பாடு, கலாசாரம் என்பவற்றை அடுத்த சந்ததிக்கும் கொண்டு செல்லும் ஒரு நிறுவனமாகும்.

மாறும் உலகை நல்ல மாற்றத்திற்கு உள்கொணரும் வலிமை மிகு சக்தி ஆக்கச் சிந்தனைகளிலேயே தங்கி உள்ளது. தன்னை உணரவும் சமூகத்தை உற்று நோக்கவும் ஏன் எனும் வினாவை தன்னுள் கேட்டு எது செய்யலாம் எனத் தீர்மானிக்கும் சிந்தனைப் புரட்சிக்கு விடை தேடும் பாசறையாக பாடசாலை வணிக மன்றங்கள் புதுத் தளங்களை உருவாக்கிக்கொடுக்கின்றன.

அறிவுத்தேடலுக்கு வழிகாட்டியாக அமையும் இச் சஞ்சிகைக்கு உதவிய ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

மாணவ சமுதாயத்திற்கு அறிவுச் சுடரைப் பரப்பி வருடந்தோறும் வணிக வனிதை காலத்தால் அழியாத ஆவணமாக வளர்ந்திட மனதார வாழ்த்துகிறேன்.

*திருமதி.ஜசிந்தா நித்தியானந்தா*
**பொறுப்பாசிரியர்**
**வணிகமன்றம்**

## தலைவரின் உள்ளத்திலிருந்து.........



கல்வித்துறைகளில் உள்ள ஏனைய அனைத்து துறைகளுக்கும் அத்திவாரமாக விளங்குவது "வணிகத்துறை" என்று கூறுவது தற்கால உலகில் சாலப் பொருத்தமானதாக இருக்கும். எனவே தான் இவ் வணிகத்துறையை புதுப்பொலிவுடன் பேணி செல்வதற்காகவே யா/இந்து மகளிர் கல்லூரித்தாயின் குழந்தைகளாக வடிவெடுத்துள்ளோம்.

அந்த வகையிலே எமது கல்லூரி வணிகமன்றமானது 19வது ***"வணிக வனிதை"*** இதழினை புதுப்பொலிவுடன் வெளியிடுவதையிட்டு அகமகிழ்கின்றேன். பல பயன்மிக்க ஆக்கங்களையும் தாங்கிய வண்ணம் இவ்மலர் வெளிவருகின்றது. அவை மாணவர்களுக்கு மட்டுமன்றி வேலை உலகிற்கு தயாராகிக் கொண்டிருக்கும் எவர்க்குமே பயன் தரவல்லவை என்றால் மிகையாகாது.

கல்லூரியின் வணிகத்துறையினரின் படைப்பாகிய இம்மலரை வருடா வருடம் வெளியிடுவது வழக்கமே. அதே போல் நாமும் இவ் கல்லூரியில் பயின்ற இச்சந்தர்ப்பத்தில் இம்மலரை ஆக்கபூர்வமாக வெளியிட உதவிய கல்லூரி அதிபர், பிரதிஅதிபர்கள், பகுதித்தலைவர்கள், மன்றப் பொறுப்பாசிரியர், வர்த்தகப்பிரிவு ஆசிரியர்கள், இதழாசிரியர்கள் மற்றும் சவால்கள் நிறைந்த போட்டி உலகை நாளை வெல்லத் தயாராகும் என் சக வர்த்தகப்பிரிவுத்தோழிகள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"அணுகுண்டு ஒருமுறைதான் வெடிக்கும்
புத்தகங்கள் படிக்கும் போதெல்லாம் வெடிக்கும்"

*செல்வி.யோ.சுலோஜனா*
**2017 (A) வர்த்தக பிரிவு**
**தலைவர்**
**வணிக மாணவர் மன்றம்**

## இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து..........





யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வணிகத்துறை மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வகையில் இவ்வாண்டில் "*வணிக வனிதை*" தனது 19வது இதழை புதுப்பொலிவுடன் வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ் இதழானது வணிகத்தில் வீறுநடை போடும் இன்றைய காலத்திற்கு எம் அனைவரையும் பொருத்தப்பாடு உடையவர்களாக வளர்த்துக் கொள்ளும் என நம்புகின்றோம்.

இவ் இதழானது சிறப்புற வெளிவருவதற்கு உதவிய கல்லூரி அதிபர், பிரதிஅதிபர்கள், பகுதித்தலைவர்கள், பொறுப்பாசிரியர் மற்றும் ஆக்கங்களை தந்துதவிய உள்ளங்களிற்கும், மற்றும் பாடசாலை நிர்வாகத்தினருக்கும், வணிக மன்ற மாணவிகளுக்கும், விளம்பர அனுசரணையாளர்களுக்கும், இவ் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கிய உள்ளங்களுக்கும் இதழாசிரியர்கள் என்ற வகையில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இவ் நூலில் ஏதேனும் பிழைகள் காணப்படின் பெருமனத்தோடு ஏற்று பொறுத்துக் கொள்வதோடு உங்கள் விமர்சனங்களை நேர் மனத்தோடு தெரிவிக்கையில் அதனை ஏற்க மலர்க்குழு தயாராகவே உள்ளது.

தொடரும் காலங்களிலும் வணிக வனிதையானது மெருகூட்டிய அழகுடன் சிறப்பாக வெளியாகுவதற்கு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

*செல்வி.ஞா.நிலக்ஸ்சினி*
*செல்வி.லோ.மதுமிதா*
**இதழாசிரியர்கள்**
**வணிக மாணவர் மன்றம்**
**யாழ் இந்து மகளிர் கல்லூரி**

# வணிக மாணவர் ஒன்றியம் - 2017




**இருப்பவர்கள் (இ-வ) :**

திருமதி.பொ.சண்முகராசா, திருமதி.சு.கோவர்த்தனன், திருமதி.பா.கேதீஸ்வரன், திருமதி.சு.றொசான் தேவபாலன், திருமதி.சோ.பிரகதீஸ்வரன், திருமதி.க.தர்மகுணசிங்கம், திருமதி.ல.லிங்கேஸ்வரன், (பிரதி அதிபர்), செல்வி.யோ.சுலோஜனா (தலைவர்), திருமதி.மி.விமலநாதன் (அதிபர்), திருமதி.ஜ.நித்தியானந்தா (மன்றப் பொறுப்பாசிரியர்),திருமதி.க.நவரட்ணராஜா, திருமதி.க.பிரபாகரன், திருமதி.சி.திருமாறன், திருமதி.யூ.மனோகரன், திரு.இ.யோகேஸ்வரன்.

**நிற்பவர்கள் (இ-வ) :**

செல்வி.ஜெ.ஜெயானி, செல்வி.த.தமிழ்மதி, செல்வி.கு.ஜெகாசினி (பொருளாளர்), செல்வி.வே.சஞ்ஜிதா (உபசெயலாளர்), செல்வி.இ.பவிதாயினி, செல்வி.ஞா.நிகக்ஸ்சினி (இதழாசிரியர்), செல்வி.லோ.மதுமிதா (இதழாசிரியர்), செல்வி.வ.வினோஜா (உபபொருளாளர்), செல்வி.சி.பானுஷா, செல்வி.சி.டிலக்ஷி (செயலாளர்), செல்வி.ஜெ.அபிராமி (உபதலைவர்), செல்வி.சோ.கஸ்தூரி.

# வணிகப் பிரிவு மாணவிகள் - 2017A



வணிகப் பிரிவு மாணவிகள் - 2017 B



# வணிக மாணவர் மன்றம்

## நிர்வாக செயலணி - 2017

| | | |
|---|---|---|
| 01. காப்பாளர் | :- | திருமதி.மி.விமலநாதன் |
| 02. துணைக்காப்பாளர் | :- | திருமதி.ல.லிங்கேஸ்வரன் |
| 03. பகுதி தலைவர் | :- | திருமதி.ப.பாஸ்கரகுருக்கள் |
| 04. பொறுப்பாசிரியர் | :- | திருமதி.ஜ.நித்தியானந்தா |
| 05. தலைவர் | :- | செல்வி.யோ.சுலோஜனா |
| 06. உப தலைவர் | :- | செல்வி.ஜெ.அபிராமி |
| 07. செயலாளர் | :- | செல்வி.சி.டிலக்சி |
| 08. உபசெயலாளர் | :- | செல்வி.வே.சஞ்சிதா |
| 09. பொருளாளர் | :- | செல்வி.கு.ஜெகாசினி |
| 10. உப பொருளாளர் | :- | செல்வி.வ.வினோஜா |
| 11. இதழாசிரியர் | :- | செல்வி.ஞா.நிலக்ஸ்சினி |
| | :- | செல்வி.லோ.மதுமிதா |
| 12. ஆசிரியர் ஆலோசகர்கள் | :- | திருமதி.ர.லிங்கேஸ்வரன் |
| | :- | திருமதி.க.நவரட்ணராஜா |
| | :- | திருமதி.சி.திருமாறன் |
| | :- | திருமதி.சு.கோவர்த்தனன் |
| | :- | திருமதி.பா.கேதீஸ்வரன் |
| | :- | திரு.பொ.சண்முகராசா |
| | :- | திருமதி.ப.பாஸ்கரக்குருக்கள் |
| | :- | திருமதி.பி.கஜலக்சுமி |
| | :- | திருமதி.ந.கேதீசன் |
| | :- | திரு.இ.யோகேஸ்வரன் |
| 13. மலர்குழு | :- | செல்வி.ஜெ.ஜெயானி |
| | :- | செல்வி.சோ.கஸ்தூரி |
| | :- | செல்வி.இ.பவிதாஜினி |
| | :- | செல்வி.சி.பானுசா |
| | :- | செல்வி.த.தமிழ்மதி |
| | :- | செல்வி.ஞா.நிலக்ஸ்சினி |
| | :- | செல்வி.லோ.மதுமிதா |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | இலத்திரனியல் நிதி நுகர்வுகள் | 01 - 04 |
| 02. | வணிகங்களின் மொழி கணக்கீடு | 05 - 08 |
| 03. | வணிக வங்கிகளின் இலத்திரனியல் உத்திகள் அல்லது தந்திரோபாயங்கள் அறிமுகம் | 09 - 13 |
| 04. | சுதந்திர வர்த்தகமும் பாதுகாப்பு வாதமும் | 14 - 21 |
| 05. | வறுமைக்குள் இலங்கையின் பயணம் | 22 - 23 |
| 06. | நுகர்வோரின் உரிமைகளும், பொறுப்புக்களும் | 24 - 26 |
| 07. | கணக்கீட்டு எண்ணக்கருக்கள் | 27 - 30 |
| 08. | Quality Managemet | 31 - 36 |
| 09. | உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும் ஒரு பார்வை | 37 - 39 |
| 10. | உற்பத்தி அபிவிருத்தி | 40 - 43 |
| 11. | பொருளாதார வளர்ச்சி - ஓர் நோக்கு | 44 - 53 |
| 12. | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஒரு பார்வை | 54 - 61 |
| 13. | உலகமயமாக்கலும் இலத்திரனியல் வர்த்தகமும் | 62 - 65 |
| 14. | வணிகத்துக்கு வடித்த கவி | 66 |
| 15. | பொருட்கள் நுகர்வில் சுட்டுத்துண்டு காட்டும் தகவல் | 67 - 68 |
| 16. | இலங்கையின் பொதுவான கல்வித்தகவல்கள் | 69 - 70 |
| 17. | நுகர்வோரின் சுதந்திரம் குறைவடைந்து கொண்டிருக்கின்றதா? | 71 - 74 |
| 18. | Online Shopping | 75 |
| 19. | காசோலை | 76 - 79 |
| 20. | உலக முதியோர் வாழ்க்கைத்தர அளவீட்டுச் சுட்டெண் தொடர்பாக நேர்காணல் | 80 - 84 |

# 2015 RESULT

| *Name* | *Result* | *District Rank* |
|---|---|---|
| 1. N.Venuja | 3A | 05 |
| 2. T.Prathajini | 3A | 47 |
| 3. S.Thuvaraka | 2AB | 80 |
| 4. R.Ramjitha | 2AB | 86 |
| 5. G.Magitha | 2AB | 98 |
| 6. A.Sivamukunthini | 2AB | 130 |
| 7. U.Keerthana | A2B | 165 |

# *Electronic Funds Transfer System*
# இலத்திரனியல் நிதி நகர்வுகள்

M.நடராஜசுந்தரம்
ஓய்வு நிலை பேராசிரியர்

### *நிதி நகர்வு வகைகள்*

இலத்திரனியல் நிதி நகர்வு என்பது நிதி நகர்வுக்கு அனுமதியளிக்கும் அல்லது நிதி நகர்வு இடம்பெற்றுள்ளதை நிரூபிக்கும். காகிதத்துண்டின் அவசியமன்றி ஒரு கணக்கிலிருந்து இன்னோர் கணக்கிற்கு நிதி நகர்தல் என வரையறுக்கப்பட்டுள்ளது. இன்று உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த முறை வேகமாக வளர்ச்சியடைந்து பல வடிவங்களில் வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் இலத்திரனியல் பணம் (e – Cash) என்ற வடிவில் காணப்படுகின்றன. காகிதங்களை காட்டிலும், இலத்திரனியல் பதிவுகளை நகர்த்துவதன் மூலம், இந்த கணக்குகள் அதி விரைவாகவும், அதிக திருத்தமுடனும் மேற்கொள்ள முடிகின்றது. உலகளாவிய ரீதியில் பல்வேறு வகையான நிதி நகர்வு முறைகள் நடைமுறைக்கு வந்திருக்கின்றன. அவற்றுள் பிரபபலியமானவை.

(அ.) உலக ரீதியான வங்கிகளுக்கிடையிலான நிதித் தொலைத் தொடர்பு சமூகம். SWIFT (Society for World wide Inter – bank Financial Tele communications)

(ஆ.) தீர்வு இல்லாத தன்னியக்க கொடுப்பனவு முறை CHAPS (Clearing House Automated Payment System)

(இ.) வங்கியாளர் தன்னியக்க தீர்வக சேவைகள் (Bankers Automated Clearance Services)

**வெளிநாடுகளில் காணப்படும் நிதி நகர்வு முறைகள்**

**(அ.) SWIFT (Society for Worldwide Inter Bank Financial Tele Communications)**

உலக ரீதியாக வியாபாரத்திற்கும் பங்குதார வங்கிகளுக்கும் இலத்திரனியல் நிதி மாற்றம், கொடுப்பனவு செய்யும் வசதிகளை இது வழங்கிவருகின்றது. இதில் அங்கத்துவம் வகிக்கும்

வங்கிகளபெரும்பாலும் வட அமெரிக்க மேற்கு ஐரோப்பிய வங்கிகளாகும். இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, வங்கி அல்லாத நிறுவனங்களும் இதில் சேர்க்கப்பட்டு வழங்கும் சேவைகளை பயன்படுத்தி வருகின்றனர். நிதி முகாமையாளர்கள் (Fund Manage) அங்கீகரிக்கப்பட்ட மாற்று நிறுவனங்கள்: ஆவண இல்லங்கள் இதில் அங்கம் வகிக்கின்றன.

அங்கத்துவ பங்குதார வங்கிகளுக்கிடையில் மிக வேகமான முறையில் நிதிகளை மாற்றம் செய்வதற்கு பாதுகாப்பான முறையில் உதவி வருகின்றன. ஒரு நாளில் மட்டும்; SWIFT முறை மூலம் 1 3/4 மில்லியன் தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. சில குறிக்கப்பட்ட தகவல்களை அனுப்புவதற்கு ஏற்ற முறையில் நியம அமைப்பை (Standard Format) உருவாக்கி வைத்திருக்கின்றனர். இந்த தகவல்கள்

(1.) கொள்வனவு விற்பனை கட்டளைகள்
(2.) தீர்வக குறிப்புகள்
(3.) வெளிநாட்டு மாற்று உறுதிப்படுத்தல்
(4.) மீதிகளை அறிவித்தல்
(5.) ஆவணங்களின் கணக்கு விபரம்
(6.) வர்த்தகம் சம்பந்தமான உறுதிப்படுத்தல் என்ற வகையில் அமைகின்றன.

தகவல் தொழில் நுட்ப அபிவிருத்தியில் நியமங்களை உபயோகித்தல் முக்கிய அம்சமாகும். இதன் அடிப்படையில் SWIFT ல் வெளிநாட்டு நாணயங்களுக்கு நியம குறியீடுகள் வழங்கப்படுகின்றன. பவுண்ஸ்ரேலிங் நாணயத்தை STG எனவும், அமெரிக்க டொலர் நாணயத்தை USD எனவும் பயன்படுத்துகின்றனர். SMART காட்டுகள் பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் கட்டுப்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு தகவலுக்கு ஒரு (Unique) தனித்துவமான உள்ளீடு அல்லது வெளியீடு எண் வழங்கப்படும். அவை சரியான ஒழுங்கு முறையில் வழங்கப்படாதவிடத்து இந்த அமைப்பு தகவலை ஏற்றுக் கொள்ளாது. அத்துடன் தகவல் செல்லும் முனைகளையும் (terminals) மூடி விடுகின்றது.

1992ம் ஆண்டளவில் இந்த அமைப்பில் வேறு தகவல் பரிவர்த்தனை அம்சங்களும் சேர்த்து இணைக்கப்பட்டன. குறிப்பாக ஆவணங்களைப் பெறுதல் அல்லது வழங்குதல் முறைகளும் சேர்க்கப்பட்டன. வருடாந்தம் 35% அதிகரிப்பைக் காணமுடிகிறது. அதிகரித்துவரும் முதலீட்டு முறைகளை செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கு இரு வழித் தகவல் அமைப்பை உருவாக்க வேண்டிய நிலை உருவாகி வருகின்றது. இப்பொழுது இதன் தரத்தை உயர்த்துவதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதனை SWIFT II என அழைக்கின்றனர். இன்று பல வகையான வங்கிகளும் இந்த அமைப்பில் இணைந்துள்ளன. இதன் விளைவாகத் தபால் மூலம் மாற்றல் (Mail transfer) தந்தி மூலம் மாற்றல் (Telegrams tranfer) என்பன குறைவடைந்து செல்ல SWIFT தனது தனித்துவமான கொடுக்கல் முறையைப் பயன்படுத்துகின்றது.

- ஒரு (SWIFT Message) சுவிற் தகவல் ஒரு தபால் மூலம் மாற்றங்களுக்கு ஆன செலவுக்கு சமமாக காணப்படும். இதனை அனுப்பும் இரு வங்கிகளும் இந்த அமைப்பில் அங்கத்துவம் பெற்றிருக்கும் ஒரு சுவிற் தகவல் என்பது சர்வதேச நாணய மாற்றல் என கூறப்படுகின்றது. (International Money Transfer (IMT))
- இதே போல முன்னுரிமை சுவிற் தகவல் (Priority Swift Message) என்பது ஒரு தந்தி மூலம் மாற்றல் என்பதற்கான செலவுக்கு சமமாகின்றது. இதனை வேக சர்வதேச பணமாற்றல் (Express international Money Transfer (EMT)) என அழைக்கப்படுகின்றது. இந்த அமைப்பில் அங்கத்துவ வங்கிகளாக இருந்தால் மாத்திரமே மேற் காட்டிய முறையில் அந்த தகவல்கள் அனுப்பப்படும். அங்கத்துவம் இல்லாத வங்கிகள் சாதாரண தபால் மூலம் மாற்றல், தந்தி மூலம் மாற்றல் என்பனவற்றையே பயன்படுத்துகின்றன.

**இலத்திரனியல் பணம் ~ உலகளாவிய வங்கியியலுக்கு ஒரு அச்சுறுத்தல்**

E- money

**2000ம் ஆண்டளவில் நுகர்வோர்கள், வர்த்தகர்கள் அரசாங்கங்கள், கல்வி நிறுவனங்கள் உலகளாவிய ரீதியில் ஏறத்தாழ 9000 மில்லியன் கொடுக்கல் வாங்கல்கள் இலத்திரனியல் பணம் ஊடாக செயல்படுத்துவர். அசோசியேற் நடத்திய ஆய்வின்படி உலகில் அதிபலம் வாய்ந்த நிறுவனங்களுக்கு இந்தப் பணம் பெரும் அச்சுறுத்தலாக காணப்படும். குறிப்பாக வங்கியியல் கைத்தொழிலும் சில்லறை வியாபாரங்களும் பெரும் அளவு பாதிப்பை ஏற்படுத்தும். வங்கிகள் கொடுக்கல் வாங்கல்கள் முறையில் வேகமான கொடுக்கல் வாங்கல்கள் மாற்றங்களை மேற்கொள்ளுமாயின் இந்த மாற்றங்களும் ஈடு கொடுக்கக் கூடியதாக இருக்கும். 2056ம் ஆணடளவில் கொடுக்கல் வாங்கல்கள் ஏறத்தாழ 30,000** Million **ஆக இருக்கும். ஆகவே இந்த ஆய்வின் படி** "Banks must act quickly to leverage their position in payment service".

**இவர்களுடைய அறிக்கையின்படி பணத்துக்கான ஒரு பரந்த வரைவிலக்கணம் கொடுக்கப்படுகின்றது. ஏனையவற்றுடன்** Secured Debit Cards, Phone Cardsd, Electronic Cheques, ATM Transactions, Point of Sale Loans and automate tolls **யாவும் இலத்திரனியல் பணத்துள் உள்ளடக்கப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது 1995ல் 563 பில்லியன் கொடுக்கல் வாங்கல்கள் இலத்திரனியல் அற்ற முறையிலும்** (Non – E cash) **1000 மில்லியன் கொடுக்கல் வாங்கல்கள் இலத்திரனியல் முறையிலும்** (19%) **நடைபெற்று இருக்கின்றது. பல்வேறு தடங்கல்கள் காணப்பட்ட பொழுதிலும் விரைவில் இலத்திரனியல் வர்த்தகம்** (Electronic Commerce) **உருவாகுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. இதன் விளைவாக குறைந்த செலவுடைய பொருட்கள், சேவைகள் உலக வர்த்தக கொடுக்கல் வாங்கல்களுக்கு வர இருக்கின்றன. இதனால் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதனை ஈடுசெய்யும் வகையில் நிதிச் சாதனங்களை வழங்கி வந்த பெரும் நிறுவனங்கள் மாற்று வழிகளை ஆராய்வதில் அக்கறை கொண்டிருக்கின்றன.**

# வணிகங்களின் மொழி கணக்கீடு

செல்வி.ரா.லதாங்கி
தரம்: 11A

கணக்கீடு என்பது "ஒரு தகவல் முறைமை" எனக்கூறலாம். ஏனெனில் அதனைப்பயன்படுத்தி வணிக நிறுவனங்களில் அக்கறையுள்ள கட்சியினர் தமக்கேற்ற பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்கின்றனர்.

வணிக நிறுவனங்களின் கணக்கீட்டுத்தகவல்களைப் பயன்படுத்துவோராக முகாமையாளர், உரிமையாளர், எதிர்காலமுதலீட்டாளர், கடன்கொடுத்தோர், வங்கி, அரசு போன்றோர் காணப்படுகின்றனர்.

வணிக நிறுவனங்களாக தனியாள் வணிக அமைப்பு, பங்குடமை, கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, கூட்டுறவு, சங்கவகையான அமைப்புகள், அரசதிணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள் போன்ற இலாபநோக்குள்ள, இலாபநோக்கற்ற அமைப்புகளைக்குறிக்கும். இந்த அமைப்புகள் தன்மீது அக்கறையுள்ள கட்சியினருக்கு அதன் செயற்பாடுகள் முன்னேற்றம், நிதிநிலைமை பற்றிய தகவல்களை வழங்க வேண்டியுள்ளது. இத்தகைய தகவல் வழங்கும் செயற்பாட்டிற்காக கணக்கீட்டினை ஒரு கருவியாக அவை பயன்படுத்துகின்றன.

கணக்கீடு ஒரு செயற்பாட்டுமுறை என்ற வகையில் செயற்படுவதால் அது வணிகங்களின் மொழி என பரவலாக அழைக்கப்படுகின்றது.

கணக்கீட்டுச் செயன்முறையின் அடிப்படையில் வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் மூல ஆவணங்களின் துணையுடன் முதலில் முதன்மை ஏடுகளில் பதியப்பட்டு பின்னர் அவை பேரேட்டுக் கணக்குகளுக்கு பூரண இரட்டைப்பதிவுத் தத்துவத்திற்கமைய மாற்றப்படும். அப்பேரேட்டுக்கணக்குகளைச் சமப்படுத்திப் பெறப்படும் மீதிகளை உள்ளடக்கி பரீட்சைமீதி ஒன்று தயாரிக்கப்படும். குறிப்பிட்ட நிதியாண்டு முடிவடைந்த பின் மேற்கொள்ளவேண்டிய செம்மையாக்கல்கள், நிகழ்வுகளைச்சீராக்கம் செய்த பின் வணிக நிறுவனங்களால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும்.

## தனியாள் உரிமை வணிக நிறுவனமொன்றின் நிதிக்கூற்றுக்கள்

அநேக வணிகங்களின் நோக்கமானது இலாபத்தை உழைப்பதன் மூலம் தமது வணிக நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதாகும். இதனால், செயற்பாட்டுப் பெறுபேறாக உழைக்கப்பட்ட இலாபம் போதியளவில் உள்ளதா என்பதை அறிந்து கொள்வது மிகமுக்கியமானதாகும். அதேவேளை வணிகத்தின் சொத்துக்கள், உரிமை மற்றும் பொறுப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் நிதி நிலைமை பற்றி அறிந்து கொள்வதும் அவசியமானதாகும்.

நிதிக்கூற்றுக்கள் மூலம் செயற்பாட்டுப் பெறுபேறு மற்றும் நிதி நிலைமையை அறிந்து கொள்ளலாம். வணிகம் பற்றிய எதிர்காலத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இவ்வாறான தகவல்கள் அவசியமானவையாகும்.

நிதியாண்டொன்றில் வணிகத்தினால் உழைக்கப்பட்ட செயற்பாட்டுப் பெறுபேறுகளை உறுதி செய்வதற்கும் நிதி நிலைமை பற்றி அறிந்து கொள்வதற்குமாகத் தயாரிக்கப்படும் கணக்கு அறிக்கைகள் "நிதிக்கூற்றுக்கள்" என அழைக்கப்படும். தனியுடமை வணிகமொன்றில் நிதியாண்டு ஒன்றிற்காகத் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள் பின்வரும் இரு பிரதான கூறுகளைக் கொண்டதாக அமையும்.

1. இலாப நட்டக்கூற்று / வருமானக் கூற்று
2. நிதி நிலைமைக்கூற்று / ஐந்தொகை

## இலாபநட்டக்கூற்று / வருமானக்கூற்று

வணிகமொன்றினால் குறித்த நிதியாண்டில் உழைக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிட்டு, முன் வைப்பதற்காகத் தயாரிக்கப்படும் கணக்கறிக்கையே இலாபநட்டக்கூற்று என அழைக்கப்படும்.

வணிக நிறுவனத்தினால் உழைக்கப்பட்ட செயற்பாட்டுப் பெறுபேற்றைக் கணிப்பீடு செய்வதற்காகப் பின்வரும் இருபடிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. மொத்த இலாபத்தைக் கணித்தல்
2. தேறியலாபத்தைக் கணித்தல்

மொத்த இலாபம் = விற்பனை - விற்பனைக்கிரயம்

தேறிய இலாபம் = மொத்தஇலாபம் + ஏனைய வருமானங்கள் - செயற்பாட்டுச் செலவுகள்

## நிதிநிலைமைக்கூற்று

சொத்துக்கள், உரிமை மற்றும் பொறுப்புக்கணக்குகளின் மீதிகளை உட்படுத்தி வணிகத்தின் நிதி நிலைமையைக் காட்டுவதற்காக நிறுவனத்தால் குறித்தவொரு தினத்தில் தயாரிக்கப்படுகின்ற அறிக்கை நிதி நிலைமைக் கூற்று எனப்படும். இக்கூற்றின் மூலம் வணிகத்தின் நிதிசார் ஆற்றல் மற்றும் நிதிப்பலம் என்பன வெளிப்படுத்தப்படும்.

நிதி நிலைமைக்கூற்றொன்றின் அடிப்படைக்கூறுகள்

சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள்

## செம்மையாக்கல் பதிவுகள்

நிதியாண்டுக்குரிய சகல நிதிசார் கொடுக்கல் வாங்கல்களும் கணக்குகளில் பதியப்படவேண்டும். எனினும் ஒரு சில கொடுக்கல் வாங்கல்கள் கணக்கேடுகளில்

பதியப்படாமலும் காணப்பட முடியும். சில திருத்தங்கள் செய்யப்படாமலும் இருக்கலாம். எனவே பரீட்சைமீதியில் உள்ள கணக்குகளின் மீதிகளைச் செம்மையாக்கல் செய்யவேண்டிய தேவையும் உள்ளது.

நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தக்கூடிய வகையில் சரியான பெறுமதிகள் கிடைக்கத்தக்கவாறு மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களிற்காக கணக்குகளில் செய்யப்படுகின்ற சீராக்கங்கள் செம்மையாக்கல் பதிவுகள் எனப்படுகின்றன.

சில செம்மையாக்கல் பதிவுகள்

1. அட்டுறுச் செலவுகள் (நிலுவைச் செலவுகள்)
2. அட்டுறு வருமானங்கள் (வருமதி வருமானங்கள்)
3. அறவிடமுடியாக்கடன்
4. பெறுமானத்தேய்வு

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது செம்மையாக்கல் பதிவுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் பின்வரும் அனுகூலங்களைப் பெறமுடியும்.

1. பேரேட்டுக்கணக்குகளின் பெறுமானங்களை நிதியாண்டுக்காலத்தின் இறுதித்தினத்திற்கு உரியதாக இற்றைப்படுத்தல்.

2. நிதியாண்டுக்காலத்தில் உழைத்த இலாபம் அல்லது நட்டத்தை (செயற்பாட்டுப் பெறுபேறுகள்) சரியாக கணிப்பிடக்கூடியதாயிருத்தல்.

## இலாபநோக்கமற்ற நிறுவனங்களின் நிதிக்கூற்றுகள்

பெரும்பாலான வணிக நிறுவனங்கள் இலாபம் உழைப்பதைத் தமது பிரதான நோக்கமாகக் கொண்டு இயங்கி வந்தாலும் வேறுநோக்கங்களை அடைந்து கொள்வதற்காகச் செயற்படுகிற அமைப்புகளும் காணப்படுகின்றன. சமூக நலன்புரிச் செயற்பாடுகளை மேற்கொள்வது அத்தகைய நோக்கங்களில் ஒன்றாகும். அத்தகைய அமைப்புகளாக விளையாட்டுக்கழகங்கள், இளைஞர் அமைப்புக்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மரணநலன்புரிச்சங்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இத்தகைய அமைப்புக்கள் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் நிதியினைத் திரட்டிக் கொள்கின்றன. உதாரணம்: அங்கத்தவர் கட்டணம் சேர்த்தல், கொடிவிற்பனை, இசை நிகழ்ச்சி ரிக்கற் விற்பனை, சிற்றுண்டிச்சாலை நடத்துதல், கண்காட்சி நடத்தல், நன்கொடைகள் பெறுதல்.

இவ்வாறு நிதி திரட்டுவதால் இலாபநோக்கற்ற அமைப்பிலும் நிதிசார் தகவல்களை ஒழுங்கான முறையில் பதிவு செய்து வைத்தல் அவசியமானதாகும்.

## இலாபநோக்கமற்ற அமைப்புகள் தயாரிக்கும் கணக்குகள் அல்லது நிதிக்கூற்றுகள்

1. பெறுவனவு கொடுப்பனவு கணக்கு அல்லது கொள்ளல் கொடுத்தல் கணக்கு

**2. வருமானக்கூற்று அல்லது வருமானச்செலவுக்கணக்கு**

இலாபநோக்கமற்ற அமைப்புக்களில் ஏதேனும் காலப்பிரிவொன்றினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் செலவு செய்யப்பட்ட சகல காசுக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பதிவுகளின் சாரம்சமே பெறுவனவு கொடுப்பனவு கணக்கு அல்லது கொள்ளல் கொடுத்தல் கணக்கு ஆகும். இதனைத் தயாரிப்பதன் மூலம் இலாபநோக்கமற்ற அமைப்புகள் குறிப்பிட்ட கால முடிவில் தம்மிடம் உள்ள காசுமீதியை அறிந்து கொள்ளலாம். இது இலாபநோக்கமுள்ள நிறுவனங்கள் தயாரிக்கும் காசுக்கணக்கை ஒத்ததாக இருக்கும்.

இலாப நோக்கற்ற அமைப்புக்கள் குறித்த காலப்பகுதியொன்றில் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளின் பெறுபேற்றினைக் கணிப்பீடு செய்வதற்காகத் தயாரிக்கப்படுகின்ற கூற்று வருமானக்கூற்று / வருமானச் செலவுக்கணக்கு எனப்படுகின்றது. இதனைத்தயாரிப்பதன் மூலம் இலாபநோக்கற்ற அமைப்பொன்றின் ஏதாவதொரு காலப்பிரிவிற்குரிய வருமான மிகை அல்லது வருமானக்குறைவினை கணிப்பீடு செய்து கொள்ளலாம்

இவ்வாறு பல்வேறு வணிக அமைப்புகளும் தம்மிடம் அக்கறையாக உள்ள தரப்பினருக்குத் தேவையான தகவல்களை வழங்க கணக்கீடானது வணிகங்களின் மொழியாகத் தொழிற்படுவதை நாம் காணலாம்.

**உசாத்துணை நூல்கள்**

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

நன்றி

# தோல்வி என்பது முடிவல்ல முயற்சியை நிறுத்தாதவரை!

# வணிக வங்கிகளின் இலத்திரனியல் உத்திகள் அல்லது தந்திரோபாயங்கள் அறிமுகம்

செல்வி.பா.கஜபாலினி
2017(A)வர்த்தகப்பிரிவு

தற்கால உலகில் வங்கிகளின் எண்ணிக்கையானது பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் இவற்றுக்கான போட்டிகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. தனியார் வங்கிகளான Seylan bank, Commercial bank, Sampath bank, HNB, Union bank போன்ற வங்கிகள் காணப்படுகின்றன.

இவற்றுக்கு மேலாக 13 உள்நாட்டு வணிக வங்கிகளும் 12 வெளிநாட்டு வணிக வங்கிகளும் இலங்கையில் தொழிற்பாட்டிலுள்ளன. எல்லா வங்கிகளும் அதிக வாடிக்கையாளரைக் கவர்ந்து அதிக இலாபம் உழைப்பதற்காக தமது செயற்பாட்டு ரீதியான பின்வரும் தந்திரோபாயங்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன.

- கணனி மயமாக்கல்

இன்றைய உலகில் எல்லா வங்கிகளும் தமது நடவடிக்கைகள் எல்லாவற்றையும் கணனி மயமாக்கிவிட்டன. இதற்கு முன்னோடியாக காந்த மையினால் இனம் காணப்படும் Macro காசோலைகளும் அறிமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

பணத்தை வைப்புச் செய்யவும், எடுக்கவும் வசதியாக தன்னியக்க ரெலர் (Automatic teller) முறையை விரைவாகத் தீர்த்து வைக்க தன்னியக்க தீர்ப்பனவு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. கணனி மயமாக்கிய வங்கிகளின் நடவடிக்கைகள் மக்களுக்கு விரைவாகத் தகவல்கள் கிடைக்கக் கூடியவாறு செய்வதனால் வங்கித்துறையின் முக்கிய அபிவிருத்தியாக அமைகிறது.

- வங்கிக் கிளைகளுக்கு இடையிலான வலைப்பின்னல்

வங்கிகள் தமது சேவையினை இலகுபடுத்துவதற்காக பல முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. ஒரு கிளையில் நடைமுறைக் கணக்கையோ/சேமிப்புக் கணக்கையோ வைத்திருக்கும் ஒருவர் அக் கணக்கினைப் பயன்படுத்தி அந்த வங்கியின் சகல கிளைகளிலும் வரையறுக்கப்பட்ட வங்கியின் சேவையினைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதனை எந்தவொரு வங்கியிலும் பின்வரும் பணிகளினை பெறமுடியும்.

01. காசோலையை வைப்பிடல்
02. பணத்தை வைப்பிடல்
03. பணத்தை மீட்புச் செய்தல்
04. கணக்கு மீதியினை அறிதல்

இந்த சேவையினை முதன் முதலில் Sampath அறிமுகப்படுத்தியது. பின்னர் எல்லா வங்கிகளும் இச்சேவையினை ஆரம்பித்துள்ளன.

✍ தொலைபேசி வங்கிச் சேவை

இச் சேவை மூலம் வங்கிகளுக்குச் செல்லாமல் தொலைபேசி மூலம் பல வங்கிகளின் சேவையினைப் பெற முடியும். இதனால் வாடிக்கையாளர்களின் நேர விரயத்தைக் குறைப்பதற்காக வங்கிகள் எடுத்த நடவடிக்கையே இதுவாகும். சில வங்கிகள் தமது வாடிக்கையாளருக்குத் "தனிப்பட்ட அடையாள இலக்கம்" என்பதனை வழங்கும். இந்த இரகசிய இலக்கத்தினால் வாடிக்கையாளரின் பாதுகாப்பும், தனித்துவமும் பேணப்படும்.

தொலைபேசி வங்கிச் சேவை மூலம் பின்வரும் பணிகளை மேற்கொள்ள முடியும். இதற்கு முதலில் தொலைபேசியில் பதிவினை மேற்கொள்ளவேண்டும்.

01. கணக்கு மீதியை அறிய முடிதல்
02. காசோலை பற்றிய விபரங்களை அறிய முடிதல்.
03. வங்கிக் கூற்றினைப் பெறமுடிதல்.
04. மின்சாரம், தொலைபேசி ஆகிய கட்டணங்களை செலுத்த முடிதல்.

✍ நடமாடும் சேவை

வங்கிகள் தமது கிளைகள் எந்த எந்த இடங்களில் உள்ளது என்பதைக் கிராமப்புற மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சேவை இதுவாகும். கிராமப்புறங்களில் உள்ள மக்கள் வங்கிச் சேவைக்காக நகர்ப்புறங்களை நோக்கி வருவதனை தவிர்ப்பதற்காக வங்கிகளின் வாகனங்களிலேயே நகர்ந்து இச்சேவையினை வழங்குகின்றன. இதன் நோக்கங்களாக பின்வருவன காணப்படும்.

01. பெருமளவான வாடிக்கையாளரை, கவருதல்.
02. கிராமப்புற மக்களிடையே வங்கிச் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல்.
03. கிராமப்புற மக்களிடையே வைப்புக்களை பெறுதல்.

✍ முகவர் வங்கிச் சேவை

கிராமப்புற மக்கள் நீண்ட தூரம் அலைந்து வந்து வங்கிச் சேவைகள் பெறும் நிர்ப்பந்தத்தைக் குறைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதே இந்தச் சேவை ஆகும். இதன்படி வங்கிகள் நாடுபூராகவும் தமது முகவர்களை அமர்த்தியுள்ளன. இதன் காரணமாக சிறு தொகைக் கடன்களை முகவர்களிடமே பெற்றுக் கொள்ளமுடியும் இதற்கு வசதியாக வங்கிகளும் முகவர்களுக்கு நிதி வழங்கும் முகவர் வங்கிச் சேவையின்படி ஒவ்வொரு முகவருக்கும் வங்கிகள் ஒரு தொகைப்பணத்தைக் கடனாக வழங்க அதனைப் பெற்ற முகவர்கள் அந்நிதியைப் பயன்படுத்தி கிராமப்புற மக்களுக்கு கடன் வழங்குவர்.

✍ வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை

இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறையென கொள்ளப்படும் இந்த நடைமுறையினை இலங்கையின் வர்த்தக வங்கிகள் அறிமுகப்படுத்தியுள்ளன. இதற்கென இலங்கை மத்திய வங்கியின் தன்னியக்க தீர்ப்பனவு நிலையமும், இலங்கை வங்கியாளர் சங்கத்தின் தொழில்நுட்ப பிரிவும் இணைந்துள்ளன. வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் தமது ஒழுங்கான கொடுப்பனவுகளுக்குக் காசோலையை வரையாமல் கணினித்தட்டுக்களைப் பயன்படுத்தும் முறை இதுவாகும். இதன் புதிய நடைமுறையினால் காசோலைகளை எழுதும் சிரமமும், செலவும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இதன் நோக்கங்கள் பின்வருவனவாகும்.

01. வங்கி நடவடிக்கைகளில் காகித வேலைகளைக் குறைத்துக் கொள்ளல்.
02. தீர்ப்பனவுகளை விரைவாகவும், தவறு இன்றியும் மேற்கொள்ளல் என்பனவாகும்.

காசோலை எழுதப்படத் தேவையில்லாத கொடுப்பனவுகளாக:
01. தொலைபேசி, மின்சார கொடுப்பனவு
02. காப்புறுதிக் கட்டணம்
03. ஊழியர்களின் கொடுப்பனவு என்பன அமைகிறது.

இவ்வாறு கணினித் தட்டுக்கள் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் வங்கிகளின் நடவடிக்கைகள் வாடிக்கையாளருக்குப் பெரிதும் உதவுவதாக அமைகின்றன. இதன் மூலம் நிறுவனங்கள் காசோலை மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் போது ஏற்படும் பிரச்சினைகள் வெகுவாகக் குறைந்துள்ளன.

✍ அந்நியச் செலாவணி வங்கி அலகு

வெளிநாட்டு செலாவணிகளில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ள வசதியாக எமது நாட்டின் வர்த்தக வங்கிகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும். வங்கித் தொழிற்பிரிப்பே இதுவாகும். அந்நியச் செலாவணிகளில் அவற்றை மீட்டுக் கொள்ளவும் இப்பிரிவு உதவும். இங்கு சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளரும், மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்றவர்களும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம்.

01. நாட்டின் வதியாதோர் செலாவணிக் கணக்கு (NRFC)
02. நாட்டின் வதிவோர் செலாவணிக் கணக்கு (RFC)
03. தேசிய இனத்தவரல்லாத வதிவோர் செலாவணிக் கணக்கு (RNNFC)

மூன்று கணக்குகள் மூலமாகவும் அந்நியச் செலாவணி வங்கி அலகுக்கு வெளிநாட்டுச் செலாவணி பெற்றுக் கொள்ளப்படும். இதனைப் பயன்படுத்தி அந்நிய செலாவணிகளில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்வதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உதவும் போக்கை வர்த்தக வங்கிகள் கொண்டுள்ளன.

✎ கடனட்டைகள்

வர்த்தக வங்கிகள் தமது வாடிக்கையாளருக்கு கடனடிப்படையில் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ள வசதியாக அறிமுகப்படுத்தப்பட்டதே கடனட்டை ஆகும். பணத்திற்குப் பதிலாக இக் கடனட்டைகளை பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட கடைகள், எரிபொருள் நிரப்பு நிலையம், வைத்தியசாலை ஆகியவற்றில் பொருட்களையும் சேவைகளையும் கடனுக்குப் பெறமுடியும். அவற்றுக்கான கொடுப்பனவை வர்த்தக வங்கிகள் செலுத்தும். இதே போல் வெளிநாடுகளில் பொருட்கள் சேவைகளை வாங்க சர்வதேச கடனட்டைகளும் அறிமுகப்படுத்தலுக்கு வந்துள்ளன. எமது நாட்டின் பல்வேறு வர்த்தக வங்கிகளும் அறிமுகப்படுத்தியிருக்கும் கடன் அட்டைகளினால் வாடிக்கையாளருக்கும் வியாபாரிக்கும் பல நன்மைகள் கிடைக்கும். எமது நாட்டிலே பயன்பாட்டிலுள்ள அட்டைகள் வருமாறு.

1. பொங் கடன் அட்டை
2. மக்கள் கடன் அட்டை
3. மாஸ்ரர் கடன் அட்டை

✎ துணை நிறுவன உருவாக்கல்

வர்த்தக வங்கிகள் தமக்கிடையே ஏற்பட்டுள்ள போட்டியைச் சமாளித்து இலாபத்தினை அதிகரிக்கும் நோக்குடன் வெவ்வேறு வங்கிச் சேவைகளுக்கு அப்பால் சேவையாற்றும் நிறுவனங்களாக இருக்கும்.

1. இலங்கை வங்கி
2. இலங்கை வியாபாரிகள் வங்கி (Limited)
3. சீபாங் நம்பிக்கை அலகு நிறுவனம்
4. சீபாங் பயண முகவர் நிறுவனம்

போன்ற பல்வேறு நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் மூலம் வேறுபட்ட சேவையை ஆற்றுவதுடன் அதிக இலாபத்தையும் உழைத்துக் கொள்ள முடியும். இது போலவே வர்த்தக வங்கிகளுக்கும் தமக்கும் துணை நிறுவனங்கள் அமைக்கத் தொடங்கியுள்ளன.

✎ இலத்திரனியல் பணம்

இணையம் ஊடாக உலகளாவிய வலைப்பின்னல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வலைப்பின்னலைப் பயன்படுத்தி மின்னியல் வாணிபத்திற்கு வகை செய்தது. இதன் மூலமாக பணக் கொடுப்பனவுக்கு இலத்திரனியல் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் மேற்கொள்ளப்படுகின்ற இலத்திரனியல் பணக் கொடுப்பனவு தாமதிக்காது கொடுக்கல் வாங்கலுக்கு உதவும் என்பதனால் மேலும் வர்த்தக நடவடிக்கைகள் விருத்தியடைய முடியுமென உறுதி கூறமுடியும்.

இலங்கையின் வர்த்தக வங்கிகளின் அபிவிருத்தியில் புதிய உத்திகளை/ தந்திரோபாயங்களை பயன்படுத்துவது என்பது முக்கியம் பெறுகின்றன. வங்கிகள் பயன்படுத்தும் தந்திரோபாயங்களுக்கும் அவற்றின் இலாபம் உழைப்பதற்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகின்றது. இதனடிப்படையிலே அரச வர்த்தக வங்கிகளும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகளும் புதிய புதிய தந்திரோபாயங்களைப் பின்பற்றி வருகின்றன. எனவே பன்முகப்படுத்தப்பட்ட உத்திகளை வர்த்தக வங்கிகளும் வெளிநாட்டு வங்கிகளும் பின்பற்றி வருகின்றன. எனவே பன்முகப்படுத்தப்பட்ட உத்திகள் வர்த்தக வங்கிகளின் வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பது புலனாகும்.

**உசாத்துணை நூல்கள்**

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

Education is the
Most Powerful weapon
Which you can use to
change the world

**[Nelson Rolihlaha
Mandela]**

## மலர்க்குழு



# சுதந்திர வர்த்தகமும் பாதுகாப்பு வாதமும்

*Mr.S.Jeyakumar*
*[B.A(Hons) Econ Spl, Main Econ PGDE]*
*Teacher*
*J/Vayavilan. Central College*

**அறிமுகம்**

நாடொன்று உலகின் ஏனைய நாடுகளோடு சட்டரீதியாக பொருட்களையும் சேவைகளையும் பரிமாற்றிக் கொள்ளும் செயற்பாட்டினை சர்வதேச வர்த்தகம் என்பர். இதில் இரண்டு பிரிவுகள் உண்டு.

1. ஏற்றுமதி வர்த்தகம்

   நாடொன்று ஏனைய நாடுகளுக்கு சட்டரீதியான முறையில் பொருட்கள் சேவைகளை விற்பனை செய்தல் ஏற்றுமதி வர்த்தகமாகும்.

2. இறக்குமதி வர்த்தகம்

   நாடொன்று ஏனைய நாடுகளிலிருந்து சட்டரீதியான முறையில் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்தல் இறக்குமதி வர்த்தகமாகும்.

நாடுகளிடையே பொருட்கள், சேவைகள், காரணிகள் எவ்விதமான கட்டுப்பாடுகளும் இன்றி அசைவதனை சுதந்திர வர்த்தகம் என்பர். இவ்வாறு உள்நாட்டு சந்தையினுள் வெளிநாட்டுப்பண்டங்கள் சுதந்திரமான முறையில் உட்பிரவேசிக்கும் போது உள்நாட்டு உற்பத்திகளுக்கு பாதிப்பு உண்டாகும்.

**சுதந்திர வர்த்தகத்தின் அனுகூலங்கள்**

1. சிறப்புதேர்ச்சியடைந்த துறையில் உற்பத்தியை மேற்கொள்ளும் போது விளைதிறன் அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும். இதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும்.

2. உற்பத்தி இயலளவிலும் பார்க்க உயர்ந்தளவில் நுகரக்கூடிய ஆற்றல் கிடைக்கும்.

3. சர்வதேச போட்டித்தன்மை மற்றும் குறைந்த செலவில் இறக்குமதி செய்யக்கூடியதாக இருப்பதனால் பணவீக்க அழுத்தங்கள் குறைவாகக் காணப்படும்.

4. தொழில்நுட்பம் வளர்ச்சியடையும்.

5. உற்பத்தி காரணிகளின் பயன்பாடு அதிகரிக்கும்.

6. புத்தாக்கங்கள் ஊக்குவிக்கப்படும்.

7. ஏற்றுமதி நோக்கிய துறையிலுள்ளோர் உயர்ந்த வருமானத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

8. நாட்டினுள் உற்பத்தி செய்ய முடியாத பண்டங்களை நுகருவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

9. நுகர்வோர் குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும்.


10. ஏற்றுமதித்துறை விரிவாக்கம் வெளிநாட்டு முதலீடுகளின் உட்பாய்ச்சலை அதிகரிக்கச் செய்யும்.

☞ **சுதந்திர வர்த்தகத்தின் பிரதி கூலங்கள்**

1. வளர்ந்து வரும் நாடுகளின் இளந்தொழில்கள் பாதிக்கப்படும்.
2. குவித்தல் இடம்பெறுவதனால் உள்நாட்டு தொழில்கள் பாதிக்கப்படும்.
3. உள்நாட்டு வளங்கள் பிறநாட்டவர்களினால் சுரண்டும் நிலை காணப்படும்.
4. வருமான சமமின்மை அதிகரிக்கும்.
5. வேலையின்மை அதிகரிக்கும்.
6. தன்னிறைவு பொருளாதாரம் சிதைவடையும்.
7. ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதிச் செலவுகள் உயர்வாக இருக்கும் போது மொத்த கேள்வியை குறைத்து பொருளாதார மாற்றத்தினை தோற்றுவிக்கும்.

☞ **இறக்குமதியும் வர்த்தக நலனும்.**

| விடயம் | நுகர்வோன் மிகை | உற்பத்தியாளன் மிகை | மொத்த மிகை |
|---|---|---|---|
| இறக்குமதிக்கு முன் | AC | A+B+C | |
| இறக்குமதிக்கு பின் | A+B+G+H | C | A+B+G+H+C |
| மாற்றம் | B + G + H⇧ | B⇩ | G+H⇧ |




Sh - உள்நாட்டு நிரம்பல் கோடு

Dh - உள்நாட்டு கேள்விக்கோடு

Sm - இறக்குமதி நிரம்பல் கோடு

உள்நாட்டு உற்பத்தி பொருட்களின் சந்தை விலையை விட இறக்குமதி பொருளின் விலை ($P_2$) குறைவாக இருப்பதனால் பின்வரும் விளைவுகள் ஏற்படும்.

1. உள்நாட்டுக் கேள்வித் தொகை அதிகரிக்கும் ($Q_1$ இலிருந்து $Q_3$)
2. உள்நாட்டு நிரம்பல் தொகை குறையும் ($Q_1$ இலிருந்து $Q_2$)
3. நுகர்வோன் மிகை அதிகரிக்கும் (B+G+H)
4. உற்பத்தியாளன் மிகை குறையும் (B)
5. பொருளாதார மிகை அதிகரிக்கும் (G+H)

இறக்குமதியினால் பொருளாதார மிகையில் ஏற்படும் அதிகரிப்பு வர்த்தக நலனாக கருதப்படும்.

☞ **வர்த்தக பாதுகாப்பு வாதம் (Protectionism)**

சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற ஒரு நாடு தன் உள்நாட்டு தொழில்களை வெளிநாட்டு போட்டி உற்பத்தியாளர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வர்த்தகப் பாதுகாப்பு வாதம் எனப்படும்.

☞ வர்த்தகப் பாதுகாப்பு வாத செயற்பாடுகள் வருமாறு -

1. தீர்வை தடைகள் (Tariff Barriers)
   - ஏற்றுமதி தீர்வைகள்
   - இறக்குமதி தீர்வைகள்
2. தீர்வையல்லாத தடைகள் (Non Traiff Barriers)

- கோட்டா முறை (அனுமதி பங்கு)
- இறக்குமதி தடைகள்
- ஏற்றுமதி இறக்குமதி அனுமதிப்பத்திர முறை
- குவித்தல்
- செலாவணிக் கட்டுப்பாடுகள்
- வர்த்தக ஒப்பந்தங்களை செயற்படுத்தல்
- உற்பத்தி தரங்களை வெளியிடல்
- பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு
- சுய ஏற்றுமதி கட்டுப்பாடு
- உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்குதல்.
- கார்ட்டல்களை அமைத்தல்.

வர்த்தகப் பாதுகாப்பு வாதத்தினை பின்வரும் இரண்டு முறையில் அளவீடு செய்யலாம்.

1. பெயரளவு பாதுகாப்பு வீதம்
2. பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம்

**பெயரளவு பாதுகாப்பு வீதம் (Nominal Rate of protection)**

இறக்குமதி தாராள வர்த்தகத்தின் மீது தீர்வையினை அறவிடும் போது இறக்குமதிக்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் சதவீதத்தை பெயரளவு பாதுகாப்பு வீதம் என்பர்.

$$NRP = \frac{\text{தீர்வைக்கு பின் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றம்}}{\text{தீர்வைக்கு முன் உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி}} \times 100$$

**பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் (Effective Rate of protection)**

இறக்குமதி தாராள வர்த்தகத்தின் மீது தீர்வையை விதிப்பதனால் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதியில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் சதவீதம் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் எனப்படும்.

$$ERP = \frac{V_1 - V_0}{V_0} \times 100$$

$V_1$ - தீர்வைக்கு பின் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதி

$V_0$ - தீர்வைக்கு முன் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதி

E - g :- உள்நாட்டு உற்பத்தியின் விலை ரூ 1000

வெளிநாட்டுப் பண்டத்தின் விலை ரூ 1000

இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் பெறுமதி ரூ 600

இறக்குமதி தீர்வையின் (10%) பின் விலை ரூ 1100

தீர்வைக்கு முன் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதி (1000-600)= ரூ 400

தீர்வைக்கு பின் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதி (1100-600) = ரூ 500

$$ERP = \frac{500-400}{400} \times 100$$

$$= 25\%$$

பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதத்தை அதிகரிப்பதற்கு இறக்குமதி தீர்வையை பின்வருமாறு பயன்படுத்த வேண்டும்.

1. இறக்குமதி செய்யப்படும் இறுதிப் பொருள் மீதான தீர்வை வீதத்தை அதிகரிக்க வேண்டும்.
2. உள்நாட்டு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இறக்குமதி உள்ளீடுகள் மீதான தீர்வை வீதத்தினை குறைத்தல் வேண்டும்.

* பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதத்தை பின்வரும் சமன்பாட்டின் மூலமும் கணிப்பிட முடியும்.

$$ERP = \frac{(n-ab)}{(1-a)} \times 100$$

n = இறுதி உற்பததியின மீது விதிககபபடும தீர்வையின் சதவீதம்
a = இறுதி உற்பத்தியில் உள்ளடங்கும் இறக்குமதி உள்ளீட்டின் சதவீதம்
b = இறக்குமதி உள்ளீடுகளின் மீது விதிக்கப்படும் தீர்வை வீதம்

E.g :-

n = 10%
a = 60%
b = 5%

$$ERP = \frac{0.1 - (0.6 \times 0.05)}{(1 - 0.6)} \times 100$$


$$= \frac{0.1 - 0.03}{0.4} \times 100$$

$$= \frac{0.07}{0.4} \times 100$$

$$= 17.5\%$$

**இவ் வீதம் அதிகரித்து கொண்டு செல்லும் போது வர்த்தகப் பாதுகாப்பும் அதிகரித்து கொண்டு செல்லும்.**

**இறக்குமதி தீர்வையின் விளைவுகள்**




Dh = **உள்நாட்டு கேள்விக்கோடு**

Sh = **உள்நாட்டு நிரம்பல் கோடு**

Sm = **இறக்குமதி நிரம்பல் கோடு**

Sm + T = **தீர்வைக்கு பின்னுள்ள இறக்குமதி நிரம்பல் கோடு**

g+h = **சமூக இழப்பு**

**மேலுள்ள வரைபடத்தின் படி இறக்குமதி செயற்பாடு நடைபெறாத போது உள்நாட்டு கேள்வியிலும் உள்நாட்டு நிரம்பலிலும் சந்தையில் விலை** $P_1$ **ஆகவும் தொகை** $Q_1$ **ஆகவும் காணப்படும். உள்நாட்டு சந்தை இறக்குமதி வர்த்தகத்திற்காக திறந்து விடப்பட்டால் உள்நாட்டு சந்தை விலை** $P_2$ **ஆகக்**

காணப்படும் உள்நாட்டுக் கேள்வி $Q_5$ ஆகவும் உள்நாட்டு நிரம்பல் $Q_3$ ஆகவும் காணப்படும் இதனால் இறக்குமதி $Q_5 - Q_3$ ஆகக் காணப்படும்.

இறக்குமதி போட்டிகளிலிருந்து உள்நாட்டு உற்பத்தியை பாதுகாப்பதற்காக இறக்குமதி மீது தீர்வை விதிக்கப்படும் போது இறக்குமதி நிரம்பல்கோடு Sm இலிருந்து Sm + T ஆக மேல் நோக்கிச் செல்லும் ஆனால் சந்தை விலை $P_2$ இலிருந்து $P_3$ ஆக உயரும் அதேவேளை உள்நாட்டு கேள்வி $Q_5$ இலிருந்து $Q_4$ ஆக குறையும். உள்நாட்டு நிரம்பல் $Q_3$ இலிருந்து $Q_2$ ஆக அதிகரிக்கும் தீர்வைக்குப் பின் இறக்குமதி $Q_4 - Q_2$ ஆக காணப்படும். தீர்வை மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்கும். (Bdef) என்ற பகுதி அதனை வெளிப்படுத்துகின்றது. தீர்வையினால் ஏற்பட்ட சமூக இழப்பை g,h என்ற இரண்டு முக்கோணப் பகுதிகள் வெளிப்படுத்தும்.

☞ பாதுகாப்பு வாதத்திற்கு சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள பொருளாதார வாதங்கள்

1. வெளிநாட்டுப் போட்டியாளர்களிடமிருந்து உள்நாட்டு இளந்தொழில்களை பாதுகாத்தல்
2. குவித்தலை தடை செய்யும்
3. தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் மிக்க உற்பத்தி துறைகளை பாதுகாத்தல்
4. சுயதேவையை பூர்த்தி செய்யக் கூடிய தேசிய பொருளாதாரமொன்றினைக் கட்டியெழுப்புதல். (தன்னிறைவை ஏற்படுத்தல்)
5. பாதகமான சென்மதி நிலுவை நிலைமையை சீர்செய்தல்.
6. உள்நாட்டு பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தல்.
7. தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யும்.
8. அரசாங்க வருவாயின் ஒரு மூலமாக இருத்தல்.
9. வருமான மீள்பங்கீட்டினை ஏற்படுத்தும்
10. தேசிய பாதுகாப்பினை பலப்படுத்த உதவும்.

☞ பாதுகாப்பு வாதத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பொருளாதார வாதங்கள்

1. உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகள் ஒடுக்கமடையும்.
2. புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்களிற்கு தடை ஏற்படும்.
3. உள்நாட்டு தொழில்கள் வெளிநாட்டுப் போட்டியை இழப்பதால் வினைத்திறனற்ற தொழில்கள் உருவாகும்.
4. தரமான பண்டங்களின் உற்பத்தி குறையும்.
5. வெளிநாட்டு வர்த்தகம் ஒடுக்கமடைவதனால் தேசிய வருமானம் குறையும்
6. பொருளாதாரச் செலவு ஏற்படும்.
   - பண்டமொன்றின் உற்பத்தியின் பொருட்டான செலவு கூடும்.
   - பண்டமொன்றின் விலை அதிகரிப்பதனால் நுகர்வுச் செலவு கூடும்.

## முடிவுரை

சுதந்திரமான வர்த்தக செயற்பாடுகள் வளர்ந்து வரும் நாடுகளின் உள்நாட்டு உற்பத்திக்கு பாதிப்பை ஏற்படுத்துவதனால் தாராள இறக்குமதி வர்த்தகத்தின் மீது தீர்வை, தீர்வையல்லாத தடைகளை ஏற்படுத்த வேண்டிய அவசியப்பாடுள்ளது. வர்த்தக பாதுகாப்பு வாதத்தினால் பொருளாதார ரீதியில் சாதகமான, பாதகமான விளைவுகள் ஏற்படும். இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகள் பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளை தெரிவு செய்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் உள்நாட்டிலுள்ள உற்பத்திகளை பாதுகாத்து வளர்ப்பதன் மூலம் பொருளாதாரத்தினை பலப்படுத்திக் கொள்ள முடியும்.

## உசாத்துணை நூல்கள்


1. H.L Anuja (2010). modern Economics
   Fifteenth Edition - (2010). "free trade versus protection"
2. PAUL COWDELL AND DEREKHYDE, International trade finance - 8th Edition (2004)
3. வி.நித்தியானந்தம் (2008) - பருநிலைப் பொருளியல் ஓர் அறிமுகம் "சர்வதேச வர்த்தகம்"
4. செ.சந்திரசேகரம் (2003) - பொருளியல் II "சர்வதேச வர்த்தகம்"
5. S.S உதயகுமார் - அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 5 "சர்வதேச வர்த்தகமும் தீர்வையற்ற வர்த்தக தடைகளும்"
6. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - பொருளியல் 13 (2009)
7. பேராசிரியர் டனி அத்தபத்து - பொருளியல் அறிமுகம் - 2 பாகம் - I (2011) "வெளிநாட்டு வியாபாரம்"


**நான் நன்றாகவே இருக்கின்றேன் என்கிற உணர்வு எல்லா கடினமான காலங்களையும் கடந்து வெற்றி பெற வைக்கும்**

# வறுமைக்குள் இலங்கையின் பயணம்

செல்வி.இ.பவித்ராஜினி
*13B com*

பூமி எனும் கோள்
பூகோளமயமாதல் எனும் பெயரில்
வளர்ச்சி கண்டது வணிகமதில் மட்டுமல்ல - நம்
வாழ்க்கைப் பாதையிலும் தான் - ஆயினும்

வணிக வளர்ச்சியது ஒருபுறமிருக்க
வறுமை வளர்ச்சியது நாற்புறமும் சூழ்ந்துவிட்டது
வறுமையோ வாழ்நாட்களில் சில பகுதியாய்
வரியோ வருமானத்தில் பெரும் பகுதியாய்

கண்முன்னே வளரும் கட்டிடங்கள்
கால ஓட்டத்தை விட வேகமான வாகனங்கள்
கண்கவர் நாகரிக ஆடைகள்
கண்மணியாகிப் போன அலறும் தொலைபேசிகள் - இவை

வறுமையல்ல என நீ உரைத்தால்
அது மெய் ஆகாது
அது பிறர் நினைப்பை வேண்டி
செய்யப்படுபவையே தவிர
அத்தியாவசிய தேவைப்பூர்த்தியன்று

அந்நிய நாடுகளில் சிறுவரே சிகரம் தொடுகையில்
நம் நாட்டில் மட்டும் சிறுவர் தொழிலாளர்கள்
வலிக்கும் தோள்களில் சுமக்கும் சுமைகள்
இறக்கிட வழியில்லை
இறக்கினால் தண்டனையோ பட்டினி

தேர்ந்தெடுக்கப்பட்ட தேயிலை தேசம் தாண்டி சென்றிட
தேகத்தை பனிக்கும், மழைக்கும் இரையாக்கும்
மலையகத் தொழிலாளர்கள் - ஆனால்
சம்பளமோ அரைநாள் வாழ்க்கைக்கு

நாகரிக மோகம் தேடினார் நம்மவர் - அதற்கான
நன்கொடையோ போதையும், மதுவும்
புகையினால் எரியும் குடும்பங்கள் எத்தனை?
ஏழ்மை தென்பட்டால் மட்டும் வறுமை என்றாகாது
இன்னொருவரின் எண்ணத்திற்காக - நம்
செயலை செய்யத்தயங்குவதும் தான்

மனிதா! உன் வாழ்க்கையை நீ திட்டமிடு
வறுமை தன்னாலே சென்று விடும்.

UNESCO :-

வறுமை என்பது ஏழ்மையாக இருப்பதல்ல. ஒருவன் என்னைப்பற்றி என்ன நினைப்பானோ என நினைத்து நாம் அச்செயலை செய்ய தயங்குவதும் வறுமை தான்.

The dream is not
what you see in sleep,
Dream is which
Does not let your sleep
[*Abdul Galaam*]

# நுகர்வோரின் உரிமைகளும், பொறுப்புக்களும்

## (*Rights & Responsibilities of Consumer*)

த.தமிழ்மதி
2017 (B) வர்த்தகப்பிரிவு

நுகர்வோரால் பொருட்களும், சேவைகளும் கொள்வனவு செய்யப்பட்டுகின்ற போது கொடுக்கப்படுகின்ற விலைக்கு பெறப்படுகின்ற பயன் (திருப்தி) உச்சமாகவும், நியாயமாகவும் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதே நுகர்வோர் பாதுகாப்பு என அழைக்கப்படுகிறது. இந்நுகர்வோர் பாதுகாப்பு என்பது மூன்று பிரதான வழிகளில் கிடைக்கின்றது.

01. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்புடைய சட்டங்களின் மூலம்.
02. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான நிறுவனங்களின் மூலம்
03. சுய பாதுகாப்பின் மூலம்

சுய பாதுகாப்பு என்பது நுகர்வோர் தமக்குத்தாமே பாதுகாத்துக் கொள்வதாகும். இதன் பொருட்டு நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான நுகர்வோர் உரிமைகளையும், கடமைகள், பொறுப்புக்களையும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

**நுகர்வோர் உரிமைகள் (Consumer Rights)**

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் கெனடி அவர்களும், சர்வதேச நுகர்வோர் ஒழுங்கமைப்பாளர் மூலமாகவும் நுகர்வோர் உரிமைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- ✓ பாதுகாப்பு பெறும் உரிமை
- ✓ தகவல் பெறும் உரிமை
- ✓ தேர்வு செய்யும் உரிமை
- ✓ கவனமீர்க்கும் உரிமை
- ✓ நட்ட ஈடு பெறக்கூடிய உரிமை
- ✓ சுகாதாரமான சூழலில் வாழக்கூடிய உரிமை
- ✓ நுகர்வோர் கல்வியைப் பெறக்கூடிய உரிமை
- ✓ அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உரிமை

***பாதுகாப்பு பெறும் உரிமை***

நுகர்வோர் தமது உடலையும், உள்ளத்தையும், உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய உரிமையாகும். அதாவது நுகர்வின் மூலம் தனக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களிலிருந்து தம்மைப் பாதுகாக்க முடியும் என்பதாகும்.

*தகவல் பெறும் உரிமை*

**நுகர்வோர் சிறந்த நுகர்வுச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு தனக்கு தேவையான, பொருத்தமான தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதாகும்.**

*தேர்வு செய்யும் உரிமை*

**சந்தையில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட போட்டி உற்பத்திப் பொருட்கள், சேவைகளிலிருந்து தனக்கு விருப்பமானதை தெரிவு செய்யும் உரிமையாகும்.**

*கவனமீர்க்கும் உரிமை*

**நுகர்வின் போது குறித்த பொருட்கள் சேவைகளின் மூலம் தனக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரக்கூடிய உரிமையாகும்.**

*நட்டஈடு பெறக்கூடிய உரிமை*

**நுகர்வின் போது குறித்த பொருட்கள் சேவைகளின் மூலமாக தனக்கு ஏற்பட்டுள்ள உடல், உள ரீதியான இழப்புக்களுக்கு சட்டப்படி நட்டஈடு பெறக்கூடிய உரிமையாகும்.**

*சுகாதாரமான சூழலில் வாழக்கூடிய உரிமை*

**நுகர்வோர் தமக்கும், தமது எதிர்கால சந்ததியாளருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சுத்தமான, ஆரோக்கியமான சூழலில் வாழ்வினை அமைத்துக் கொள்ளக்கூடிய உரிமையாகும்.**

*நுகர்வோர் கல்வியினைப் பெறக்கூடிய உரிமை*

**ஒவ்வொரு நுகர்வோரும் நுகர்வுத் தொழிற்பாடு தொடர்பான பொருத்தமான கல்வி அறிவினைப் பெறவும், பிரயோகிக்கவும் கூடிய உரிமையாகும்.**

*அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உரிமை*

**ஒவ்வொரு நுகர்வோரும் உணவு, நீர், உடை, உறைவிடம், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு போன்ற அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய உரிமையுடையவராவார்.**

**நுகர்வோர் பொறுப்புக்கள்** (Responsibilites )

**சர்வதேச நுகர்வோர் ஒழுங்கமைப்பின் மூலமாக ஐந்து வகையான நுகர்வோர் கடமைகளும் பொறுப்புக்களும் கீழ்வருமாறு முன்வைக்கப்படுகிறது.**

**01. விழிப்புணர்வுடன் செயற்படுதல்**

**02. செயற்பாட்டு ரீதியாகப் பங்களிப்புச் செய்தல்**

**03. சமூகம் தொடர்பான விழிப்புணர்வு கொள்ளல்.**

04. சூழல் பற்றிய அக்கறையுடன் செயற்படுதல்

05. ஏனையோருடன் ஒன்றிணைந்து செயற்படுதல்.

*விழிப்புணர்வுடன் செயற்படுதல்*

ஒவ்வொரு நுகர்வோரும் தமது நுகர்வு நடவடிக்கையினை மேற்கொள்ளும் போது பொருள், சந்தை, போட்டி என்பவை தொடர்பாக அறிந்து நுகர்வுச் செயற்பாட்டினை அறிவு பூர்வமாக மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

*செயற்பாட்டு பங்களிப்பு நுகர்வுச்சந்தை*

நுகர்வோர் தமது நுகர்வு சார்ந்த உரிமைகளை முழுமையாக அறிந்து கொள்வதுடன் அதனை தமது நுகர்வுச் செயற்பாடுகளின் போது பிரயோகிக்கவும் வேண்டும்.

*சமூக அக்கறை கொள்ளுதல்*

நுகர்வோர் ஒவ்வொருவரும் நுகர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றபோது அதன் மூலமாக சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும் என்பதாகும்.

*சூழல் விழிப்புணர்வு கொள்ளுதல்*

ஒவ்வொரு நுகர்வோரும் தமது நுகர்வுச் செயற்பாடுகளின் மூலமாக சூழலுக்கும், இயற்கை வளங்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் செயற்பட வேண்டும் என்பதாகும்.

*ஏனையோருடன் ஒன்றிணைந்து செயற்படுதல்*

நுகர்வோர் தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையிலும், உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் ஓர் அமைப்பின் கீழ் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதாகும்.

இலங்கை போன்ற கலப்புப் பொருளாதார நாடுகளில் நுகர்வோரின் இறைமை பாதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் அதிகம், அத்துடன் திறந்த பொருளாதாரக் கொள்கை, தனியார்மயமாக்கம், உலகமயமாக்கம் என்பவற்றினால் ஏற்படும் போட்டி நிலைமை காரணமாக நுகர்வோர் நலன் மிகவும் கேள்விக்குறியாகியுள்ள நிலைமையும் காணப்படுவதன் காரணமாக நுகர்வோர் பாதுகாப்பு என்பது மிகவும் அவசியமாக அமைகிறது.

உசாத்துணை நூல்கள்

பொருளியல் அறிமுகம் - பேராசிரியர் டனி அத்தப்பத்து

# கணக்கீட்டு எண்ணக்கருக்கள்

த.சுவஸ்திகா
2017 (A) வர்த்தகப்பிரிவு

வியாபார கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதிலும் அக்கறை உடையோருக்கு நிதியறிக்கையை தயாரிக்கும் போதும் கணக்கீட்டு செயன்முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரயோகிக்கப்படும் எடுகோள், விதிகள், நடைமுறை மரபுகள் என்பன கணக்கீட்டு எண்ணக்கரு ஆகும்.

நிதியறிக்கையை புரிந்து கொள்ளத்தக்கதாகவும், நம்பகத் தன்மை கொண்டதாகவும் தயாரிக்க வேண்டியிருப்பதால் கணக்கீட்டு எண்ணக்கருவை பிரயோகிப்பது அவசியம் ஆகும். கணக்கீட்டு எண்ணக்கருவின் பிரயோகத்தின் மூலம் நிதியறிக்கை தகவல்களின் ஒப்பீட்டு தன்மையும் விளக்கும் தன்மையும் மேம்படுகின்றன.

## *கணக்கீட்டில் பயன்படும் எண்ணக்கருக்கள்*

**1. தொடர்ந்து செல்லும் அமைப்பு எண்ணக்கரு**

நிறுவனமானது எதிர்காலத்தில் தொடர்ந்து இயங்கும் என்பதை கருத்தில் கொண்டு கணக்கீடு செய்தல் வேண்டும் என்பதாகும். இதற்கமைய உடைமையாளர் மனதில் வணிகத்தை கலைக்கும் எண்ணமோ அல்லது வணிக செயற்பாட்டு கால எல்லையை சுருக்கி விட வேண்டும் என்ற எண்ணமோ ஏற்பட கூடாது என்பதாகும்.

Eg:- சொத்துக்கள், பொறுப்புக்கள் நடைமுறை, நடைமுறையல்லா என வேறுபடுத்தி காட்டல்.

ஆதனம் பொறி உபகரணத்திற்கு திரண்ட பெறுமானதேய்வு ஏற்பாடு செய்தல்

**2. அலகு சார் எண்ணக்கரு/தொழில் முழுமைக்கூறு எண்ணக்கரு**

நிறுவனமானது அதன் உடைமையாளரிடமிருந்து வேறுபடுத்தப்பட்ட ஒரு தனியலகாக கருதி கணக்கீட்டு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். சட்டத்தின் படி வரையறுக்கப்பட்ட கம்பனிக்கு தான் தனிமனித அந்தஸ்து இருப்பினும் இவ் எண்ணக்கருவின் பிரகாரம் தனியுடமை, பங்குடமை அமைப்புகளும் தனிப்பட்ட கூறாகவே கருதப்படும்.

E.g:- நிதியறிக்கையில் வியாபாரத்தின் பெயரை குறிப்பிடல்
உரிமையாளரால் இடப்படும் மூலதனம் பொறுப்பாக காட்டல்

**3. பண அளவீட்டு எண்ணக்கரு/நிதியலகு எண்ணக்கரு**

வணிகங்களின் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள் போன்றவற்றை அளவீடு

செய்வதற்கு பொருத்தமான அளவீட்டு கருவி பணமாகும். பணப்பெறுமதியால் அளந்து விபரிக்க கூடிய நடவடிக்கைகளே கருத்தில் கொள்ளப்படும் எனவும் பணத்தினால் அளவிடமுடியாத தகவல்களை கணக்கீட்டில் இருந்து எதிர்பார்க்க முடியாது என்று கொள்வதே பண அளவீட்டு எண்ணக்கரு ஆகும்.

E.g:- கொடுக்கல் வாங்கலின் பெறுமதி குறித்து நாட்டின் பண அலகினால் அளக்கப்படும்

**4. கால அளவு எண்ணக்கரு / ஆவர்த்தன எண்ணக்கரு**

வணிகத்தின் வாழ்வு காலத்தை நிதியாண்டுகளாக பிரித்து செயற்பாட்டு பெறுபேறுகள் கணிக்கப்பட வேண்டும் என இவ் எண்ணக்கரு வலியுறுத்துகின்றது.

ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் நிதியறிக்கையை தயாரிப்பதும் கால அளவு எண்ணக்கரு ஆகும். கணக்கீட்டு காலம் பொதுவாக 12 மாதங்கள் கொண்ட ஒரு கணக்காண்டு/நிதியாண்டு ஆகும்.

E.g:- குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வருமான கூற்று நிதியாண்டை குறிக்கும். (31.03.2015ல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமான கூற்று)

**5. கொள்கை மாறா எண்ணக்கரு**

வணிகத்தின் கணக்கீட்டில் பின்பற்றப்படும் கொள்கைகளும் நடைமுறைகளும் காலம் காலமாக மாற்றமின்றி ஒரே சீராக இருக்கும் எனக் கொள்வது கொள்கை மாறா எண்ணக்கரு ஆகும். விசேட காரணம் எதுவுமின்றி கொள்கைகளை அடிக்கடி மாற்றக்கூடாது என்பதை வலியுறுத்துவதே இந்த எண்ணக்கருவாகும். இவ் எண்ணக்கருவை பின்பற்றும் போது ஓர் காலத்துடன் மற்றுமொரு காலத்தை ஒப்பு நோக்குதல் இலகுவானது.

E.g:- பெறுமானதேய்வு முறையில் நேர்கோட்டு முறையிலிருந்து ஒடுங்கு மீதி முறைக்கு மாற்றம் செய்யாது இருத்தல்.

இருப்புக்களின் கிரயத்தை மதிப்பிடுவதற்கு முதல் வந்தது முதல் வெளியே என்ற முறையில் இருந்து நிறையளித்த சராசரி முறைக்கு மாறாது இருத்தல்.

**6. அட்டுறு எண்ணக்கரு/நிலுவை கோட்பாடு**

ஒரு வணிகத்தின் குறிப்பிட்ட நிதியாண்டுக்கான நிதி பெறுபேறுகளை (இலாபம், நட்டம்) அறிக்கையில் கணிக்கும் போது காசாக கொடுத்த செலவுகளுடன் கொடுக்க வேண்டிய செலவுகளையும், காசாக பெற்ற வருமானத்துடன் பெறவேண்டிய வருமானங்களையும் சேர்க்க வேண்டும் என்பது இவ் எண்ணக்கரு ஆகும்.

E.g:- செலவுகளுக்கான நிலுவைகள், முற்பணங்களை சீராக்கல்.

வருமான நிலுவை, முற்பணங்கள் என்பவற்றை சீராக்கல்.

கடன்பட்டோன், கடன்கொடுத்தோன் மீதிகளை இனங்காணல்.

**7. இணைத்தல் எண்ணக்கரு/ஒப்புமை எண்ணக்கரு/பொருத்தப்பாட்டு எண்ணக்கரு**

குறித்த நிதியாண்டிற்காக உழைக்கப்பட்ட வருமானங்களுடன் அவ்வருமானத்தை உழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் ஒப்பீடு செய்யப்பட்டு இலாபம் அல்லது நட்டம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. செலவுகள் செய்யப்பட்டு வருமானங்கள் உழைக்கப்படுகின்றது. இதனாலேயே அவை ஒப்பீடு செய்யப்பட்டு நட்டம் அல்லது இலாபம் கணிக்கப்படும்.

E.g:- விற்பனைக் கிரயம் கணிக்கப்பட்டு விற்பனைகளுடன் ஒப்பீடு செய்யப்படும்

**8. பாதுகாப்பு எண்ணக்கரு/முன்னெச்சரிக்கை எண்ணக்கரு**

இவ் எண்ணக்கருவின் பிரகாரம் கணக்கீட்டு திகதியில் எதிர்பார்க்கப்படும் சாத்தியமான நட்டம் கருத்தில் கொள்ளப்படும் ஆனால் சாத்தியமான வருமானம் கவனத்தில் கொள்வதில்லை.

E.g:- ஐயக்கடன் ஏற்பாடு செய்தல்

நடைமுறையல்லா சொத்திற்கு பெறுமான தேய்விடல்

இருப்பினை தேறத்தக்க பெறுமதிக்கு குறைத்தெழுதுதல்

**9. வரலாற்றுக் கிரய எண்ணக்கரு**

வணிக நடவடிக்கைகள் கிரயத்தில் காட்ட வேண்டும் என கொள்வது வரலாற்றுக் கிரய எண்ணக்கருவாகும். கணக்கீட்டு உள்ளீடுகள் சார்பாக நிகழக் கூடிய விலை மட்ட மாற்றங்களை கணக்கு பதிவிற்கு உட்படுத்தப்படுவதில்லை என்பது இவ் எண்ணக்கருவாகும்.

E.g:- நிதிநிலைமை கூற்றில் ஆதனம் பொறி உபகரணம் அவற்றின் கிரயத்தில் பெறுமதியிட்டு காட்டப்பட்டு திரண்ட பெறுமானதேய்வு கழிக்கப்படும்.

**10. வெளிப்படுத்தல் எண்ணக்கரு**

நிதியறிக்கை பற்றிய தவறான அபிப்பிராயத்தை உண்டு பண்ணாது இருக்கக்கூடிய வகையில் போதுமான தகவல்களை நிதிகூற்றுகளில் முழுமையாக/பகுதியாக வெளிப்படுத்தல் வேண்டும் என்பது இவ் எண்ணக்கரு ஆகும்.

E.g:- வரையறுக்கப்பட்ட கம்பனியின் நிதியறிக்கையின் கீழ் குறிப்புகளாக வெளிப்படுத்தல்

**11. தேறல் எண்ணக்கரு**

வருமானம் இனங்காணப்படும் போது வருமானம் தேறிவிட்டதாக கருதி இலாபத்தை தீர்மானித்தல்

கொடுக்கல் வாங்கல்களுக்கான பரிமாற்றம் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அல்லது திகதியில் அதன் பொருளாதார பெறு பேறு தேறப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

ஔ :- சேவை வழங்கப்பட்டதுமே சேவை வருமானம் உழைக்கப்பட்டதாக கருதி கொள்ளல்

கடன் விற்பனை நடந்ததுமே இலாபம் தேறியதாக கொள்ளல் ஆனால் கடன் விற்பனைக்கான பணம் பெற்றுக்கொள்ளாமல் இருக்கலாம்.

**12. இரட்டை விளைவு எண்ணக்கரு**

ஒவ்வொரு பொருளாதார கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு விளைவுகளை ஏற்படுத்தும் வணிக கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் சமனான விளைவுகளை ஏற்படுத்தும் என கருதி கணக்கு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என இவ் எண்ணக்கரு வலியுறுத்துகின்றது இவ் எண்ணக்கருவின் பிரகாரம் சொத்து = பொறுப்பு என்ற சமன்பாடு தோற்றம் பெற்றது.

E.g:- பேரேட்டு பதிவுகள்
பரீட்சைமீதி
நிதி நிலைமை கூற்று

**13. பொருண்மை எண்ணக்கரு**

நிதியறிக்கையை பயன்படுத்துவோரின் தீர்மானங்களுக்கு கணிசமனான அளவு செல்வாக்கு செலுத்த கூடிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தும் எண்ணக்கருவாகும். ஒப்பீட்டு ரீதியில் கணிசமான தாக்கத்தை தர கூடிய பொருண்மை வாய்ந்த விடயங்களே கணக்கீட்டில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

E.g:- கடதாசி இணைக்கும் கருவியின் கிரயம் சொத்தின் பண்புகளை கொண்டிருப்பதால் அவற்றை சொத்தாக காட்டாது வருமான கூற்றில் செலவீனமாக காட்டுதல் இவ் எண்ணக்கருவிற்கு அமையவாகும்.

**14. தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்**

கொடுக்கல் வாங்கல் ஒன்றின் சட்டத்தன்மையை விட பொருளாதார பயன்பாடு முக்கியமானது என்பதை விளக்குவதாகும். எனவே இவ் எண்ணக்கருவானது சட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

E.g:- குத்தகை அடிப்படையில் வாங்கப்பட்ட ஆதனம்பொறி உபகரணத்தை சொத்தாக காட்டல்.

# QUALITY MANAGEMENT

*Mrs.B.Pathmaja*
*B.com, MA in Dev.Studies, PGDE*
*Asst.Principal,*
*J/Hindu Ladies College*

Introduction To Quality

Quality is one of the most important and far - reaching issues in modern organisations. The term is difficult to define and often means different things in different organisations. However, the need to satisfy customer's needs is critical to most definitions of quality.

Quality

In order to control and improve quality, it must first be defined. In an industrial context, quality is defined in a functional way. Here, quality means that a product is made free from errors and according to its design specifications, so the idea of consistency becomes important. Note that consistency is a key aspect of quality standards such as the ISO 9000 series. This still leaves a problem, however. How should standars and specifications be set? who decides what an 'acceptable' tolerance level should be?

An alternative approach to defining quality is thus to focus on the user. Japanese companies found the definition of quality as the degree of conformance to a standard too narrow and consequently started to use a new definition of quality as user statisfaction.
Juran defines quality as 'fitness for use'(1988)

In these definitions, customers requirements and customer satisfaction are the main factors. If an organisation can meet the requirements of its customers, customers will presumably be satisfied. The ability to define accurately the needs related to design, performance, price, safety, delivery, other business activities and the processes will place an organation a head of its competitors in the market.


Taking these definitions together, ken Holmes (Total Quality Management) has defined quality as "the totality of features and characteristics of a product or service which bears on its ability to meet started or implied needs.

Quality requires the 4Cs

There are a number of key writers on quality.

| writer | Mani Contribution |
|---|---|
| W.Edward Deming | • Managers should set up and then continuously improve the systems in which people work.<br>• Managers should work with employees to gain feedback from those who do the job.<br>• Workers should be trained in quality to identify what needs changing and how Deming was credited with the creation of TQM in Japan. |
| Joseph M.Juran | • Drew on pare to principle and stated that 85% of quality problems are due to the systems that employees work with in rather than the employees themselves.<br>• Therefore need to develop key projects for dealing with quality problems rather than concentrating on employee motivation.<br>• Also believed that anyone affected by the product is considered as a customer, so introduced the idea of internal as well as external customers. |
| Phillip P.Crosby | • Introduced the concept of "Zero defects"<br>• Believed that prevention is key and that the importance of quality is measured by the cost of not having quality |

Approaches To Quality Management




1.1 Total Quality Management (TQM)

TQM is a philosophy of quality management that originated in Japan in the 1950s. TQM is the continuous imporvement in quality, productivity and effectiveness obtained by establishing management responsibility for process as well as outputs. In this every process has an indentified process owner and

every person in an entity operates within a process and contributes to its improvement features of TQM.

i) Prevention of errors before they occurs.


ii) Continual improvement of processes.

iii) Real participation by all.

- Employees - they are expected to seekout, identify and correct quality problems.
  Team work will be vital.
- Suppliers - quality and reliability of suppliers will play a vital role (TQM and JIT often go hand in hand)
- Customers - the goal is to identify and meet the needs of the customer.

iv) Commitment of Senior management

TQM Techniques




1.1.1 Quality circles

A quality circle is a small group of employees, with a range of skills from all levels of the organation. They meet voluntarily on a regular basis to discuss quality issues and to develop solutions to real problems.

Advantages

- Improvements in quality, leading to greater customer satisfaction and improved productivity
- A culture of continuous improvement is encouraged.
- Employees at operational level will form part of the quality circle. They

often have a better understanding of quality problems than their superiors/managers and their participation will increase commitment to and ownership of problems.

- The group approach helps to foster organisational unity.
- Using inter disciplinary teams helps staff to gain a better perspective of the whole organisation and their part within it.

1.1.2 Kaizen

Kaizen is a Japanese term for the philosophy of continuous improvement in performance in all areas of an organisation's operations.

Advantages

- Involes all levels of employees.
- Everyone is encouraged to come up with small improvement suggestions on a regular basis.
- suggestions are not limited to a particular area, such as production or marketing but look at all areas of business.
- Setting standards and then continually improving those standards.
- Training and resources should be provided for employees in order for them to meet the standards set.

Kaizen Tools.

i) Plan - Do - Check - Act (PDCA) cycle
ii) The fishbone diagram
iii) The pareto rule
iv) The five why process

1.1.3 5 - S Practice

The 5 - S practice is an apporach to achieving an organised, Clean and standardised work place

- The 5-s practice is often part of a Kaizen approach
- The 5Ss are Japanese words but can be translated as follows.

Seiri - sort
Seiton - Organise
Seiso - Clean
Seiketsu - standardise
Shitsuke - Discipline

The principle may appear simple, Obvious common sense but until the advent of 5-s many businesses ignored these basic principles

1.1.4 Six Sigma

The aim of the approach is to achieve a reduction in the number of the faults that go beyond an accepted tolerance limit through the use of statistical techniques.

Statistical process control

It is the method used to continually monitor and chart a process whilst. It is operating, to warn when the process is moving away from the predetermined limits.

1.2 Quality Control (QC)

Quality control (QC) involves a number of routine steps which measure and control the quality of the product/service as it is developed.

The approach identifies production processes that are critical to quality and then establishes warning limits and tolerances measure any unacceptable variances.

1.3 Quality Assurance Systems

A Quality assurance (QA) system involves a review of the QC procedures, commonly by an independent third party. It aims to verify that the desired level of quality has been met.

Two types of QA systems are here

1) British and European systems - ISO
2) The European Quality foundation Model (EQFM)

The ISO 9000:2000 series of quality standards is the most recent set of ISO standards. (Published in 2000)

ISO 14001

Accreditation of ISO 14001 is closely linked with ISO 9000-2000. It specifies a process for controlling and improving a company's environmental perfomance

ISO 14001 covers:

- Environment policy
- Planning
- Implementation and operation
- checking and corrective action

✐ Management review

The EQFM is one of the best known self - assessment models for business improvement.

References:

1) Quality Management : Theory and Application - http://books.google.lk/bookd?isbn Peter D.Mauch

2) Quality management Approach Management - web crawler.com

3) Total Quality Management : The key to business improvement - http://books.google.lk/books?isbn C.Hakes.

4) வணிகக்கல்வி அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் - 13

5) உயர்தர வணிகக்கல்வி - கலாநிதி A.சிவனேசராசா

I have a dream that my four little children will one day live in a nation where they will not be judged by the color of their skin but by the content of their character

(Martin Luther King)

# உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும் ஒரு பார்வை

ந.சோனியா
*2017 (A)* வர்த்தகப்பிரிவு

உலகப் பொருளாதாரமானது இலங்கைப் பொருளாதாரத்துடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. எனவே உலகப் பொருளாதாரம் பற்றிய பரந்த பார்வை அவசியமாகும். அந்த வகையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் படி முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில் மிதமான மீட்சி காணப்பட்டமைக்கிடையிலும் தோற்றம் பெற்று வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் சந்தைகளின் வளர்ச்சியால் காணப்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2015ல் உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகள் குறைந்தளவில் காணப்பட்டன.

முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களில் வெளியீட்டு இடைவெளிகள் சுருக்கமடைந்த வேளையில் தோற்றம் பெற்றுவரும் சந்தைகள் இவ்வாண்டுப் பகுதியில் புதிய சவால்களை எதிர்நோக்கியமையால் முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களினதும் அவற்றின் தோற்றம் பெற்று வரும் சந்தை இணைத்தரப்பினர்களினதும் செயலாற்றம் வேறுபட்டனவாக காணப்பட்டன இதற்கு முக்கிய தோற்றம் பெற்று வரும் சந்தைகளில் பொருளாதார நடவடிக்கைகளின் மீள் சமநிலைப்படுத்தலும் பண்ட விலைகளில் தாழ்ந்த மட்டங்களும் முக்கிய காரணங்களாக விளங்கின. (எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி பெரும்பாலான பொருளாதாரங்களில் பணவீக்கத்தினை குறைந்த மட்டங்களில் பேணுவதற்கு உதவிய போதும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளில் இறை மற்றும் வெளிநாட்டு வசதிகள் சுருங்கிய நிலையிலேயே காணப்பட்டன.

நலிவடைந்த வளர்ச்சி வாய்ப்புக்கள், சேதமடைந்த வர்த்தக மாற்று விகிதம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் றிசேர்வினால் இறுக்கமாக்கப்பட்ட நாணயக் கொள்கைகளின் கசிந்த தாக்கம் என்பன இவ்வாண்டுப் பகுதியில் பல நாணயங்கள் பெறுமதி இழப்பு அழுத்தங்களை எதிர்நோக்குவதற்கு வழிவகுத்தன.

பாரிய தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களின் செயலாற்றத்தின் அளவு குறைவடைந்தமையினால் உலகளாவிய வளர்ச்சி குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி உலகளாவிய வளர்ச்சி 2016இல் 3.2 சதவீதத்திலும் 2017இல் 3.5 சதவீதத்திலும் மதிப்பிடப்பட்டது. உலகளாவிய சூழ்நிலைகளின் காரணமாக சவால்கள் தோற்றுவிக்கப்பட்ட போதிலும் பெடரல் றிசேர்வ் வீட்டுத்துறையின் செலவீடல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் தொழிலாளர் சந்தை வலுவடைந்து வருகின்றமை என்பவற்றின் விளைவாக ஐக்கிய அமெரிக்காவின்

பொருளாதாரம் தொடர்ந்தும் மிதமான வேகத்தில் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய இராச்சியத்தின் பொருளாதார மீட்சியில் ஏற்பட்ட உத்வேகம் இங்கிலாந்து வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையினால் தூண்டப்பட்டதுடன் இது தனியார் உள்நாட்டுக் கேள்வியில் விரிவாக்கத்தினை தோற்றுவித்து இறைத்திரட்சியின் சுருக்கத் தாக்கத்தினை எதிரீடு செய்வதற்கு உதவியது. எனினும் ஐக்கிய இராச்சியப் பொருளாதாரத்தின் சாதகமான தோற்றப்பாடு 2016 நடுப்பகுதியில் நடாத்துவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை மீதான சர்வசன வாக்கெடுப்பினைச் சுற்றிக் காணப்படும். நிச்சயமற்ற தன்மைகளினால் பாதிக்கப்படக் கூடுமென்ற கரிசனைகள் காணப்படுகின்றன.

முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வளர்ச்சி வாய்ப்புக்கள் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் பலவீனமாக காணப்படும் யப்பானிற்கான பொருளாதாரத் தோற்றப்பாட்டின் தரம் குறைந்தமையினால் பாதிக்கப்பட்டன. மேலும், பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திலும் பார்க்க குறைவாக இருக்கின்றமை 2016ல் யூரோ வலயத்தின் செயலாற்றத்தின் மீது எதிர்மறையான தாக்கமொன்றினை ஏற்படுத்தக் கூடும்.

தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களுக்கிடையே முதலீடுகளின் ஒரு தூண்டலிருந்து உள்நாட்டு நுகர்வுகளின் இன்னொரு தூண்டுதலுக்கு சீனாவின் வளர்ச்சி உபாயத்தின் மீள் சமனிலைப்படுத்தலானது பரந்த செயல்விளைவுகளைக் கொண்ட தாக்கங்களை ஏற்படுத்தக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறுங்காலத்தில் இம்மாற்றங்களானது வர்த்தகம் மற்றும் நிதியில் வழிப்படுத்தல்களினூடாக கசியும் தாக்கங்களை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2015ம் ஆண்டு முழுவதும் பண்ட விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி உலகளாவிய பொருளாதாரத்தின் மீட்சி வேகத்திற்குப் பல சவால்களைத் தோற்றுவித்தது பன்னாட்டு பண்ட விலைகளில் ஏற்பட்ட அண்மைய வீழ்ச்சி வலு, உலோகம் மற்றும் கனிப்பொருட்கள் மற்றும் வேளாண்மை உள்ளிட்ட அனைத்துப் பண்டத்துறைகளிலும் காணப்பட்டது. பொதுவாக தேறிய பண்ட ஏற்றுமதிப் பொருளாதாரங்கள் குறைந்த பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்கள், நாணயத்தேய்வு, ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி மற்றும் நடைமுறைக்கணக்கில் தேய்வு என்பவற்றை அனுபவித்தன. இப் பொருளாதாரங்கள் இறுக்கமான நாணயக் கொள்கைகள் மற்றும் வெளிநாட்டு செலவாணிச் சந்தைகளில் அதிகரித்த தலையீடுகள் என்பவற்றின் மூலம் நாணயத் தேய்விற்கும் மூலதன வெளிப்பாய்ச்சலுக்கும் பங்களித்தன.

தேறிய பண்ட இறக்குமதியாளர்கள், குறைந்த பண்ட விலைகளிலிருந்து நன்மையடைந்த வேளையில் தேறிய ஏற்றுமதியாளர்களுக்கும் தேறிய இறக்குமதியாளர்களுக்குமான இணைப்புக்களின் காரணமாக விலை வீழ்ச்சிகளிலிருந்து கிடைத்த சேமிப்புக்கள், பணம் அனுப்பல்கள், சுற்றுலா

வருவாய்கள், மூலதன பாய்ச்சல்கள் மற்றும் வெளிநாட்டு உதவிகள் என்பவற்றின் நியதிகள் உட்பாய்ச்சல்களினால் இல்லாமல் செய்யப்பட்டது.

உலகளாவிய பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட தளம்பல்கள் 2015ல் இலங்கைக்கு பல சவால்களை தோற்றுவித்ததுடன் அவை 2016இலும் தொடர்கின்றது. உலகளாவிய எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி, மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட மந்தமான வளர்ச்சி என்பன வெளிநாட்டு செலாவணியின் முக்கிய மூலங்களான தொழிலாளர் பணம் அனுப்புவதிலும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் எதிர்கால வேலை வாய்ப்புக்களிலும் தொடர்ச்சியான தாக்கத்தினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாண்டுப் பகுதியில் அனைத்து தோற்றம் பெற்று வரும் சந்தைகளிலும் அவதானிக்கப்பட்டவாறு ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வின் நாணயக் கொள்கை வழமைப்படுத்தலின் எதிர்பார்ப்புக்களின் காரணமாக உள்நாட்டு அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான முதலீடுகள் குறிப்பிடத்தக்களவிற்கு மீளப் பெறப்பட்டிருந்தன. பெடரல் றிசேர்வினால் 2015 டிசெம்பரில் செய்யப்பட்ட வட்டி வீத உயர்வினை தொடர்ந்து 2016ல் மேலும் உயர்வுகள் எதிர்பார்க்கப்படுகின்றமையின் காரணமாக இப்போக்கு தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய பொருளாதார வளர்ச்சியின் பலவீனமான வேகம், புவிசார் அரசியல் அபிவிருத்திகள் போன்ற காரணிகளின் காரணமாக உருவான உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் நாட்டிற்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை நேரடியாகவும் குறிப்பாக சீனா மற்றும் இதன் முக்கிய பண்ட வர்த்தக பங்காளர். நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் என்பவற்றிலிருந்தான கசிந்த தாக்கங்களினூடாகவும் பாதித்தது.

எனவே இத்தகைய உலகப் பொருளாதாரச் சுழலின் தன்மைகளையும் அவற்றின் தாக்கங்களையும் இனங்கண்டு அதற்குத் தகுந்த போல் செயற்படுவதன் மூலம் எமது நாட்டின் பொருளாதாரத்தையும் ஸ்திரமான ஒரு நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என்பதில் ஐயமில்லை.

**கல்வியின் மகத்தான குறிக்கோள் கற்பதல்ல, தேடல்!**

**அறிவு அல்ல, செயல்!**

# உற்பத்தி அபிவிருத்தி

வே.சஞ்ஜிதா
*2017(A)* வர்த்தகப்பிரிவு

முகாமையாளர்களுக்கு முக்கியமானதும் அதே நேரத்தில் கடினமானதுமான கருமம் உற்பத்தி அபிவிருத்தி ஆகும். உற்பத்தியை விருத்தி செய்து அதனை சந்தைக்கு வழங்குவதற்கு சில மாதங்களோ/வருடமோ செல்லலாம். இது குறுங்காலத்தில் மேற்கொள்ள முடியாத ஒன்றாகும். உற்பத்தி தொடர்பான தீர்மானம் ஏதேனும் ஒரு விடயத்தால் தவறாக அமையுமானால் நிறுவனமே முழுவதுமாக தோல்வியடைய வேண்டிய நிலை உருவாகும். ஆகவே உற்பத்தி அபிவிருத்தி தொடர்பிலே கீழ்வரும் படிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

1. புதிய எண்ணங்களை உருவாக்குதல். (Generating New Ideas)
2. உற்பத்தி எண்ணத்தை விருத்தி செய்தலும் வெளிப்படுத்தலும் (Develop & Screen product concept)
3. சந்தை உபாய வழிகளை செய்தல்.
4. வணிக இலக்குகளை இனங்காணுதல் (Analize Business Potential)
5. உற்பத்தி வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி (Design & Develop the Product)
6. சந்தையை பரிசீலித்தல் (Test Market)
7. விற்பனைக்கென சந்தைக்கு வழங்குதல் (Commercialize)

**வணிக உற்பத்திகள்**

வணிக உற்பத்திகளை 2 பிரிவுகளாக வகுக்க முடியும்

1. கூடிய பெறுமதியற்ற உருப்படிகள் (Inexpensive Items)
2. மூலதன உருப்படிகள் (capital Items)

**கூடிய பெறுமதியற்ற உருப்படிகள்**

இவை சாதாரணமாக விலை குறைந்த பண்டங்களாக காணப்படும். வியாபார நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் பேனைகள், கடதாசி, அச்சிடல் மை போன்றவற்றை குறிப்பிடமுடியும்.

**மூலதன உருப்படிகள்**

விலை கூடிய அதே போல நீண்ட காலம் பயன்படுத்தக்கூடிய பண்டங்களைக் குறிக்கும். வியாபார நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் தளபாடங்கள், அச்சிடல் இயந்திரம், கணனி என்பன இதற்கான உதாரணங்களாகும்.

மூலதன உருப்படிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்

1. மூலப்பொருட்கள் - உதாரணம் :- இரும்பு, எரிபொருள்
2. உதிரிப்பாகங்கள் - உதாரணம் :- இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும்
3. விநியோகம் - உதாரணம்:- எழுதுகருவி, மின்குமிழ்
4. பொருத்துதல் - உதாரணம் :- உற்பத்தி பொறி
5. உபகரணங்கள் - உதாரணம்:- தொலைபேசி, தொலைநகல், உபகரணம்
6. வணிக சேவைகள் - உதாரணம் :- சந்தைப்படுத்தல், ஆலோசனை

**உற்பத்தியொன்றின் வாழ்க்கைவட்டம்** (Product life cycle) (PLC)

உற்பத்தியை எவ்வாறு வகைப்படுத்திய போதிலும், சில உற்பத்திகள் நீடிய காலம் நிலைத்திருக்கும், சில குறுங்காலம் வரையிலேயே நிலைத்திருக்கும். இங்கு உற்பத்தியொன்றின் விற்பனை மற்றும் இலாப அளவுகளை 4 கட்டங்களாக பிரிக்க முடியும்.


1. அறிமுக கட்டம் (Introducrtion)
2. வளர்ச்சி மட்டம் (Growth)
3. முதிர்ச்சிக் கட்டம் (Maturity)
4. வீழ்ச்சிக் கட்டம் (Decline)

இவ்வாறு உற்பத்தி ஒவ்வொரு கட்டத்திற்கு பிரவேசிக்கும் போது பல்வேறு சந்தைப்படுத்தல் உபாயங்களை பயன்படுத்தல் வேண்டும். உற்பத்தியை வகுப்பு அடிப்படையிலும் உற்பத்தியை இயல்பு அடிப்படையிலும் உற்பத்தியை வியாபாரக்குறி அடிப்படையிலும் தெளிவு படுத்த முடியும்.

வகுப்பு மற்றும் உற்பத்தி இயல்பு கொண்ட உற்பத்திகள் நீண்ட வாழ்க்கை வட்டத்தைக் கொண்டிருக்கும். வியாபாரக்குறி அடிப்படையிலான உற்பத்திகளின் வாழ்வுக்காலம் குறைவாகும். குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் உற்பத்தி தங்கியிருத்தலானது பின்வரும் காரணங்களினால் தீர்மானிக்கப்படுகின்றது.

1. வாடிக்கையாளர்களின் தேவை, அவரின் பொருளாதார நிலைமை.
2. உற்பத்தியின் பண்பு
3. சந்தைப்படுத்தல் தந்திரோபாயம்.

கீழ்வரும் அட்டவணையானது Hybrid car, ipod, DVD, VCD ஆகிய நான்கு உற்பத்தி தொடர்பிலான வாழ்க்கை வட்டத்தைக் காட்டுகின்றது.




***அறிமுக கட்டம்***

இது PLC ன் முதலாவது கட்டமாகும். இக்காலப்பகுதியில் புதிய உற்பத்தியை சந்தைக்கு வழங்கி, கேள்வியை அதிகரிப்பதற்கான மேம்படுத்தல் இடம்பெறும். உற்பத்தி தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு தகவல் வழங்கப்படும். விநியோக வழிமுறை தீர்மானிக்கப்படும். இலாபம் குறைவாகவே காணப்படும். வெற்றிக்காக பாரிய முதலீட்டை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

***வளர்ச்சி கட்டம்***

PLCன் இரண்டாவது கட்டம் இதுவாகும். இக்கட்டத்தில் வேகமாக விற்பனை அதிகரிக்கும். இக்கட்டத்திலேயே போட்டியாளர்களும் பிரவேசிப்பர். விநியோக வரி, விநியோக தளங்கள் என்பன அதிகரிக்கும். சந்தையை மையப்படுத்துவதற்கு போட்டியாளர்கள் போட்டியிடுவர். மேம்படுத்தல் தொடர்பில் செலவீட்டினை மேற்கொள்ள வேண்டும். அதே போல போட்டி விலையொன்றை பேண வேண்டும். இலாபம், விற்பனை என்பன இக்கட்டத்தில் அதிகரித்து காணப்படும்.

***முதிர்ச்சி கட்டம்***

உற்பத்தி நீண்ட காலம் காணப்படும் கட்டம் இதுவே ஆகும். இக்கட்டத்தில் விற்பனை நிலையாக காணப்படும். ஆயினும் சற்று வீழ்ச்சியடையும். போட்டி அதிகமாக காணப்படும். உற்பத்தியின் சந்தை பங்கை அதிகரிக்க முடியாது. அது உச்ச அளவில் காணப்படும். மேம்படுத்தல் செலவு நிறுவப்படும். புதிய உற்பத்தி அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். இதற்கான முதலீட்டை மேற்கொள்ளுதல் வேண்டும். சில நிறுவனங்கள் தமது உற்பத்தியை இக்கட்டத்தில் நவீனப்படுத்துவார்.

இவ்வாறு மேற்கொள்வதனூடாக முதிர்ச்சி கட்டத்தின் காலத்தை அதிகரித்துக் கொள்ளலாம். நவீனமயப்படுத்தலில் உற்பத்தியில் தரம் மற்றும் செயற்திறன் என்பன அதிகரிக்கப்படும்.

***வீழ்ச்சி கட்டம்***

சாதாரணமாக முதிர்ச்சி கட்டம் நீண்டதாயினும் உற்பத்தி நிறுவனங்கள் வீழ்ச்சி கட்டத்தை அடைய வேண்டிய நிலை காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் விற்பனை, இலாபம் என்பன வீழ்ச்சியடையும்.

இதற்கான காரணங்கள்:-

1. சனத்தொகை காரணிகளில் ஏற்படும் மாற்றம்
2. சுவை மாற்றம்
3. போட்டி
4. உயர் தொழில்நுட்பங்களின் வருகை.

இக்கட்டத்தில் நிறுவனமானது உற்பத்தியை தொடர்ந்தும் மேற்கொள்வதா? இல்லையா? என்பதை தீர்மானித்தல் வேண்டும்.

உசாத்துணை நூல்கள் :

வணிகக்கல்வி "ஜெகத்பண்டாரநாயக்கா"



# பொருளாதார வளர்ச்சி - ஓர் நோக்கு

## *ECONOMIC GROWTH – A review.*

திரு.சி.உதயகுமார்
சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் – *I*
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

பொருளாதார வளர்ச்சி என்பதனையும் பொருளாதார அபிவிருத்தி என்பதனையும் ஒரே கருத்தில் சிலர் பயன்படுத்தினாலும் அவற்றிற்கிடையிலான வேறுபாட்டினை அறிந்து கொள்வது அவசியமானதாகும். பொருளாதார வளர்ச்சி (Economic Growth) என்பது தேசிய வருமானத்தில் நீண்டகாலத்திற்கு அதிகரிப்பு ஏற்பட்டுக் கொண்டு செல்வதைக் கருதுகின்றது. பொருளாதார அபிவிருத்தி (Economic Development) என்பது தனியே தேசிய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பை மாத்திரம் கவனத்தில் கொள்ளாமல், சமுதாய, கலை, கலாச்சார மற்றும் பண்பாட்டு விடயங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டு செல்வதையும் கவனத்தில் கொள்கிறது. எனவே பொருளாதார அபிவிருத்தி என்ற விடயம் பலபரிமாணம் கொண்டதாக உள்ளது. எனவே நாம் பொருளாதார வளர்ச்சி என்பதை பின்வருமாறு வரையறுக்கலாம்.

1. நீண்டகாலத்திற்கு ஒரு பொருளாதாரத்தின் மெய்த்தேசிய வருமானம் அதிகரித்துக் கொண்டு செல்வதையே பொருளாதார வளர்ச்சி கருதுகின்றது. நிலையான விலைகளில் தேறிய தேசிய வருமானம் அதிகரித்துக் கொண்டு செல்வதை பொருளாதார வளர்ச்சி என்பது கருதும். இந்த வரைவிலக்கணமானது போதுமான விளக்கத்தினைத் தரவில்லை என சில பொருளியலாளர்கள் விமர்சனம் செய்தனர்.
2. மொத்த தேசிய வருமானம் அதிகரித்துக் கொண்டு சென்றாலும் சனத்தொகை அதிகரிப்பு வீதமானது தேசிய வருமான வளர்ச்சி வீதத்தினை விடக் கூடுதலாக இருக்குமாயின் மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும். இந்நிலையில் நீண்டகாலத்திற்கு தலா வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுக் கொண்டு செல்லும் நிலையினையே பொருளாதார வளர்ச்சி எனக் குறிப்பிட்டனர். ஆகவே தொடர்ந்து தலா வருமானம் அதிகரித்துக் கொண்டு செல்லும் நிலையே பொருளாதார வளர்ச்சியாகும். (Magic; 72) ஒரு நாட்டில் தொடர்ச்சியாக வருடாந்தம் 7% வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு சென்றால் பத்து வருடங்களுக்கு ஒரு முறை அந்த நாட்டின் தேசிய வருமானம் இருமடங்காக அமையும்.

நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக + ம் 10, 15, 25 வருடங்கள்) மெய் உள்நாட்டு அல்லது தேசிய உற்பத்தியின் வருடாந்த வளர்ச்சி வேகத்தினைக் கணிப்பதன் மூலம் இவ்வேகம் அளவிடப்படுகின்றது.

## பொருளாதார வளர்ச்சியின் மூலக்கூறுகள்

எந்த ஒரு சமூகத்திலும் பொருளாதார வளர்ச்சியின் மூலக்கூறுகளில் பின்வரும் மூன்று விடயங்கள் பிரதான இடம் பெறுகின்றன.

1. மூலதனத் திரட்சி (Capital Accumulation) இதற்குள் நிலத்தில் செய்யப்படும் புதிய முதலீடுகள் பௌதிகக்கருவிகள் போன்ற பௌதீக முதலீடுகளும் சுகாதாரம், கல்வி, தொழிற்பயிற்சி போன்றவற்றின் மூலம் முன்னேற்றப்படும் மற்றும் செய்யப்படும் மனித மூலதனம் என்பன அடங்கும்.
2. சனத்தொகை வளர்ச்சி மற்றும் அதனூடாக உழைப்புச்சக்தியில் ஏற்படும் வளர்ச்சி
3. தொழில்நுட்ப முன்னேற்றம்

## மூலதனத் திரட்சி (Capital Accumulation)

தற்போதைய வருமானத்தில் ஒரு பகுதியை சேமித்து எதிர்காலத்தில் வெளியீடு மற்றும் வருமானம் என்பனவற்றை அதிகரிப்பதற்கு முதலிடப்படும் போது மூலதனத்திரட்சி ஏற்படுகின்றது. புதிய தொழிற்சாலைகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் நாட்டின் பௌதீக முதலிருப்பை அதிகரிக்கும் சாதனங்கள் என்பன வெளியீட்டை அதிகரிப்பதற்கு உதவி செய்கின்றன. இவ்வாறு நேரடியான உற்பத்தி முதலீடுகளுடன் சமூகப்பொது முதலீடுகளான தெருக்கள், மின்சாரம், நீர்வசதி, தொலைத்தொடர்பு வசதி போன்றவையும் இணையும் போது பொருளாதார வளர்ச்சியும், பொருளாதார நடவடிக்கைகளும் அதிகரிக்கின்றன. புதிய உழவு இயந்திரம் ஒன்றில் முதலீடு செய்யும் விவசாயி அதன் துணையுடன் தனது மரக்கறி உற்பதியினை அதிகரிக்கலாம். அதே வேளையில் மேலதிக உற்பத்தியை சந்தைக்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதி இல்லாவிடில் அவரது முதலீடு தேசிய உணவு உற்பத்திக்கு அதிகரிப்பைச் செய்யாமல் இருக்கலாம்.

நீர்ப்பாசன வசதிகளைப் பயிர் செய்யும் நிலங்களுக்குச் செய்து கொடுக்கின்றபோது, ஏக்கருக்கான விளைச்சலை அதிகரிக்க முடியும். அத்துடன் இரசாயன உரம், களைகொல்லி, போன்றனவும் விளைச்சலை அதிகரிக்க உதவி செய்யும்.

மேலும் மனிதமூலதனத்தில் ஏற்படும் முன்னேற்றமும் உற்பத்தியை அதிகரிக்க உதவி செய்யும். பாடசாலைக்கல்வி, பயிற்சி வகுப்புக்கள், முறைசாராக்கல்வி போன்றனவும், மற்றும் கல்விக்கான கட்டடங்கள், கருவிகள், சாதனங்கள் {Materials, புத்தகங்கள் (Books), Film Projectors, தனியார் கணனி (Private computer),

விஞ்ஞானக்கருவிகள் (Science equpments) இயந்திரம் (Mechinery), Lathes Garinders} என்பனவும் மனித மூலதனத்தில் மேம்பாட்டை ஏற்படுத்த உதவும். உயர்தர பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தரமான பாடப்புத்தகங்கள் என்பவையும் உழைப்பாளரின் தரம், தலைமைத்துவம் ஆகியவற்றில் பாரிய வேறுபாட்டை ஏற்படுத்தும். சுகாதார வசதிகளில் ஏற்படும் முன்னேற்றம் உற்பத்தித்திறனில் அதிகரிப்பினை ஏற்படுத்தும்.


மேற்கூறியவகையில் செய்யப்படும் முதலீட்டு நடவடிக்கைகள் யாவும் முதல்திரட்சிக்கு வழிவகுக்கும். புதிய நிலங்களை பயிர்ச்செய்கைக்கு கொண்டுவருதல் (Eg. the clearing of unused land) இருக்கின்ற வளங்களின் தரங்களை உயர்த்துதல் (irrigation) போன்றனவும் தற்போது நுகர்வுக்கும் எதிர்கால நுகர்வுக்கும் இடையே செய்யப்படும் விட்டுக்கொடுப்பும் (trade-off) மூலதனத் திரட்சிக்குள் அடக்கப்படும் (Giving up little now so that more can be had later, such as giving up current income to stay in school)

## சனத்தொகை மற்றும் வேலைப்படை வளர்ச்சி- POPULATION AND LABOUR FORCE GROWTH

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்றாக சனத்தொகை வளர்ச்சியும், அதனூடாக பெறப்படும் உழைப்பு சக்தியில் ஏற்படும் அதிகரிப்பும், அமைகின்றது. அதிக உழைப்பாளர் தொகை என்பதன் கருத்து யாதெனில் உற்பத்தியைத் தரும் தொழிலாளர்கள் அதிகம் உள்ளனர் என்பதுடன் உள்நாட்டு சந்தையின் அளவும் பெரிதாக இருக்கும் என்பதாகும். எனினும் அதிகரிக்கும் சனத்தொகை என்பது மிகை உழைப்பைக் கொண்ட வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துகின்றதா? என்பது கேள்விக்குரிய ஒன்றாகும். இந்த நாடுகளில் ஏற்படும் சனத்தொகை வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியின் மீது நேரான தாக்கத்தினையா அல்லது எதிரான தாக்கத்தினையா ஏற்படுத்துகின்றது என்பது பல காரணிகளில் தங்கியிருக்கும். குறிப்பிட்ட பொருளாதாரம் அதிகரிக்கும் சனத்தொகைக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நிலையில் உள்ளதா? மற்றும் புதிய தொழிலாளர்கள் நிருவாக, முகாமைத்துவ ஆற்றல்களைக் கொண்டுள்ளனரா? போன்ற பலவிடயங்கள் இதனைத் தீர்மானிப்பதாக இருக்கும்.

பொருளதார வளர்ச்சியினைத் தீர்மானிக்கும் மூன்றாவது காரணியான தொழில்நுட்பத்தினை நோக்குவதற்கு முன் மூலதனத் திரட்சியையும் தொழிலாளர் தொகையையும் வைத்து பொருளதார வளர்ச்சி பற்றி உற்ப்பததி சாத்திய வளைகோட்டின் உதவியுடன் சில விடயங்களை ஆராய்வோம். தொழில்நுட்ப நிலமை மாறாதிருக்கையில் கொடுக்கப்பட்ட பௌதிக, மனித வளங்களைக் கொண்டு இரண்டு பொருட்களில் உச்சமாக உற்பத்தி செய்யக்கூடிய சேர்க்கைகளைக் காட்டுவதாக உற்பத்தி சாத்திய வளைகோடு அமைகின்றது. தொழில்நுட்ப நிலமை மாறாதிருக்கையில் பௌதிக மனித மூலவளங்களை இருமடங்காக அதிகரிப்பின், அரிசி, றேடியோ ஆகிய இரு பொருட்களின் உற்பத்தியையும் இருமடங்காக அதிகரிக்க


முடியும் என்பதை PP இலிருந்து உற்பத்தி சாத்திய வளை கோடு $P^1P^1$ என நகர்வது காட்டி நிற்கின்றது.




வரைபடத்தில் ஆரம்பத்தில் நாடு X என்ற புள்ளியில் உள்ளபோது, பௌதிக மனித மூலவளங்கள் பயன்படுத்தப்படவில்லை. X இலிருந்து $X^1$ க்குச் செல்லும் போது இரு பொருட்களின் உற்பத்திகளில் முன்பிலும் பார்க்க அதிகரிப்புக் காணப்படினும் வேலையின்மையும், முதல், நிலம் என்பன முற்றாகப் பயன்படுத்தப்படாத நிலையும் காணப்படுவதை நோக்கலாம். இந்நிலையே தற்போது பலகுறைவிருத்தி நாடுகளில் காணப்படுகின்றது. இந்த நிலையில் குறுங்காலத்தில் கூட உற்பத்தியை அதிகரிப்பதற்கு பௌதிக, மனித மூலவளங்களை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. மூலவளங்களைத் திறமையாகப் பயன்படுத்துவதன் மூலம் X இலிருந்து X1 இற்கோ அல்லது PP என்ற உற்பத்தி சாத்திய வளைகோட்டில் உள்ள ஒரு புள்ளிக்கொ செல்ல முடியும். நீண்டகாலத்தில் இருக்கின்ற வளங்களின் தரத்தை முன்னேற்றுவதன் மூலமும் மூலவளங்களின் தொகையினை அதிகரிப்பதன் மூலமும் தேசிய வெளியீட்டின் வளர்ச்சியினை துரிதப்படுத்த முடியும்.


தற்போது எல்லா உற்பத்திக்காரணிகளும் சமமான விகிதத்தில் வளர்ச்சியடைந்தால் உற்பத்தி சாத்திய வளையியானது PP இலிருந்து $P^1P^1$ ஆக நகரும். ஏல்லா உற்பத்திக்காரணிகளும் சமமான வீதாசாரத்தில் வளர்ச்சியடைகின்றன என எடுத்துக் கொள்வதற்குப் பதிலாகத் தனியே முதலில் (Capital) மட்டும் விரைவான அதிகரிப்பு ஏற்படுகின்றதென எடுப்போம். மேலும் Radio – Capital இனை அதிகம் உபயோகப்படுத்துகின்றது. அரிசி - உழைப்பை அதிகம் உபயோகப்படுத்துகின்றது. இரண்டும் தனித்தனியே அதிகரிப்பின் உற்பத்தி சாத்திய வளைகோடு பின்வருமாறு அமையும்.

Relatively Capital intensive




a). Growth in Capital stock

Relatively Land intensive




b).Growth in land

**தொழில்நுட்ப முன்னேற்றம்** - Technological Progress

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக தொழில்நுட்ப முன்னேற்றம் அமைகின்றது. வழக்கமாக செய்து வருகின்ற உற்பத்தி முறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதையும், புதிய முறைகளைக் கண்டுபிடிப்பதையும் **தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது கருதுகின்றது. பயிர்செய் முறைகளில், ஆடை செய்வதில், வீடுகட்டுவதில் எல்லாம் தொழில்நுட்ப முன்னேற்றத்தினை ஏற்படுத்தலாம்.**

**தொழில்நுட்ப முன்னேற்றத்தினை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.**

1. **நடுநிலைத் தன்மையான தொழில்நுட்ப முன்னேற்றம்**
2. **உழைப்பு – சேமிப்பு தொழில்நுட்ப முன்னேற்றம்**
3. **முதல் - சேமிப்பு தொழில்நுட்ப முன்னேற்றம்**


**முன்னர் பயன்படுத்தப்பட்ட அதே உள்ளீட்டுச் சேர்கைகளைப் பயன்படுத்தி உழைப்பு சார்ந்தோ முதல் சார்ந்தோ அல்லாமல் முன்பிலும் பார்க்கக் கூடியளவு வெளியீட்டைப் பெறமுடிவதை நடுநிலைத் தன்மையான தொழில்நுட்ப முன்னேற்றம் எனலாம். தொழிற்பிரிப்பு காரணமாக ஏற்படும் சிறப்புத் தேர்ச்சியால் ஏற்படக்கூடிய சிறிய கண்டு பிடிப்புக்கள் கூட உற்பத்தியை உயர்த்த வல்லவையாக இருப்பதுடன் தனிப்பட்டவர்களுக்கும் கூடியளவு நுகர்வினை வழங்கும். இதனை உற்பத்தி சாத்திய வளைகோட்டினூடாக நோக்கும் போது** Neutral Technical Progress **என்பது புதிய உற்பத்தி சாத்திய வளைகோடானது பழைய உற்பத்தி சாத்திய வளைகோட்டிலிருந்து சமமான அளவில் வெளிப்பக்கம் நகரச் செய்யும். (படம் முன்பு காட்டப்பட்டுள்ளது). இங்கு உற்பத்திக்காரணிகளின் அளவு மாற்றமடையவில்லை என்பது கவனிக்கத்தக்கது.**


**மேற்கூறியதற்கு மாறாகத் தொழில்நுட்ப முன்னேற்றம் உழைப்பு சேமிப்பு வாய்ந்ததாகவோ அல்லது முதல் சேமிப்பு வாய்ந்ததாகவோ கூட இருக்கலாம்.**

இவ்வகையில் உழைப்பு - சேமிப்பு தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது கணனி Internet, Automated looms, high – speed electric drills, tractors, mach ploughs போன்றன மற்றும் பலவகையான நவீன இயந்திரங்கள், கருவிகள் உழைப்பு –சேமிப்பு தொழில்நுட்பத்த்திற்குள் அடங்குகின்றது. கடந்த நூற்ற பலவிதமான உற்பத்திகளில் ஊழிய சேமிப்பு தொழில்நுட்பம் காணப்பட்டது. தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்ட நாடுகளில் உழைப்பாளர் பற்றா இருந்தமையும், அதனை நீக்குவதற்காக செய்யப்பட்ட ஆராய்ச்சிகளு Technical Progress since the late 19th century has consisted largely of advances in labor saving technologies for production everything from be bicycles to bridges.

முதல் - சேமிப்பு தொழில்நுட்ப முன்னேற்றம் அருமையானதாகவே காணப்படுகி காரணம் உலக பெரும்பாலும் விஞ்ஞான, தொழில்நுட்ப ஆய்வுகள் பெரும் வளர்ச்சி அடைந்த நாடுகளிலேயே நடாத்தப்படுகின்றன. அங்கு உ பற்றாக்குறையாக இருப்பதால் உழைப்பு சேமிப்பு தொழில்நுட்பக் கண் பிடிப்புக்களிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. ஆனால் குறைவிருத்தி நா குறித்து இதுவே அவசியமானதாக அமைகின்றது.

தொழில்நுட்ப முன்னேற்றம் உழைப்பு விரிவாக்க தொழில்நுட்ப முன்னேற்றம் (Lab Augmenting Technical Progress) என்றும் முதல் விரிவாக்க தொழில் முன்னேற்றம் (Capital Augmenting Technical Progress) என்றும் இருக்கலாம். உழைப்பினரின் தரத்தை அல்லது திறமையை உயர்த்துமாயின் அது Labour Augmenting Technical Progress ஆகும். உதாரணமாக வகுப்ப கற்பித்தலுக்குரிய Video tapes., T.V, ஏனைய இலத்திரனியல் கருவிகளைப் பாவி உழைப்பு விரிவாக்க தொழில்நுட்ப முன்னேற்றம் (Technical Progress Technical Progress) ஆகும். இருக்கின்ற முதலை அதிக உற்பத்தி தரத்தக்க வகையில் பயன்படுத்துவது முதல் விரிவாக்க தொழில்நுட்ப முன்னேற்றம் (Capital Augmenting Technical Progress) ஆகும். மரக்கலப்பையை, உருக்குக் கலப்பையாக மாற்றுவது முதல் விரிவாக்க தொழில்நுட்ப முன்னேற்றம் (Capital Augmenting Technical Progress) ஆகும். இவை உற்பத்தியை அதிகரிக்க உதவுகின்றன. உற்பத்தி சாத்திய வளைகோட்டின் மூலம் Labour Technical Progress, Captial Technical Progress என்பன காரணமாக உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பைக் காட்டலாம்.



1960களில் IR – 8 அரிசிக் கண்டுபிடிப்பின் விவசாயிகள் தமது உற்பத்தியை பன்மடங்காக அதிகரிக்க முடிந்தது. (பசளை, கிருமிநாசினி ஆகியன பயன்படுத்தப்படுத்தலுடன்) இதனை Land Augmenting எனவும் அழைக்கலாம். இங்கு வானொலி உற்பத்தி அதிகரிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

Radio தொழில்நுட்பத்தின் Transister கண்டுபிடிக்கப்பட்டமை முன்னேற்றத்தினைக் கொண்டு வந்தது. மிகப் பின்தங்கிய கிராமங்களுக்கும் கையடக்கத் தொலைபேசிகளைக் (Cell Phones) கொண்டு செல்ல முடிந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் நவீன பொருளாதார வளர்ச்சி தொடர்பான பொருளியலாளர்களது கருத்துக்களை நோக்குவது அவசியமாகும்.

## நவீன பொருளாதார வளர்ச்சி (Modern Economic Growth) பற்றிய பார்வை

நவீன பொருளாதார வளர்ச்சி தொடர்பாக சைமன் குஸ்நெற்ஸின் (Simon Kuznets) கருத்தினை நோக்கும் போது, வளர்ச்சியடைந்த நாடுகளில் வரலாற்று ரீதியான தேசிய வருமான வளர்ச்சி அளவீடும் ஆய்வும் என்ற விடயத்திற்காக 1971 இல் நோபல் பரிசைப்பெற்ற Simon Kuznets என்பவர் ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றார். "a long – term rise in capacity to supply increasingly diverse economic goods to its population, this growing capacity based on advancing technology and the institutional and idealogical adjustments that its demands: (Moderm Economic Growth 1966).

குறிப்பிட்ட நாட்டினுடைய மக்களைக் குறித்து பன்முகப்பட்ட பொருளாதாரப் பொருட்களின் நிரம்பலைச் செய்யும் இயலளவு நீண்டகாலத்தில் அதிகரித்துச் செல்வதையும், இவ்வளர்ந்து செல்லும் இயலளவு முன்னேறிச் செல்லும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதையும், அதற்கேற்ற வகையில் நிறுவன ரீதியான கருத்தியல் ரீதியான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்பதையுமே பொருளாதார வளர்ச்சி குறிக்கின்றது.

இதில் குறிப்பிடப்படும் மூன்று விடயங்களும் மிகப் பிரதானமானவையாகும்.

1. தேசிய வருமானத்தில் ஏற்படும் தொடர்ந்தேர்ச்சியான அதிகரிப்பு பொருளதார வளர்ச்சியினைக் காட்டும் ஒரு பண்பாகும். அத்துடன் பல்வேறுவகைப்பட்ட பொருட்களையும் வாங்கக்கூடியதாக இருக்கும் தகுதியென்பது பொருளாதார முதிர்ச்சியின் குறியீடாகும்.
2. முன்னேறிச் செல்லும் தொழில்நுட்பம் என்பது, தொடர்ந்தேர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அல்லது முன்நிபந்தனையாக அமையும். இது அத்தியாவசியமான ஆனால் போதுமான நிபந்தனையல்ல – (a necessary but not sufficient conditions).
3. முன்னேறிச் செல்லும் மனித அறிவின் இருப்பினால் (Stock of Human Knowledge) ஏற்படுத்தப்படும் புத்தாக்கங்களை திறமையான முறையில் பயன்படுத்த அதாவது தொழில்நுட்ப முன்னேற்றங்களை பரந்த அளவில்

விருத்திக்குப் பயன்படுத்த, நிறுவன ரீதியான கருத்தியல் ரீதியான மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். அதாவது நவீன தொழில்நுட்பக் கண்டு பிடிப்புக்களுக்கு ஏற்ப சமூகம் மாற்றமடைந்து செல்ல வேண்டும்.

நவீன பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு பொருளாதார திருப்புமுனையைக் குறித்து நிற்கின்றது. பேராசிரியர் சைமன் குஸ்நெற்ஸ் வளர்ச்சியடைந்து பொருளாதாரங்களின் தேசிய வருமானத்தினையும் அவற்றின் மூலக்கூறுகளான சனத்தொகை தொழிலாளர்படை போன்ற விடயங்களையும் ஆராய்ந்து நவீன பொருளதார வளர்ச்சி 6 குணாம்சங்களை (1. High Rates of growth of per capital output and Population, 2. High Rates of increase in total factor Productivity - especially Labour Productivity (The rise in Productivity), 3. High Rate of Structural Transformation, 4. High Rates of Social and Ideological Transformation, 5. The Limited Spread of this Economic Grwoth to only a third of the World's Population, 6. The Outward Expansion of DCs) கொண்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள Kuznets என்ற பொருளியலாளர் நவீன பொருளதார வளர்ச்சியில் தொழில்நுட்ப வளர்ச்சியில் 5 வகையான அமைப்பு (Patterns) உள்ளதெனவும் கூறுகின்றார். அந்த 5 வகையான அமைப்புக்களையும் பின்வருமாறு பட்டியலிட்டுள்ளார்.

1) விஞ்ஞானக்கண்டுபிடிப்பு அல்லது தொழில்நுட்ப அறிவின் அதிகரிப்பு
   A Scientific discovery or an addition to technical knowledge.
2) An invention – புதிய கண்டுபிடிப்பு
3) an innovation – புது முறைகாணுதல்
4) an improvement – முன்னேற்றம்
5) Speed of invention usually accompanied by improvements.

ஸ்கூம்பீற்றர் (Schumpeter) என்பவர் Innovation என்பதே பொருளாதார வளர்ச்சி குறித்து முக்கியமானதாக அமைகின்ற தொழில்நுட்ப காரணி எனக் குறிப்பிடுகின்றார். நவீன பொருளதார வளர்ச்சிக்கு மேலே குஸ்நெட்ஸால் கூறப்பட்ட மேற்படி ஐந்து காரணங்களும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு உதவியுள்ளன. LDC கள் தாமே புதிய கண்டுபிடிப்புக்களை ஏற்படுத்தும் வரை பொறுத்திருக்காமல் குறுங்காலத்தில் தமது உற்பத்தி இயலளவை விரைவாக அதிகரிப்பதற்கு நவீன தொழில்நுட்பத்தினை இறக்குமதி செய்ய வேண்டுமென Kuznets என்ற பொருளியலாளர் கூறுகின்றார். வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அதே வேளையில் சுதேசிய தொழில்நுட்பங்களையும் LDC கள் விருத்தியடையச் செய்தல் வேண்டும்.

விருத்தியடைந்த நாடுகளின் தொழில்நுட்ப விருத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் LDC கள் நன்மை பெறமுடியும் இருப்பினும், அவற்றைப் பயன்படுத்தும்போது, சமூக, பொருளதார தொழில்நுட்ப ரீதியான உறிஞ்சல் இயலளவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாட்டினதும் காரணி வளங்களுக்கேற்ப எவ்வாறு தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டுமென்பது தொடர்பாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களுடன் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய இடம்பெறும் ஒழுங்கமைத்தல் (Organization) பற்றியும் கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

## பொருளாதார வளர்ச்சிச் செயன்முறையில் ஒழுங்கமைத்தல் (Organization)

வளர்ச்சிச் செயன்முறையில் ஒழுங்கமைப்பும் முக்கிய இடம்பெறுகின்றது. பொருளதார நடவடிக்கைகளில் உற்பத்திக் காரணிகளின் உத்தம பயன்பாட்டுடன் இது தொடர்புபட்டதாக அமைகின்றது. ஒழுங்கமைப்பு என்பது முதல் உழைப்பு என்பதற்கு நிரப்புத்தன்மை (Complement) வாய்ந்ததாக அமைவதுடன், உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவி செய்கின்றது. நவீன பொருளதார வளர்ச்சியில் முயற்சியாளர் (entrepreneur) என்பவர் ஒழுங்கமைப்பாளராக இருப்பதுடன், ஆபத்து, மற்றும் நிட்சயமற்ற தன்மை ஆகியவற்றினைத் தாங்குபவராகவும் உள்ளார். முயற்சியாளர் என்பவர் சாதாரண தகுதி கொண்ட மனிதர் அல்ல. சரியான சந்தர்ப்பங்களை அறிந்து, வெற்றிதரத்தக்க வகையில் புதிய பொருட்கள், புதிய தொழில்நுட்பம், நிரம்பலுக்கான புதிய மூலங்கள் (Sources) என்பவற்றை அறிமுகப்படுத்தும் தகுதியைக் கொண்டவராகவும், இயந்திரங்கள், நிருவாகம், உழைப்பு சக்தி போன்றவற்றை ஒருங்கிணைக்கக்கூடியவராகவும் இருக்க வேண்டும். 19ம் நூற்றாண்டில் இயந்திரக் கைத்தொழில் புரட்சி ஏற்படவும், 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் அமெரிக்காவில் பொருளதார வளர்ச்சி ஏற்படவும் முக்கியமாக இருந்தவர்கள் முயற்சியாளர்களே.

LDC களில் முயற்சியாளர் நடவடிக்கை குறைவாகவே உள்ளது. சிறிய அளவுசந்தை, குறைவான முதல், தொழில்நுட்பரீதியில் பின்தங்கி இருத்தல், ஒப்பந்த உரிமை, சொத்துரிமை என்பன இல்லாதிருத்தல், பயிற்சிபெற்ற, மற்றும் திறமைவாய்ந்த தொழிலாளரின்மை, சமூக பொது முதலீடுகளில் குறைபாடு போன்றவற்றால் நிட்சயமின்மையும், ஆபத்துக்களும் LDC களில் கூடுதலாகக் காணப்படுகின்றது. Myrdal என்பவரின் கருத்துப்படி முயற்சியாண்மை entrepreneurship குறைவாகக் காணப்படுவதற்கு இந்த நாடுகளில் முதல் குறைவோ அல்லது மூலப்பொருள் குறைவோ காரணமல்ல. முயற்சியாண்மைக்கான சரியான நோக்குடைய ஆட்களின்மையே அதற்குக் காரணமாகும். யப்பானியர்கள் சாதாரணமாக முயற்சியாண்மைக்குரிய தகுதியைக் கொண்டுள்ளார்கள்.

### தொகுப்புரை

முயற்சியாண்மை அதிகரிக்கக்கூடிய சூழ்நிலையை LDC கள் உருவாக்கக்கூடிய சூழ்நிலையை LDC கள் உருவாக்க வேண்டும். தனியுரிமைப்போட்டி நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். சந்தையில் காணப்படும் குறைபாடுகள் களையப்பட வேண்டும். சந்தை சந்தர்ப்பங்கள் பற்றிய அறிவு அதிகரிக்கப்பட வேண்டும். சொத்துடைமையைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கான காரணிகளை ஆராயும் போது பலகார்ணிகள் அதில் பங்குபெறுவதை அறியலாம். எனினும் இருக்கின்ற பௌதிக,

மனித மூலவளங்களை முன்னேற்றுவதற்குச் செய்யப்படுகின்ற முதலீடுகள் இவ்வுற்பத்தி வளங்களின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு, புதிய கண்டுபிடிப்பு (Invention) புத்தாக்கம் (Innovation) தொழில்நுட்ப முன்னேற்றம் (Technical progress) ஆகியவற்றால் ஏற்படும் உற்பத்தித்திறன் (Productivity) அதிகரிப்பே பொருளதார வளர்ச்சிக்குப் பெரும்பங்கினை ஆற்றுகின்றன. இவ்வகையில் உற்பத்திச் சாத்திய வளக்கோட்டு ஆய்வானது ஒரு பொருளதாரத்திற்குக் கிடைக்கக்கூடிய உற்பத்தித் தெரிவுகளை ஆய்வு செய்வதற்கு எங்களுக்கு உதவி செய்கின்றது. அத்துடன் வெளியீட்டுக்கான அமையச்செலவு (Opportunity Cost), வெளியீடு, மற்றும் உள்ளீடுகளில் பயன்படுத்தப்படாமலும், குறைநிலையில் பயன்படுத்தப்படுவதுமான வளங்கள் (Underutilized Resources) என்பவற்றை அறியவும் அதிகரித்த வளங்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றங்கள் என்பவற்றால் பொருளாதார வளர்ச்சியில் ஏற்படும் தாக்கங்களை அறியவும் பயன்படுகின்றது.

### உசாத்துணைகள்


1). Michael P. Todaro, (2000), "**Economic Development**" Seventh Edition, New York University,

2). Michael P. Todaro & Stephen C. Smith (2003), "**Economic Development**" Eighth Edition, New York University,

3). Rostow.W.W. (1960), "The Stages of Economic Growth" 'The TAKE- OFF' Chapter 4, PP:36-58.

4). Ahuja, H.L. (2000), "Modern Economics" Part IX Chapter 38, 45, 46, 47 'Development Economics' Tenth Edition, University of Delhi, PP:


**உனது எல்லா நாள்களிலும்**
**தயாராக இரு**
**எவரையும் சம உணர்வோடு சந்தி**
**நீ பட்டறைக் கல்லானால் அடி**
**தாங்கு**
**நீ சுத்தியானால் அடி**

**-- அப்துல் கலாம் --**

# இலங்கை கணக்கீட்டு நியமங்கள் :

# ஒரு பார்வை

**கலாநிதி. பு. பிரதீபகாந்**
**B.Com (Hons); PhD (Australia)**
**கணக்கியல் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**

**சுருக்கம்**

உலகம் முழுவதிலும் பரந்து காணப்படும் வெவ்வேறு வணிக அமைப்புகள் தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினருக்கு வணிக வளங்களைக் பயன்படுத்துவதானால் உருவாக்கப்படும் பொருளாதார விளைவுகள் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்க்காக தாயாரிக்கபடும் அறிக்கைகள் நிதிக்கூற்றுக்களாகும். வணிகத்தில் அக்கறை கொள்ளுகின்ற வெவ்வேறு தரப்பினர்கள் நிதித்தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுப்பதற்க்கு நிதிக்கூற்றுக்களை வினைத்திறனாக தயாரிப்பதற்கு கணக்கீட்டு நியமங்கள் உதவுகின்றன.

**அறிமுகம்**

கணக்கீட்டு நியமங்கள் என்பது குறித்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வேறு நிகழ்வுகள் எவ்வாறு கணக்கீட்டுக் கூற்றுக்களில் வெளிப்படுத்தவேண்டும் என அறிவுறுத்துகின்ற கூற்றுக்களாகும். குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளினை கணக்கீட்டு கூற்றில் உண்மையாகவும் மெய்மையாகவும் பிரசுரிப்பதற்கு அவற்றை கணக்கீட்டு நியமங்களை கண்டிப்பாக இணங்க தயாரிப்பது அவசியமாகும். கணக்கீட்டு நியமங்களை நிறுவுவதற்கு சாதகமான சில காரணங்கள் உண்டு அவையாவான:

- கணக்கீட்டு கூற்றுக்களின் ஒப்பீட்டு தன்மையினை முன்னேற்றமடையச் செய்வது. (இவ் ஒப்பீடு கம்பனிக்கு இடையிலும் மற்றும் வெவ்வேறு கணக்கியல் காலப்பகுதியிலும் ஒப்பிட முடியும்).
- கணக்கீட்டு நியமங்கள் அறிக்கையிடுவதில் அர்த்தமுள்ள வெளிப்படுத்தல்களை ஊக்குவித்தல்.
- நியமங்களினை அறிமுகப்படுத்துவதன் மூலம் கணக்கியல் கூற்றுக்களினை பயன்படுத்துவோருக்கு அது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

கூற்றுக்கள் கணக்கீட்டு நியமங்களுக்கு கணக்கியல்
பயனுடையதாக அமையும்.

- கணக்கீட்டு நியமங்கள் கணக்கியலுக்கான தத்துவங்களுக்கான அடிப்படையை கண்டு கொள்வதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

அதே நேரம் கணக்கீட்டு நியமங்களினை வடிவமைப்பதன் எதிரான வாதங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன அவையாவான:

- மாற்று வழிகளுக்கான பரிகாரத் தெரிவில் வரையறைகள்: ஒரு குறித்த கணக்கீட்டு பிரச்சினைக்கான மாற்றுத்தீர்வுக்ள் அவற்றை சிபார்சு செய்வதில் வாதப் பிரதிவாதங்கள் காணப்படலாம்.

- இணக்கமின்மை: கணக்கீட்டு நியமங்களினைப் பிரயோகிப்பதில் இணக்கமின்மை காணப்படும் நிலை காணப்படலாம். நிதிக் கணக்கியல் சபையின் ஆராய்ச்சி மாற்றுத் தொழில்நுட்பப்பணிப்பாளர் மைக்கல் அலக்சான்டர் சட்ட விதிகளின் திருப்தியற்ற நிலை காரணமாக நியமங்களுக்கான தேவை பெரிதும் வேண்டப்படுவதாக கூறினார்.

- நியதிச் சட்டத்தினை மீற முடியாது: கணக்கீடுகள் நியமங்கள் நியதிச் சட்டத்தினை மீற முடியாது.

அதே வேளை IASB புதிய சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களை (IFRS) உருவாக்கி வெளியிடுகின்றது. 2012ம் ஆண்டின் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனமானது IASB வெளியிட்ட அனைத்துப் பிரகடனங்களையும் இடைவெளியைக் குறைத்து, முழுமையாக பின்பற்றி, பின்னர் காலப்போக்கில் IASB ஆல் வெளியிடப்பட்ட அனைத்துப் பிரகடனங்களையும் ஏற்றுக் கொள்வதெனவும் தீர்மானித்தது.

*சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் ஸ்தாபனம்*

இது நிதி அறிக்கையிடலுக்கான ஓர் உலகளாவிய ஸ்தாபனம் ஆகும். அதனுடைய இலக்குகளாவன,

- மக்கள் நலன் கருதி, அதிதரம் வாய்ந்த, புரிந்துகொள்ளக்கூடிய, அமுலாக்கப்படக்கூடிய, உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி அறிக்கையிடலை தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்குவதே ஆகும்.

- அந்த நியமங்களின் பயன்பாட்டையும் கடுமையான அமுலாக்குவதை ஊக்குவிப்பது.

- சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களை ஏற்றுக்கொள்வதற்கு ஊக்கமளித்தலும், உதவுதலும்.

**கணக்கீட்டு நியமங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன மற்றும் அவை எவ்வாறு இலங்கையில் அமுல்படுத்தப்படுகின்றன.**

**1995ம் ஆண்டின் 15ம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு சட்டம்**

(i) கணக்கீட்டு நியமங்களினை உருவாக்குவதற்கான 12 அங்கத்தவர்கள் கொண்ட குழுவினை நியமித்தல். அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

a. பட்டயக் கணக்கறிஞர் அங்கத்தவர்கள் (அதன் தலைவர் உட்பட)

b. CIMA இன் இலங்கைக் கிளையினால் பெயரிடப்பட்ட அங்கத்தவர்கள்

c. கம்பனிப்பதிவாளர்

d. கிளைகள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம்

e. இலங்கை மத்திய வங்கியின் ஆளுனரினால் பெயரிடப்படும் நபர்கள்

f. வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சபையினால் பெயரிடப்படும் நபர்கள்.

(ii) இலங்கை பட்டயக்கணக்கறிஞர் நிறுவனத்தினால் காலத்திற்கு காலம் என்ன செய்யப்படவேண்டும்.

a. காலத்திற்கு காலம் கணக்கியல் நியமங்களை வடிவமைத்தல்

b. பொதுமக்கள் அறியக்கூடியவாறு நியமங்களை பிரசுரித்தல்

(iii) குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக தனது கணக்குகள் தயாரிக்க வேண்டும். அத்தகைய நிறுவனங்கள் சில

a. பட்டியலிடப்பட்ட கம்பனி

b. பொருள்கள் சேவைகளின் விற்பனையில் ஈடுபட்டுள்ள அரச கூட்டுத்தாபனம்

c. குறித்துரைக்கப்பட்ட வியாபார அமைப்புகள்.

d. வங்கிகள்

e. காப்புறுதிக் கம்பனிகள்

f. அலகு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகள்

g. பங்குச்சந்தை தரகுக்கம்பனிகள்

h. குறித்த சில எல்லைகளினை மீறும் பட்டியலிடப்படாத கம்பனிகள் (அளவு, உரிமையாண்மை, மொத்த சொத்துக்கள், வங்கி மற்றும் வேறு நிறுவனங்களில் இருந்து பெற்றுள்ள கடன்கள், ஊழியர் எண்ணிக்கை மற்றும் பலவற்றின் எல்லைகளுக்கு மேற்பட்ட)

- மொத்த செலவுகளில் 750 மில்லியனுக்கு மேற்படுபவை
- முன்னைய ஆண்டு முடிவில் பங்குதாரர் உரிமையாண்மை ரூ.450 மில்லியனுக்கு மேற்படுமாயின்
- முன்னைய ஆண்டின் இறுதியில் மொத்த சொத்துக்கள் ரூ.450 இலும் அதிகமாயின்
- வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கான பொறுப்பு கடந்த வருடமுடிவில் ரூ.150மில்லியனுக்கு அதிகமாயின்
- 1000 இற்கு மேற்பட்ட ஊழியரைக்கொண்டிருக்குமாயின்

(iv) கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு மீளாய்வுக்குழுவை நிறுவி கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக இணங்குகிறதா என்பதை உறுதிப்படுத்தல் இந்தக்குழுவின் அதிகாரங்கள்.

- விசேட முயற்சிகளின் கணக்கு கூற்றுக்களின் பிரதிகளினைக் கோரல்
- விசேட காலப்பகுதியில் வழங்கப்படவேண்டிய தகவல்களை வேண்டுதல்
- எவரேனும் அலுவலர், பணிப்பாளர் அல்லது கணக்காய்வாளரினை அழைத்து வினாக்கள் தொடுத்தல்
- சம்மந்தப்பட்ட விடயங்களுடன் சம்பந்தமாக அவதானம் மற்றும் விசாரணை என்பவற்றை மேற்கொள்ளல்

(v) குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால் சட்டத்தால் பின்வரும் தண்டனை வழங்கப்படலாம்

- 5 இலட்சத்திற்கு மேற்படாத தண்டம்
- 5 இலட்சத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை

*நிதிக்கூற்றுக்களின் கூறுகள்*

நிதிக்கூற்றுக்கள் எந்தவொரு வியாபாரத்திற்கும் பொதுவாக ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகின்றன. ஒரு வியாபாரத்தின் இலாபங்கள் அல்லது நட்டங்கள் கால ரீதியான கோட்பாட்டுக்கு இணங்க, ஒரு குறித்த காலப் பகுதிக்குக் கணிப்பிடப்படுகின்றது. இலங்கையில் அநேகமான நிறுவனங்களின் நிதி ஆண்டானது ஏப்ரல் 1ம் திகதி ஆரம்பித்து, அடுத்த ஆண்டு மார்ச் 31ம் திகதி முடிவடைகின்றது. அரச திணைக்களங்கள், ஒரு பொது வரிப்பண ஆண்டையே நிதி ஆண்டாகக் கருதுகின்றன. இக்காலண்டர் ஆண்டானது ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1ம் திகதி ஆரம்பித்து, டிசெம்பர் 31ம் திகதி முடிவடைகின்றது. நிதிக்கூற்றானது வியாபாரத்தில் ஆர்வமுடைய பகுதியினருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. அவர்கள் நிதிக்கூற்றிலுள்ள தகவல்களின் அடிப்படையிலேயே பொருளாதார முடிவுகளை எடுக்கின்றார்கள்.

| கூற்று | [illegible] |
|---|---|
| நிதி நிலைமைக் கூற்று | குறித்தவொரு திகதியிலுள்ள நிதி நிலைமைகளை வெளிப்படுத்துகின்றது. |
| இலாபம், நட்டம் மற்றும் ஏனைய முழுமையான வருமானக் கூற்று | குறித்த காலத்திற்கான மொத்த முழுமையான வருமானத்தை வெளிப்படுத்துகின்றது. |
| காசுப் பாய்வுக் கூற்று | குறித்தவொரு காலத்திற்குரிய காசுப் பெறுவனவும், கொடுப்பனவும் வெளியிடப்படுகின்றது. |
| உரிமையாண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் கூற்று | குறித்தவொரு காலத்தில் கம்பெனியின் உரிமையாண்மையில் ஏற்படுகின்ற மாற்றங்களை விபரிக்கின்றது. |
| கணக்கீட்டு முறைகளும் கணக்குகளிற்கான குறிப்பும். | இலாப நட்டக்கூற்று, நிதி நிலைமைக்கூற்று என்பவற்றில் காட்டப்பட்டுள்ள உருப்படிகளின் விபரங்கள் விபரிக்கப்பட்டு, விளங்கப்படுத்தப்படுவதுடன் நிதி அறிக்கையை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைகளும் விபரிக்கப்படும். |

*நிதிக்கூற்றுக்களை அடையாளம் காணுதல்*

நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்களில் இருந்து நிதிக்கூற்றுக்கள் தெளிவாக அடையாளங்காணப்படல் வேண்டும். அதற்கிணங்க வருமானக்கூற்றும் நிதிக்கூற்றை தெளிவாக பிரசுரிக்கப்படல் வேண்டும்.

*உள்ளடக்கும் காலப்பகுதி*

பொதுவாக நிதிக்கூற்றுக்கள் 12 மாத காலப்பகுதிகளை உள்ளடக்குவதாக தயாரிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் அதில் மாற்றம் ஏற்படும் போது சம்மந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.


**உதாரணம்:- கடந்த 12 மாத ஒப்பீட்டு தொகைகளுடன் நடைமுறை ஆண்டில் கிடைக்கக்கூடிய 06 மாத தகவல்கள் காட்டப்படும் போது போதிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.**

**நிதி நிலைமைக்கூற்று**

**நடைமுறை மற்றும் நடைமுறையல்லா என்ற வேறுபாடு**

**நடைமுறை என்பது 12 மாத காலப்பகுதியினுள் தேறக்கூடிய சொத்துக்கள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய பொறுப்புக்களாகும்.**

**நடைமுறையல்லா என்பது நிதி நிலைமைக்கூற்று திகதியில் இருந்து 12 மாதங்களுக்கு மேலாக தேறக்கூடிய அல்லது தீர்க்கப்பட வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை குறிக்கின்றது.**




**நடைமுறைச்சொத்துக்கள்**

(a) **சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தில் நுகரப்படக்கூடிய அல்லது விற்கப்படக்கூடிய சொத்துக்களாகும்.**

(b) **விற்பனைகள் எனின், நிதி நிலைமைக்கூற்றில் இருந்து 12மாத காலப்பகுதியில் தேறக்கூடிய என கருதப்படுபவைகளாகும்.**

(c) **காசு மற்றும் காசுக்கு சமமானவையும் நடைமுறை சொத்துக்களாக காணப்படுவதோடு அவற்றில் பயன்பாடு தொடர்பாக மட்டுப்பாடுகள் எதுவும் இல்லை.**


**சொத்துகளினால் உருவாக்கப்படும் பொருளாதார அனுகூலம் பின்வரும் முறைகளில் பாய்ச்சல் ஏற்படுத்தமுடியும்.**

1. **சொத்து விற்பனை அல்லது வேறு நபருக்கு வாடகைக்குக் கொடுப்பதால்.**

2. **சொத்து வேறு சொத்துக்களுடன் பரிமாறிக்கொள்ளுவதால்**

3. **பொறுப்புக்களைத் தீர்க்க பயன்படுத்துவதால்**

4. **உரிமையாளருக்கு ஒப்படைப்பதால்**




**[illegible] கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளால் தோன்றி தீர்க்கும் போது வளம் நிறுவனத்தில் இருந்து வெளியேறும் தன்மையுள்ள இப்பொழுதுள்ள கடப்பாடு பொறுப்பாகும்.**

***நடைமுறைப்பொறுப்புகள்***

(a) **சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தினுள் தீர்க்கப்படவேண்டிய தொகைகளாகும்.**

(b) **நிதி நிலைமைக்கூற்றுத் திகதியில் இருந்து 12 மாதங்களினுள் தீர்க்கப்படவேண்டிய பொறுப்புக்கள் நடைமுறைப்பொறுப்புக்கள் என அழைக்கப்படும்.**

***உரிமை***

**வணிகத்தின் எல்லாச் சொத்துக்களில் இருந்தும் எல்லா வெளிப்பொறுப்புக்களையும் நீக்கிய பின்னர் கிடைக்கப்பெறும் பெறுமதி உரிமை எனப்படும். அதாவது நிறுவனத்தின் உரிமையாளர்கள் பங்களித்துள்ள அல்லது ஈடுபடுத்தியுள்ள நிதி நிறுத்திவைத்துள்ள வருமானம் அல்லது வேறுமுறையில் உருவாக்கப்பட்டுள்ள ஒதுக்கம் என்பவற்றின் மொத்தம் உரிமையாகக் கருதப்படும்.**

***வருமானம்***

**உரிமையாளரால் செய்யப்படும் நிதி வழங்கல் அல்லாத குறித்த கால இடைவெளிக்குள் பொருளதார நலன் உயர்வடைதலுடன் அதன் மூலம் உட்பாய்ச்சல் அல்லது சொத்து உயர்வடைதல் அல்லது பொறுப்புக் குறைவடைதலின் விளைவாக உரிமையில் ஏற்படும் உயர்வு வருமானம் என இனங்காணப்படும்.**

**வருமானம் என்பது வணிகத்தின் செயற்பாட்டில் உருவாகும் வரவுத் தன்மையான பெறுகையாகும். வருமானம் குறித்த கால எல்லைக்குள் செயற்பாடு மூலமாக உருவாக்கப்பட்ட பொருளாதார நலன் அதிகரிப்பாக இனங்காண முடியும்.**

***செலவு***

**உரிமையாளருக்குச் செய்யப்படும் பகிர்வு அல்லாத குறித்த கணக்குக் காலபகுதிக்குள்ளே பொருளாதார நலன் குறைவடைதல் தொடர்பாக தர்க்கம் புரியும் வெளிப்பாய்ச்சல் அல்லது சொத்துக்களின் குறைவு பொறுப்புக்களில் ஏற்படும் அதிகரிப்புப் போல உரிமையில் ஏற்படும் குறைவு செலவு என இனங்காணப்படும்.**

**நிதி நிலைமைக்கூற்றின் தோற்றத்தில் வழங்கப்படவேண்டிய தகவல்கள்**

- ஆதனம், பொறி மற்றும் உபகரணம்
- கட்புலனாகாச் சொத்துக்கள்
- நிதிசார் சாதனங்கள் மற்றும் முதலீடுகள்
- இருப்புக்கள்
- வியாபார மற்றும் வேறுவருமதிகள்
- காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்
- வரிபொறுப்பு (இலங்கை கணக்கீட்டு நியமம் 14 இற்கு இணங்க)
- ஏற்பாடுகள்/ஒதுக்கீடுகள்
- சிறுபான்மையினர் அக்கறை
- கூறப்பட்ட மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்

**வருமானக்கூற்றின் தோற்றத்தில் வழங்கப்பட வேண்டிய தகவல்கள்**

- வருமானம்
- தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள்
- நிதிசார் கிரயங்கள்
- வரிச்செலவுகள்
- சிறுபாண்மையினர் அக்கறை
- தேறிய இலாபம் அல்லது நட்டம்

**முடிவுரை**

நிதிக்கூற்றுக்கள் மூலக்கூறுகளான சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை, வருமானம், செலவு தொடர்பில் நிதிக்கூற்று விடயப்பரப்பிலும் அவற்றின் வெளிப்படுத்தல்களிலும் வேறுபாடுகளை இழிவுபடுத்துவதற்கு கணக்கீட்டு நியமங்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது.

**உசாத்துணை**


CA. (2016). *Sri Lankan Accounting Standards.* Colombo Sri Lanka: Chartered Accountants of Sri lanka.

# உலகமயமாக்கலும் இலத்திரனியல் வர்த்தகமும்

திருமதி.வை.சாதனா
சிரேஸ்ட விரிவுரையாளர்
சந்தைப்படுத்தல் துறை, முகாமைத்துவ வணிக பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

இலங்கை விரைவாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒன்றாகும். இலங்கையின் வருடாந்த செயற்பாட்டு முன்னேற்றமானது மொத்த தேசிய உற்பத்தி மூலம் மத்திய வங்கியினால் விவசாயம், கைத்தொழில், சேவை என்ற மூன்று துறைகளின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்றது. வர்த்தகம் கைத்தொழில் என்பவற்றின் சேர்க்கையே வணிகம் ஆகும். இன்றைய நவீன வணிக வளர்ச்சிப் போக்குகளாவன உலகமயமாக்கல், இலத்திரனியல் வணிகம், சூழல் தொடர்பான தேவைப்பாடுகள் வணிக சமூக பொறுப்புக்கள் என்பனவாகும். வணிகம் உற்பத்தித் துறையின் அடிப்படையில் விவசாயம், கைத்தொழில், சேவைகள் எனவும் உரிமையின் அடிப்படையில் தனியார் துறை, அரசதுறை எனவும் நோக்கத்தின் அடிப்படையில் இலாப நோக்கமுடையவை, இலாபநோக்கமற்றவை எனவும், அளவின் அடிப்படையில் சிறிய, நடுத்தர, பேரளவு எனவும் வகைப்படுத்தப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்திக்கு வணிகங்கள் ஆற்றும் பங்களிப்புக்களாவன வேலைவாய்ப்புகள், உள்நாட்டு மற்றும் பிரதேச வளங்களின் உச்சப்பயன்பாடு மக்களின் வருமான மட்டம் அதிகரித்தல், பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்தல் நகரமயமாக்கலில் எழும் பிரச்சனையை குறைத்தல் என்பனவாகும். வணிகத்தில் உலகமயமாக்கல் எனும் கருதுகோள் பாரிய தாக்கங்களை தாங்கி நிற்கின்றது

உலகமயமாக்கல் என்பது தொலைத்தொடர்பு, போக்குவரத்து, தகவல் நிதி, தொழில் நுட்பம், அரசியல், பண்பாடு என்பவற்றின் உலக சமூகங்களுக்கிடையேயான பரம்பலும் அதிகரிக்கும் தொடர்பும், அதன் காரணமாக உலகில் அனைவரும் ஒருவரில் மற்றவர் தங்கி வாழும் தன்மையும் ஆகும். இவ் உலகமயமாக்கலிற்கு மிகப் பிரதான காரணிகளாவன அரச கொள்கைகளும், தொழில் நுட்ப மாற்றங்களும் ஆகும். அரசு திறந்த பொருளாதார கொள்கையையும், அதற்கு ஏற்ப நாட்டில் நாணய, நிதிக் கொள்கையையும் அமைத்து வருகின்றது. மேலும் நாடு சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதில் எதிர்கொள்ளும் தடைகளைக் களைந்து எறிகின்றது. தொழில்நுட்பம் அடுத்த மிகப் பிரதான காரணியாகும். இத் தொழில்நுட்பம் சர்வதேச ரீதியில் தொடர்பாடலை இலகுவாக்கி நாடுகளிடையே காணப்படும் இடைவெளிகளை மூடிவிடுகின்றது. இவ் உலகமயமாக்கல் மூலம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்தாலும், இது வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தையம், கலாச்சாரத்தையும் மக்களையும்

பாதிக்கின்றது என்ற எதிர்வாதம் காணப்படுகின்றது. தகவல் பொருளாதாரத்துடன் வணிகமானது இலத்திரனியல் வணிகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. மின் வர்த்தகம் அல்லது இலத்திரனியல் வர்த்தகம் என்பது கணனி, மற்றும் கையடக்க தொலைபேசி மூலம் ஏற்படுத்தப்படும் வலையமைப்பு மூலம் பொருட்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று விலை, தரம் போன்ற அம்சங்களை போட்டியாளர்களின் பொருட்களுடன் ஒத்து நோக்கி பொருட் கொள்வனவு தீர்மானங்களை மேற்கொள்ளலாம். மேலும் வலையமைப்பிலுள்ள சமூக வலைப்பின்னல் அல்லது ஊடகம் மூலம் (Social media) ஏற்கனவே பொருட்களை அல்லது சேவைகளை நுகர்ந்தோரின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் (e-word of mouth) சிறந்த தெரிவுகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் பொருள் கொள்வனவு, கட்டளை, அதற்கான பணப்பரிமாற்றம் போன்ற அனைத்து செயற்பாடுகளும் இலகுவான முறையில் இவ் இலத்திரனியல் வர்த்தகத்தில் காணப்படும் சிறப்பம்சமாகும். இதுவே உலகமயமாக்கலில் தொழில்நுட்பம் வகிக்கும் உயர்நிலைத்தாக்கமாக இன்று காணப்படுகின்றது. இதன் மூலம் நுகர்வோரின் அலைச்சல், நேரவிரயம், பணவிரயம் போன்ற பல அசௌகரியங்களையும் அகற்றி இன்றைய விரைவான உலகப் போக்கிற்கு ஈடுகொடுக்கும் ஒரு சிறந்த அம்சமாக காணப்படுகின்றது.

இலத்திரனியல் வர்த்தகத்தில் நிறுவனங்கள் விளம்பரங்கள் செய்யப்பட்டு, பொருட்கள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு, பணபரிமாற்றல், என சகல விடயங்களும் இடம்பெறுகின்றன. குறிப்பாக சேவைத்துறைகளும் இவ் இலத்திரனியல் வர்த்தகத்தை மிகப் பாரிய அளவில் செயற்படுத்துகின்றது. சுற்றுலாத்துறையில் போக்குவரத்து தெரிவுகள், விடுதித் தெரிவுகள் சுற்றுலாவிற்கான நாடுகளில் தெரிவுகளை மேற்கொள்ளுதல். online இலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றை விட வைத்தியத்துறை, கல்வித்துறை, ஊடகத்துறை என்பனவும் இவ் இலத்திரனியல் வர்த்தகத்தின் மிகப் பயனுறுதித் தன்மையான செயற்திறனை உள்வாங்கியுள்ளது.

இலங்கையில் வலைப்பின்னல் பாவனையானது மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. அதிலும் வர்த்தக நிறுவனங்கள் பாரியளவு பரிமாற்றங்களை இவ் இலத்திரனியல் வர்த்தகம் மூலம் செய்து வருகின்றது. இதுவும் நூற்றாண்டில் இடம் பெற்று வரும் ஒரு அதி உன்னத மாற்றமும் வளர்ச்சியும் ஆகும். இலங்கையில் 70% வீதமான மக்கள் வலையமைப்பு சேவையை பாவனையில் கொண்டுள்ளனர். இவ் பரிமாற்றங்கள் தமது வீடுகளிலிருந்தோ, வேலைபுரியும் நிறுவனங்களிலிருந்தோ, அதற்காக அமைக்கப்பட்ட தொடர்பாடல் நிறுவனங்களிலிருந்தோ மேற்கொள்ளப்படுகின்றது. இவ் இலத்திரனியில் வர்த்தகம். எமது நாட்டின் நுகர்வோரின் கல்வி அறிவு, கலாசாரம், வருமானம், தொழில்நுட்ப கிடைப்பனவுகள், நாட்டின் உட்கட்டமைப்பு என்பன இவ் இலத்திரனியல் வர்த்தகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகும். அதாவது எமது கலாச்சாரத்தில் தனிநபர் தீர்மானத்தை விட குழுவாக, குடும்பம், நண்பர்கள் என்போர் ஒன்றிணைந்தே ஒருங்கிணைந்த தீர்மானம், ஒரு பொருட் கொள்வனவில் காணப்படுகின்றது. எமது நாடு மிக உயர்ந்த

கல்வி வீதம் உடையதாகவும், நடுத்தர வருமானம் உடையதாகவுமே காணப்படுகின்றது. நாட்டின் கட்டுமான அபிவிருத்திகள் நகரப்பகுதிகளில் சிறப்பானதாகவும், கிராமப் பகுதிகளில் எட்டாக் கனியாகவும் காணப்படுகின்றது. இதனால் புதிய தொழில் நுட்ப மாற்றமான இலத்திரனியல் வர்த்தகம் ஓரளவு மட்டுமே வெற்றியளிப்பவையாக அமைகின்றது. இன்றைய வளர்ந்து வரும் சமூக வலையமைப்பு (Social networking) இவ் இலத்திரனியல் வர்த்தகத்தில், இலத்திரனியல் வாய் மொழி (e-word of mouth) அனுபவப் பகிர்வாக அமைந்து மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இலங்கையில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் நுண்ணிய, சிறிய, நடுத்தர கைத்தொழில் நிறுவனங்கள் 80% வீதமாகவும், அவை 35% வீதமான வேலைவாய்ப்பினையும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பெரும் பங்கினையும் ஆற்றி வருகின்றது. அதில் வடமாகாணத்தில் உள்ள நிறுவனங்களில் 90% வீதமானவை நுண், சிறிய, நடுத்தர கைத்தொழில் நிறுவனங்களே இவை ஏறத்தாழ 4% வீதமான பங்களிப்பினை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு செய்கின்றது. நாட்டின் உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வரப்பட்ட பின்னர் வடமாகாணத்திற்கு தடையற்ற திறந்த சந்தை செயற்பாடுகளும், அதிகரித்த வெளிநாட்டு முதலீடுகளும், விரைவான அடிப்படை கட்டுமான (Infrastructure) அபிவிருத்தி என்ற போக்குகள் காணப்படுகின்றன. அதே நேரம் போரின் வடுக்களை இன்னமும் சுமந்து கொண்டும், இடம் பெயர்ந்ததால் சொத்துக்கள் வளங்கள் அனைத்தையும் இழந்தும், பெண் தலைமைத்துவ குடும்பங்களாகவும், நிதிப் பிரச்சனை, சட்டச் சூழலை எதிர்நோக்கல், திறந்த போட்டிச் சூழல், புதிய தொழில்நுட்ப மாற்றங்கள் என பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அதிலும் தமது பொருட்களிற்கு போதியளவு சந்தை வாய்ப்புக்களைப் பெறமுடியாத நிலை இன்று வடமாகாண சிறிய, நடுத்தர நிறுவனங்களிற்கு காணப்படுகின்றது.

இப்பிரச்சினைகளைத் எதிர்கொள்வதற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இவற்றில் சந்தைப்படுத்தல் பிரச்சினைக்கான ஒரு தீர்வாக இவ் இலத்திரனியல் வர்த்தகம் அமைய முடியும். இவ் இலத்திரனியல் வர்த்தகம் தொடர்பான கல்வியறிவு மாணவர்களிற்கு வழங்கப்படுவதுடன், அது தொடர்பான பயன்கள், பயிற்சி நெறிகள், பிரயோகங்கள் என்பன தெளிவுபடுத்தப்படுவதுடன் அவற்றினை எதிர்காலத்தில் நிறுவனங்களில் பிரயோகிப்பதற்கு அடி அத்திவாரத்தை இடுதல் அவசியமாகும். அத்துடன் அரசோ அரச சார்பற்ற நிறுவனங்களோ நுண், சிறிய, நடுத்தர கைத்தொழில் நிறுவனங்களின் பொருள் தரவுகளை கொண்ட வலையமைப்பை ஏற்படுத்தி அவர்களிற்கு சரியான அறிவூட்டல், பயிற்சிகள் என்பவற்றை மேற்கொள்வதுடன், கணனி வசதிகள், சமூக வலையமைப்பு உபயோகங்கள், பிரயோகங்களை ஊக்குவித்து, மின் இலத்திரனியல் பணப்பரிமாற்றல் சேவைகளையும் ஏற்படுத்தி கொடுத்தல் வேண்டும். இச் செயற்பாடு தரமான உற்பத்திக்கு பலமான

கேள்வியை ஏற்படுத்தி சந்தைப்படுத்தல் பிரச்சினைக்கு சிறந்த தீர்வாக அமை வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனங்கள் அனைத்தும் இன்றைய தொழில்நுட்ப தேவைகளை உணர்ந்து உள்வாங்கி, அடிப்படை கட்டமைப்புக்களை மாற்றியமைத்து மிக வேகமாக முன்னேறுவதன் மூலம் இப் போட்டிச் சூழலை எதிர் கொண்டு உலகமயமாக்கல் சூழலில் நிலைத்து நிற்கலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. philip kotler &kevin lane ketler (2006), Marketing managenent 12e, prentice - hall, India.
2. NHREP (2012) small and medium enterprises (smf) www.nhrep.gov.lk accessed on 18.04.2015


திறமை, பேராசை, தீய எண்ணம்
சிந்தனையில் இரவில் கரையட்டும்;
பலவீனம் பலமாய் மாறும் வரை
இருள் ஒளியாய் மாறும் வரை
வறு சரியாய் மாறும் வரை

அப்துல் கலாம்

# வணிகத்துக்கு வடித்த கவி

செல்வி.பு.புவிநிலா
*2018 (B)* வர்த்தகப்பிரிவு

சிறகடித்து செல்லும் பறவையாய்
பதினொரு பாடங்களோடு
பறந்த நான்..........
தரம் - 10 எனும் தேசத்தில்
வணிகம் எனும் புதிய நண்பரோடு
அறிமுகமானேன்..........

புதிது ஆகையால் அக்கறை அதன்மீது
அதிகமானது...........
அக்கறை, வணிகத்தில் விருப்பத்தை
தந்தது...............
விருப்பம் இந்தப் பறவையை
தன் வழியில் இழுத்துக் கொண்டு
வணிக மாணவி ஆக்கியது!
எண்ணங்கள், கற்பனைகள்
வணிகத்துடன் நெருங்கச் செய்தது.

5ம் தரத்தில் இருக்கும் வேளை
வைத்தியராவேன் என கூறிய உதடுகள்.......
இன்று வணிகத்துறையில்
சாதிப்பேன் என்கிறது...........
ஏனிந்த மாற்றம்?
புதிதாக அறிமுகமான வணிகத்தாலா?
அதனை வழங்கிய ஆசானாலா?
சொல்லத்தவிக்கிறது மனம்..............

எல்லையில்லாத விருப்பத்தினால்
வணிக சாதனையை நோக்கி பறந்து கொண்டிருக்கையில்
பாடம் புரியவில்லை எனில் அழத்தூண்டுகிறது........
சிறகொடித்து விழுந்து விடுவேனோ என்று...........
விழும் போது என்னைத்தாங்கிக் கொள்ள
எனது ஆசான் இருப்பதை எண்ணுகிறேன்
மனம் நம்பிக்கையுடன்
இரண்டரை வருட பயணத்தை தொடர்கிறது.......

# பொருட்கள் நுகர்வில் சுட்டுத்துண்டு காட்டும் தகவல்

*S.*சுஜிதா
*2017 (B)* வர்த்தகப்பிரிவு

மனிதர்கள் தமக்குத் தேவையான பொருட்களை தேவையான அளவிற்கு பெற்றுக் கொள்வதென்பது நடைமுறையில் சிக்கலான விடயமாகக் காணப்படுகின்றது. இச் செயற்பாட்டின் பின்னணியல் பொருளாதார வளம் உற்பத்தியளவு, நுகர்வோரின் விருப்பு வெறுப்பு, தரத்தின் தன்மை எனப் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவனவாகக் காணப்படுகின்றன.

விளம்பரங்களையும் வெளிப்பகட்டையும் கருத்திற் கொண்டு பொருட்களைக் கொள்வனவு செய்ய முற்படின் பொருத்தமற்ற செயற்பாடாக அமைவதைக் காணலாம். நுகர்வோரை பாதுகாக்கவும் உற்பத்தியாளரிடையே காணப்படும் போட்டியை தவிர்க்கவும் வெளிவரும் பொருட்கள் தரமானவை என எளிதில் இனங்காணவும் பல வழிகள் காணப்படுகின்றன. இதற்காக அரசாங்கம் பல சட்ட வழிமுறைகளைப் பின்பற்றுகின்றது. இதற்கென தர நிர்ணய சபையை நிறுவி, தரமான பொருட்கள் வெளி வருவதில் கவனம் செலுத்துகிறது.

இலங்கையில் 2003ம் ஆண்டு 9ம் இலக்க பாவனையாளர் சட்டம் வர்த்தக துறையை ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தவும் அதிகாரம் செலுத்தவும் வழி வகுக்கிறது. பொருட்களுக்கான சுட்டுத்துண்டு ஒட்டுதல் பொதி செய்தல், விலை நிர்ணயித்தல், நுகர்வோர்களுக்கும் உற்பத்தியாளருக்கும் ஏற்படும் சாதக, பாதக செயற்பாடுகளை ஆராய்தல் போன்ற செயற்பாடுகளில் கவனம் செலுத்துகின்றது.

நுகர்வோர்கள் தரமான பொருளைத் தெரிவு செய்வதற்காக சுட்டுத்துண்டை அறிமுகம் செய்கிறது. அது குறித்த தகவல்களை வெளிக் கொணர வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

அவையாவன :-

01. தரச் சான்றுப்படுத்தல் இலச்சினை (Symbol of standards)
02. உற்பத்தித் திகதி Date of manufacture
03. காலாவதியாகும் திகதி Date of Expiry
04. உள்ளடக்கம் Ingredientgs
05. தேறிய நிறை Net weight
06. உற்பத்தி செய்தவர்
07. மனித நேயம்

போன்றவை உள்ளடக்கப்படுபவையாக காணப்படுகின்றது.

ஒரு பொருளுக்கான நிர்ணயசபை, இலங்கைக்கான குறியீடாக SLS இலச்சினையும் சர்வதேச ரீதியாக தொடர்புடையவையாயின. ISO இலச்சினையும் வழங்குவதோடு தர நிர்ணயத்தையை காட்டும் இலக்கமும், அது வழங்கப்படும் வருடமும், குறிக்கப்படும் பொருள் ஒன்றுக்கு தரச் சான்றிதழ் வழங்கி விட்டு சந்தையில் அப்பொருளின் மாதிரிகளை எழுந்தமானமாக பெற்றுப் பண்புத்தரத்தை பரிசீலனைக்கு உட்படுத்துவதிலிருந்து நுகர்வோர்கள் தரமான பொருட்களை பெறவேண்டும் என்பதில் அரசு அதிக அக்கறை காட்டுகின்றது என அறியமுடியும்.

உற்பத்தியாளனின் உற்பத்தியாக்கும் தன்மைக்கு ஏற்ப மனித நேயச் செயற்பாடுகள், சூழல் நட்புத் தன்மைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என அரசு எதிர்பார்க்கின்றது. இதற்குச் சுட்டுத்துண்டில் மதுபானம் அல்லது "சிகரெட்" போன்ற மனிதனுக்குத் தீங்கும் விளைவிக்கும் பொருட்களுக்கு அவை பற்றிய தகவல் கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றது. அத்துண்டில் "புகைப்பது உடல் நலத்திற்கு மட்டுமன்றி அயலில் இருப்பவருக்கும் கேடு விளைவிக்கும்" எனக் காட்டியிருத்தல் வேண்டும். போன்ற அறிவுறுத்தல்கள் காணப்பட வேண்டும்.

நுகர்வோர்களாகிய நாம் சுட்டுத் துண்டை அவதானித்தல், அவை சுட்டி நிற்கும் தகவல்கள் என்பன அறிந்திருத்தல் அவசியமானதாகும். பொருட்களை கொள்வனவு செய்தோம் என்றிராது தரமான பொருளைக் கொள்வனவு செய்தோம் என மன நிறைவு பெறுதல் வேண்டும்.

உசாத்துணை நூல் :

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

ஆனால்
கடவுள் உறுதியளித்தது
ஒரு நாளுக்கான சக்தியை
உழைப்பிற்கான ஓய்வை
பாதைக்கான ஒளியை
அப்துல் கலாம்

# இலங்கையின் பொதுவான கல்வித்தகவல்கள்

த.தாட்ஷாயினி
*2017 (A)* வர்த்தகப்பிரிவு

- ✓ சுதந்திர இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் - E.A.நுகாவெல
- ✓ கட்டாயக்கல்வி வயதெல்லை - 6-14
- ✓ பாடசாலைகளின் வகைகள் - 1AB, 1C, வகை II, வகை III
- ✓ ஆசிரியர்களுக்கான வாய்மை விருத்திப் பயிற்சிகளினை வழங்கும் நிறுவனங்கள்- தேசியகல்வியியற் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், தேசிய கல்வி நிறுவகம்
- ✓ கல்விச் சேவையின் பிரிவுகள் - ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை
- ✓ கல்வியியலுக்காக தனிப்பீடம் இருக்கும் பல்கலைக்கழகம் - கொழும்புப் பல்கலைக்கழகம்
- ✓ அடிப்படைக் கல்விக்காகவும் சமயக்கல்விக்காகவும் போர்த்துக்கேயர் ஆரம்பித்த பாடசாலையின் வகை - திண்ணைப் பள்ளி
- ✓ ஹர்தெஸ்த கல்வி முறைமை ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் அழைக்கப்பட்ட பெயர் - ஹர்தெஸ்த கிராமியப் பாடசாலைகள்
- ✓ இலங்கை மக்களிற்கு கட்டாயக் கல்வி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1945ம் ஆண்டு (C.W.W கன்னங்கரா)
- ✓ கிராமப் பிரதேசங்களில் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் கல்வி அமைச்சினால் ஆரம்பித்த புதிய வகைப் பாடசாலை - இசுறு
- ✓ கற்றல் கற்பித்தல் செயல் முறையில் மாணவர் பங்கு பற்றும் உயர்ந்த பட்சமாக உள்ள கற்பித்தல் முறை - மாணவர் மையக் கற்பித்தல்
- ✓ சார்க் வலயத்தில் உள்ள நாடுகளிடையே தேசிய வருமானத்தில் அதிகளவு சதவீதத்தை கல்விக்காக ஒதுக்கியுள்ள நாடு - இலங்கை
- ✓ இலங்கைப் பரீட்சைத்திணைக்களம் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் சம்மந்தப்படும் தரங்கள் - 10, 11, 12, 13
- ✓ பாடசாலைப் பாடவிதானத்தில் முதன் முதலாக ஒன்றிணைந்த பாடங்கள் புகுத்தப்பட்ட ஆண்டு - 1973
- ✓ சிறுவர் நட்புறவுப் பாடசாலைகள் - ஆரம்பக் கல்வியில் தர விருத்தியினை ஏற்படுத்துவதற்காக யுனிசெப் உதவியுடன் 2002இல் உருவானதே இதுவாகும்.
- ✓ பாடசாலைப் பாடவிதானத்திற்கு தொழில் முன்னிலைப் பாடங்கள் புகுத்தப்பட்ட ஆண்டு - 1972
- ✓ அரசாங்கத்தினால் சமயப் பாடசாலைகள் கையேற்கப்பட்ட ஆண்டு - 1960/61

- ✓ மகா வித்தியாலங்களை நிறுவிய பெருமைக்குரிய கல்வியாளர் - C.W.W கன்னங்கரா
- ✓ இலங்கை ஆசிரியர் சேவை தாபிக்கப்பட்ட ஆண்டு - 1994
- ✓ ஆசிரியர் சேவை - 31.10.1992 திகதியிடப்பட்ட 834/4 இலக்க அதிவிசேட வர்த்தகமானி அறிவித்தல் மூலம் 6.10.1994 இல் இருந்து அறிமுகமானது.
- ✓ ஆசிரியர் சேவை தரங்கள் - 3II, 3I, 2II, 2I, I
- ✓ க.பொ.த.சாதாரண தரத்தில் ஒரு மாணவன் தோற்றக்கூடிய கட்டாய பாடங்கள் - 06
- ✓ க.பொ.த.சாதாரணதரத்தில் ஒரு மாணவன் தோற்றக்கூடிய ஆகக்கூடிய விருப்புப் பாடம் - 3
- ✓ இலவசக்கல்வியை அறிமுகப்படுத்திய நாடு - நெதர்லாந்து
- ✓ உலகின் முதல் கல்வித் துறையில் தேர்வுகளை அறிமுகப்படுத்திய நாடு - சீனா
- ✓ 1972 தொடக்கம் நடைமுறையிலிருந்த சமூகக் கல்விப் பாடத்தை மாற்றியமைத்து அதற்குப் பதிலாக கனிஷ்ட, இடைநிலையிலும் சிரேஷ்ட இடைநிலையிலும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட பாடங்கள் - வரலாறு, புவியியல், குடியுரிமைக்கல்வி
- ✓ க.பொ.த (சா/த) பரீட்சைக்கென அங்கிகரிக்கப்பட்டுள்ள மையப் பாடங்கள் - தாய்மொழி, கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமயம், வரலாறு
- ✓ இலங்கையின் கல்வி நிர்வாகக் கட்டமைப்பின் ஆறு கூறுகள் - கல்வி அமைச்சு ⟶ மாகாணக்கல்வி அமைச்சு ⟶ மாகாணகல்வித்திணைக்களம் ⟶ வலயக்கல்வி அலுவலகம் ⟶ கோட்டக்கல்வி அலுவலகங்கள் ⟶ பாடசாலை

உசாத்துணை நூல்கள்

Mr.உமாசங்கர் பொது அறிவு நூல்

என் தகுதியே

எனக்கு சந்தேகம் தருவது

அதன் பெருமை தான்

என் பயம்

என் தரத்தோடு அது

முரண்பட்டுத் தோன்றும்

அப்துல் கலாம்

# நுகர்வோரின் சுதந்திரம் குறைவடைந்து கொண்டிருக்கின்றதா?

ரா.திவிஜா
*2017 (B)* வர்த்தகப்பிரிவு

இன்றைய உலகை நோக்கும் போது உலகமயமாக்கம் (Globalization) சுதந்திரச் சந்தை மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி என்பவற்றின் காரணமாக நுகர்வோரின் சுதந்திரம் (Consumerism) பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது. பொருளியல் விஞ்ஞானத்திற்கு அமைய கட்டற்ற சந்தை பொருளாதார முறைமையின் கீழ் நுகர்வோனே மிகவும் பலம் பொருந்தியவனாக கொள்ளப்படுகின்றான். சுருங்கக் கூறின் நுகர்வோனே சந்தையின் மன்னன் என கருதப்படுகின்றான் நுகர்வோரின் மனவெளிச்சியினை அடிப்படையாகக் கொண்டே அவனுடைய விருப்பம் என்ன? எந்த கைத்தொழில் சந்தையில் நிலைத்திருக்கும்? போன்ற தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக சந்தையில் காணப்படும் நுகர்வோரின் பலத்தினை நுகர்வோன் சுதந்திரமாக மேற்கொள்ள முடியும். எனினும் இன்று காணப்படும் உலகமயமாக்கல் சூழ் நிலை மற்றும் வளர்ச்சியடைந்த தகவல் தொழில்நுட்ப சூழல் என்பவற்றோடு நோக்கும் போது நுகர்வோனின் சுதந்திரம் எந்தளவு சாத்தியமானது என்பது கேள்விக் குறியாகும். எனவே நுகர்வோரின் சுதந்திரம் மற்றும் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு இன்று வரை காணப்படுகிற சம்பிரதாய பூர்வமான பாதுகாப்பு முறைமைகளை மீள் பரிசீலனை செய்வது காலத்தின் தேவையாகும். வியாபார பார்வையில் நோக்கும் போது சந்தையினுள் நுகர்வோன் பாதுகாப்பு முறைமைகள் பிரயோசன மற்ற ஒன்றாக தோன்றலாம்.

பரந்தளவில் மக்கள் நலன்புரி அரசுகளாக காணப்படுபவை தவிர்ந்த ஏனையவை நுகர்வோனின் பாதுகாப்பு தொடர்பாக செலுத்தும் அக்கறையானது குறைவடைந்து செல்கின்றது. இவ்வாறான நிலைமைகளுக்கு எதிர் விளைவாக நுகர்வோனின் சுதந்திரம் மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்த சர்வதேச மட்டத்தில் மிகப் பலமான பாதுகாப்பு முறைமையொன்று கட்டியெழுப்பப்பட வேண்டிய காலத்தின் தேவையாகும். உலகமாயமாக்கல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி என்பவற்றினால் ஏற்பட்ட ஒரு சவாலாக இதனைக் கொள்ளலாம்.

சந்தைப்பரப்பினுள் ஏற்படுகின்ற மாற்றம் இண்மைக் காலங்களில் பெரும்பாலான நாடுகளின் அரசியல் சமூக பொருளாதார மாற்றங்கள் பெருமளவில் இடம் பெறுவதை காணக்கூடியதாகவுள்ளது. அதே போல் இத்தகைய காரணங்களினால் சமவுடமை பொருளாதார முறைமையில் இருந்து தாராளமய பொருளாதார முறைமைக்கு நாடுகள் மாறுகின்றன. இவ்வாறான நாடுகளில்

பெருமளவான அரசுடமை வியாபாரங்கள் தனியார் மயமாக்கப்படுகின்றன. அத்தகைய நிலைமைகளில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த நுகர்வோன் உரிமைகள் பிரயோக ரீதியில் வலுவற்றதாக்கப்படுகின்றன.

நுகர்வோன் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட அரச அதிகார நிறுவனங்கள் தமது அதிகாரத்தை பிரயோகிக்க முடியாதுள்ளது. ஏனெனில் அவற்றின் அதிகாரத்தை பிரயோகிப்பதற்கான அரசியல் அதிகாரம் திறந்த பொருளாதார முறைமையில் குறைவடைந்து செல்கின்றது.

இன்றைய அரசுகள் பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்கான அரச பொருளாதார கொள்கையாக சந்தைப் போட்டி கொள்கையினை பின்பற்றுகின்றன. அதற்காக அரச சேவைகளை தனியார் மயப்படுத்துவதற்கு அல்லது பொதுக் கம்பனி பணிகளாக்குவதற்கு அல்லது அவற்றின் பெரும்பாண்மையான பங்குகளை தனியாருக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன. எனவே மக்களுக்கான சேவையை வழங்க வேண்டிய அரசின் கடப்பாட்டிலிருந்து அரசுகள் விலகிச்செல்ல முயற்சிக்கின்றன. நுகர்வோன் பாதுகாப்பினை நோக்காக கொண்டு அரசு சந்தையில் தலையிடுமானால் அது சந்தையினுள் வியாபார நிறுவனங்களின் நடவடிக்கைகளை பாதிக்கும் என்ற கருத்து சந்தைப் பொருளாதார முறைமையில் காணப்படுகின்றது. சந்தையின் எல்லைகளை வரையறை செய்யாமல் உலகமயமாக்கலை பின்பற்றுவது மிகவும் பொருத்தமானதாக இருக்குமென அரசுகள் எண்ணுகின்றன.

### உலக சந்தைப் பரப்பின் விரிவாக்கம்
### (The emergence of the global market place)

அண்மையக்காலங்களில் திறந்த சந்தை முறைமை ஒன்றினுள் நுகர்வோன் பாதுகாப்பிற்கு பிரதான சவாலாக அமைவது, நுகர்வோன் பண்டங்களுக்கான சந்தையானது மிகவும் வேகமாக நாடுகளின் எல்லைகளை கடந்து வியாபித்துக் கொண்டிருப்பதாகும். மிகவும் வேகமாக வளர்ச்சியடையும் நவீன தொழில் நுட்பத்திற்கு சமாந்தரமாக உலக சந்தையின் பரப்பெல்லையும் விரிவடைந்து செல்வதை காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறான நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பலவற்றினை நாம் பயன்படுத்துகின்றோம்.

1. **இணைய வழி வணிகம்**
   (online commerce)

இலத்திரனியல் வணிகம் அல்லது இணையத் தளங்களின் ஊடாக நடைபெறும் வணிகங்கள் இங்கு முதன்மை இடத்தை பெறுகின்றது. இலத்திரனியல் வணிகமானது இன்று பல்வேறு மட்டங்களில் வியாபித்துள்ளது.

Home Shopping
(வீட்டிலிருந்தவாறான சில்லறைச் சந்தை)
Home Banking

**(வீட்டிலிருந்தவாறான வங்கிச் சேவை)**

Home entertainment

**(வீட்டிலிருந்தவாறான பொழுது போக்கு)**

**2. இலத்திரனியல் அட்டை**

**(**Smart cart**)**

**கடனட்டை (**credit card**) மற்றும் வரவு அட்டைகளினை (**Debit card**) விட இலத்திரனியல் அட்டை ஆனது (**Smart card**) மிக இலகுவாகவும் எவ்வித தடை இன்றியும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடிவதுடன் தொழில்நுட்பரீதியின் வளர்ச்சியடைந்த ஊடகமாகவும் காணப்படுகின்றது. இதில் காணப்படும் கணனியினால் உணர்ந்து அறியக்கூடிய இலத்திரனியல் நுண் வைப்பகம்** (chip) **ஊடாக எந்தவொரு பணப்பெறுமதியையும் சேமித்து வைக்க முடிவதுடன் அதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக மேற்கொள்ள முடிகின்றது.**

**3. வணிக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வேறு ஊடகங்கள்.**

**(**other Technologies**)**

**வெவ்வேறுபட்ட நுகர்வோன் சேவை முறைமைகள் நாளாந்தம் சந்தையால் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக உலகெங்கிலும் உள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை உடனுக்குடன் நுகரும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அழைப்பு நிலையங்கள் மற்றும் கம்பி வழி தொலைக்காட்சி சேவை போன்றவற்றை அதற்கு உதாரணமாக கொள்ள முடியும். இதனால் தொடர்பாடல் மற்றும் விரும்பியதை நுகர்வதற்கான வாய்ப்புக்கள் பெருமளவில் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது.**

**நுகர்வோர் மற்றும் வியாபாரிகளுக்கு பல்வேறு வாய்ப்புக்களை வழங்குகின்ற பூகோள இலத்திரனியல் சந்தையானது ஏக காலத்தில் அவர்களுக்கு எதிராக பல்வேறு சவால்களையும் உருவாக்கி சென்றுள்ளது. அவ்வாறான சவால்களில் மிக முக்கியமானவை என பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.**

**1 - நுகர்வோன் பாதுகாப்பு பிரச்சினைகள்**

**2 - போட்டியாளர்கள் பிரச்சினைகள்**

**3 - சட்ட அமுலாக்க பிரச்சினைகள்**

**நுகர்வோன் பாதுகாப்பு தொடர்பாக அரசுகளின் செயற்பாடுகள்.**

**நுகர்வோன் பாதுகாப்பினை நோக்காக கொண்டு அரசுகள் சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அரசு இவற்றை தமது அதிகார முகவராண்மைகளினூடாக மேற்கொள்கிறது.**

Eg :- National protection consumer Authorities

**ஐக்கிய நாடுகள் சபையின் நுகர்வோன் பாதுகாப்பு தொடர்பான பொதுக் கொள்கைளில்,**

**1 - நுகர்வோன் பாதுகாப்பினை சரியான அளவில் பேணுவதற்காக நாடுகளின் ஒத்துழைப்பு**

2 - நுகர்வோரின் தேவை மற்றும் விருப்பிற்கு ஏற்றவாறு உற்பத்தி மற்றும் பங்கீடு செய்வதற்கு நிறுவனங்களிற்கு அரசு வழிகாட்டல்.

3 - நிறுவன மயப்படுத்தப்பட்ட நுகர்வோன் குழுக்களை உருவாக்குவதற்கு அரசு அமைப்பு ரீதியாக உழைத்தல்.

4 - நுகர்வோனை பலப்படுத்தக் கூடியவாறான வியாபார சூழலை உருவாக்குதல்.

5 - நுகர்வோன் பாதுகாப்பிற்காக செயற்படும் சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைத்தலும் உறவுகளை கட்டியெழுப்பலும்.

6 - நுகர்வோருக்கு பெருமளவிலான தெரிவினையும் குறைந்த விலையினையும் உடைய சந்தைகளை அபிவிருத்தி செய்தல்.

உசாத்துணை

அறிவுத்தேடல் வர்த்தக பிரிவு

உங்களின் வடிவங்களை
மாற்றுவதற்கும்
நீங்கள் அறியாத வடிவங்களில்
உங்களைப் படைப்பதற்கும்
நாம் இயலாதவர் அல்லர்

# ONLINE SHOPPING

***S.Dilaksi***
***2017 (B)*** **வர்த்தகப்பிரிவு**

Online shopping is a form of electrical commerce with allows consumers to directly buy goods or services from a seller over the internet using a web browser. Consumer find a product of interest by visiting the website of the retailer directly or by searching among alternative vendors using a shopping search engine, which displays the same product's availability and pricing at different e-retailers. As of 2016 consumers can shop online using a range of different computers and devices, including desktop computers, laptops, tablet computers and smart phones.

As online shop evokes the physical analogy of buying products or services at a regular "bricks and - mortor" retailer or shopping center, the process is called Business to concumer (B2C) online shopping. When an online store is setup to enable businesses to buy from another businesses, the process is called business to business (B2B) online shopping. A typical online store enables the consumer to browse the firm's range of products and services, view photoes or images of the products along with information about the product specifications, features and prices.

Online stores typically enable shoppers to use "search" features to find specific model brands or items online customers must have access to the internet and a valid method of payment in order to complete a transaction such as credit card, an interac-enabled debit card or a service such as paypal for physical products (Eg:- Paper back books or clothes) the e-tailer ships the products to the customer, for digital products, such as digital audio files of songs or software, the e-tailer typically sends the file to the customer over the internet. The largest of these online retailing corporations are Alibaba, Amazon.com and eBay.

Reference :

http;en.m.wikipedia.org/wiki/Quality management

# காசோலை

யோ.சுலோயனா
*2017 (A)* வர்த்தகப்பிரிவு

வணிகவங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் பல்வேறுபட்ட சேவைகளிலொன்றே நடைமுறைக்கணக்கு (கேள்விவைப்பு) வசதியை வழங்குதல். இதன் மூலமாக வாடிக்கையாளர்கள் காசோலை மூலமான கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள முடியுமாய் உள்ளது.

இதனடிப்படையில் ‘‘காசோலை’’ என்பதன் பதத்தை மாற்றுண்டியல் சட்டம் பின்வருமாறு வரையறை செய்கின்றது.

‘‘நடைமுறைக்கணக்கு உரிமையாளர் மூலம் (கட்டளையிடுபவர்) அதில் குறிப்பிட்ட பணப்பெறுமதியை பெயர்குறிப்பிட்ட நபருக்கு அல்லது கொண்டு வருபவருக்கு வழங்கப்பட வேண்டுமென வங்கிக்கு கட்டளையிடப்படும் எழுத்து மூல உத்தரவொன்றே காசோலையாகும்’’.

காசோலையொன்றின் அடிப்படை அம்சங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. திகதி
2. வங்கியினதும் கிளை அமைந்துள்ள இடத்தினதும் பெயர்
3. பெறுபவர் பெயர்
4. தொகை எழுத்திலும் இலக்கத்திலும்
5. செலுத்துக எனும் பதம்
6. கட்டளை இடுபவர் கையொப்பம்
7. காசோலை இலக்கம்
8. வங்கி இலக்கம்
9. வங்கி கிளை இலக்கம்
10. கணக்கிலக்கம்
11. மின்காந்த மையப்பகுதி

### காசோலையொன்றுடன் தொடர்புடைய தரப்பினர்கள்

1. கட்டளை இடுபவர் / பிறப்பிப்போன்
2. கட்டளை பெறுபவர் / வங்கி / பணம் செலுத்துபவர்
3. கட்டளையை ஏற்பவர்

இப்பிரிவினருக்கு மேலதிகமாக பின்வரும் பிரிவினரும் தொடர்புபடுகின்றனர்.

1. பெறுபவர்
2. சாட்டுதல் செய்பவர்
3. சாட்டப்படுபவன்

காசோலையை பிரதானமாக 2 வகைப்படுத்தி நோக்கமுடியும். அவையாவன

1. காவிகாசோலை
2. கட்டளைக் காசோலை

### காவிகாசோலை

வங்கி கருமபீடத்தில் பணமாக மாற்றும் போது புறக்குறிப்பிடல் அவசியமற்ற காசோலை காவி காசோலையாகும். காசோலை எழுதும் போது பெறுனர் பெயரை எழுதி அல்லது வருபவர் என்ற பதத்தை வெட்டப்படாததுமான காசோலை இதுவாகும்.

### கட்டளை காசோலை

வங்கி கருமபீடத்தில் பணமாக மாற்றும் போது புறக்குறிப்பிடல் அவசியமான காசோலை கட்டளை காசோலையாகும். காசோலை எழுதும் போது பெறுனர் பெயரை எழுதி அல்லது வருபவர் என்ற பதம் வெட்டப்பட்ட காசோலை இதுவாகும். இதனால் இக் காசோலை காவியின் காசோலையை விட பாதுகாப்பானது.

## காசோலை ஒன்றை எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்

1. காசோலை எழுதும் திகதி, பணம் பெறுபவர் பெயர், பணத்தொகை என்பவற்றை அடியிதழில் பதிவு செய்ய வேண்டும்.
2. காசோலை வரையும் போது விரைவில் அழிந்துவிடாத மைப்பேனாவை பயன்படுத்தல்.
3. காசோலை வரைகையில் குறிப்பிடத்தக்க சில தவறுகள் ஏற்பட்டால் அதனை தனி கோடொன்றால் வெட்டி சரியாக அருகில் எழுதி மேலதிகமான ஒப்பமொன்றை இடல்
4. வெற்றுகாசோலையில் கையொப்பமிடலை தவிர்க்கவும்.
5. காசு அல்லது cash என காசோலை எழுதுவதை தவிர்க்க கணக்கு உரிமையாளர் பணத்தை மீளப்பெறதேவையானால் மாத்திரம் காசு என எழுதுவது பிரச்சனை ஆகாது.

**காசோலை ஒன்றிற்கு குறுக்கு கோடிடல்**

காசோலையின் மேலதிக பாதுகாப்பு கருதி இவ் குறுக்குக் கோடிடல் இடம்பெறும். அதாவது காசோலையின் முகப்பில் இரு சமாந்தர கோடுகளை வரைவதன் ஊடாக இது மேற்கொள்ளப்படும் இதன் மூலம் காசோலைக்கான கொடுப்பனவு கருமபீடத்தின் ஊடாக இடம்பெறுதல் தடுக்கப்படும்.

காசோலைக்கு குறுக்கு கோடிடல் தொடர்பாக காசோலையை பிறப்பிப்பவர் பின்வரும் நலன்களை பெறமுடியும்.

1. காசோலைக்கான பணத்தை பெற்று கொண்டார் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

2. மோசடி அல்லது வேறு காரணங்களுக்காக காசோலைக்கான கொடுப்பனவை தடுப்பதற்கு கூடிய அவகாசம் கிடைத்தல்.

3. "கைமாறததகாதது" எனும் பதத்தால் காசோலை பிறப்பித்தவருக்கு விசேட பாதுகாப்பு கிடைக்கும்.


குறுக்கு கோடிடல் பிரதானமாக இரு வகைப்படும்.

1. பொதுமுறை குறுக்கு கோடிடல்

2. சிறப்பு முறை குறுக்கு கோடிடல்


**பொதுமுறை குறுக்கு கோடிடல்**

குறுக்கு கோடுகளிடையே கைமாறததகாதது எனும் வாசகம் இடுவதன் மூலமோ அல்லது அவ்வாசகமின்றி பெறுவோன் கணக்கு மட்டும் அல்லது பணப் பெறுமதி வரையறுக்கப்பட்டோ அல்லது முகப்பில் எளிய சமாந்தரமான இரு கோடுகள் வரைவதை இது குறிக்கும்.




**சிறப்பு முறை குறுக்கு கோடிடல்**

இரு சமாந்தர கோடுகள் வரைந்து மேலே நோக்கிய பதங்களில் ஏதாவது ஒன்றை குறிப்பிட்டு வணிக வங்கியொன்றின் பெயர் எழுதப்படலை இது குறிக்கும்.



### புறக்குறிப்பிடல்

காசோலை முகப்பில் பணம் பெறுபவர் பெயர் எவ்வாறு எழுதப்பட்டுள்ளதோ அதே விதமாக காசோலை பின்புறத்தில் எழுதுதல் புறக்குறிப்பிடலாகும். இதன் மூலம் தன்னுடைய உரிமையை காசோலை பெறுபவருக்கு ஒப்படைகிறேன் என்பது உறுதிப்படுத்தப்படும்.

தனியே பெயரை மட்டும் எழுதும் புறக்குறிப்பு வெற்று முறை சாட்டுதல் எனவும் சில வரையறைகளை இட்டு சாட்டுதல் வரையறையிட்டு சாட்டுதல் எனப்படும்.

### காசோலையொன்றுக்கு புறக்குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள்

1. கட்டளை காசோலையொன்றை கருமபீடத்தில் பணமாக மாற்றும் போது
2. கட்டளை காசோலையை வங்கி கணக்கில் வைப்பிலிடும் போது
3. கட்டளை காசோலையை வேறொரு நபருக்கு சாட்டுதல் செய்யும் போது

### காசோலை மறுக்கப்படல்

கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படும் காசோலைக்கான பணம் செலுத்துவது வங்கியில் மறுக்கப்படும் சந்தர்ப்பங்கள் இவையாகும்.

1. காலாவதியான காசோலை
2. பிற்திகதியிடப்பட்ட காசோலை
3. வங்கிக் கணக்கில் போதியபணமின்மை
4. கட்டளையிடுபவர் கொடுப்பனவை நிறுத்துமாறு கோருதல்
5. கணக்குடமையாளர் முறிவடைந்திருப்பின்
6. காசோலை முறையாக எழுதப்படாமை
7. நீதிமன்றத்தால் கொடுப்பனை நிறுத்த கோரி கட்டளை கிடைத்தல்
8. பணத்தொகை எண், இலக்கத்தில் வேறுபடல்
9. கையொப்பம் தெளிவின்மை
10. கணக்கு உடமையாளர் மரணம் அடைந்திருப்பின்
11. காசோலை சிதைவடைந்திருத்தல்

### உசாத்துணை நூல்கள்

1. தரம் - 12 வணிகக்கல்வி - ஐகத் பண்டார நாயக்கா
2. தரம் - 12 - ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி (வணிகக்கல்வி)

# உலக முதியோர் வாழ்க்கைத்தர அளவீட்டுச் சுட்டெண் தொடர்பாக நேர்காணல்

K.ஜெகாசினி
2017(B)வர்த்தகப்பிரிவு

நேர்காணிடவர் K.ஜெகாசினி
தரம் 13 யா/இந்து மகளிர் கல்லூரி
நேர்காணலுக்கு உட்பட்டவர் : திரு.கு.பிரதீபன் B.B.A(HRMSPL)
பொருளியல் ஆசிரியர்
கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்

*மாணவி* : மாலை வணக்கம்

*ஆசிரியர்* : மாலை வணக்கம்

*மாணவி* : சேர் நான் இந்து மகளிர் கல்லூரியில் தரம் 13 வர்த்தகப்பிரிவில் கல்வி பயில்கின்றேன். எமது பாடசாலையில் வருடாந்தம் வெளிவரும் வணிக வனிதை சஞ்சிகைக்காக உங்களை நேர்காண வந்துள்ளேன். மாணவர்களின் நலனுக்காக உங்கள் நேரத்தை ஒதுக்கித் தரமுடியுமா?

*ஆசிரியர்* : ஆம், இது ஓர் நல்ல விடயம்

*மாணவி* : சேர் நீங்கள் 2016ம் ஆண்டு வணிக வனிதையிலும் நேர் காணப்பட்டீர்கள் அந்த நேர்காணலில் நீங்கள் சென்மதி நிலுவை 6ம் பதிப்பு தொடர்பாக விளக்கம் கொடுத்துள்ளீர்கள் அந்த அனுபவம் உங்களுக்கு எப்படி இருந்தது?

*ஆசிரியர்* : ஆம் அந்த அனுபவம் மிகச்சிறப்பாக இருந்தது. நான் அந்த நேர்காணலில் கூறிய விடயங்களின் மூலம் மாணவர்கள் விளக்கத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் எனக்கு மிகவும் மகிழ்ச்சிகரமாக காணப்பட்டது.

*மாணவி* : அந்த தகவலின் மூலம் நானும் பயன்பெற்றுக் கொண்டேன். அதற்காக மிகவும் நன்றி. நூல் வெளியீட்டு ஆய்வுரையின் போதும்

இத்தகைய நேர் காணல்கள் இலகுவாக மாணவர்களுக்கு பாடரீதியான விளக்கத்தையளிக்கும் என கூறப்பட்டது. நாம் எமது நேர்காணலின் முக்கிய பகுதிக்கு செல்வோம்.

*மாணவி* : உலக முதியோர் வாழ்க்கைத்தர அளவீட்டுச் சுட்டெண் பற்றி சில விடயங்களில் தெளிவு பெற வேண்டியுள்ளது.

*ஆசிரியர்* : ஆம் இலங்கை குடித்தொகையானது தெற்காசியாவில் மிக பழமையானதாக காணப்பட்டதுடன், உலகில் மிக விரைவாக வளர்ந்து வரும் வயது முதிர்ந்தோர் குடித்தொகைகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. (UN 2015). 2015இல், இலங்கையின் குடித்தொகையானது 20.96 மில்லியனை அடைந்ததுடன், இதில் முதியோர் 60 வயதுக்கு அதிகமானவர்களாக மதிப்பிடப்பட்டது. இவ்விபரம் 2050 மற்றும் 2100களில், முறையே 28.6 சதவீதம் மற்றும் 40 சதவீதத்திற்கு விரைவாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*மாணவி* : முதியோர் சனத்தொகை என்பதனை விளக்க முடியுமா?

*ஆசிரியர்* : ஆம், 60 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையே உலக ரீதியில் முதியோர் சனத்தொகை என விளக்கப்படுகிறது.

*மாணவி* : கி.பி. 2050ல் உலக முதியோர் சனத்தொகை அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளதாம் அது பற்றி குறிப்பிட முடியுமா?

*ஆசிரியர்* : Global Age watch Index 2013 Insight Report படி கி.பி.2012ம் ஆண்டில் 809 மில்லியன் (11%) கி.பி 2030ஆம் ஆண்டில் 1375 மில்லியன் (16%) கி.பி.2050ம் ஆண்டில் 2031 மில்லியன் (22%) ஆக முதியோர் சனத்தொகை காணப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது அதாவது 2050ம் ஆண்டளவில் 2 பில்லியனாக அதிகரித்து உலக சனத்தொகையில் 1/5 பகுதியை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*மாணவி* : உலக முதியோர் வாழ்க்கைத்தர சுட்டெண் (Global Age watch Index) அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கம் என்ன?

*ஆசிரியர்* : முதியோர் சனத்தொகை பாரிய அளவில் அதிகரிப்பதால் உலக முதியோர்களின் வாழ்க்கைத் தரத்தின் தர ரீதியான தன்மை

மற்றும் நலனோம்புகையை அளவிடப்படுகின்ற நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது.

மாணவி : உலக முதியோர் வாழ்க்கைத்தர அளவீட்டுச் சுட்டெண் எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆசிரியர் : 2013ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சர்வதேச முதியோர் தினத்தில் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.

மாணவி : இச்சுட்டெண்ணை அறிமுகப்படுத்திய அமைப்பு எது?

ஆசிரியர் : Help Age சர்வதேச அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியமும் இணைத்து அறிமுகப்படுத்தப்பட்டது.

மாணவி : இச் சுட்டெண் தயாரிக்கப்பட்டதன் நோக்கங்களை குறிப்பிடுக.

ஆசிரியர் :

- ✓ முதியோர்களான மக்களின் நலநோன்புகையை அளவிடுதல் மற்றும் வாழ்க்கைத்தரத்தின் தர ரீதியான தன்மையிலுள்ள பல்பரிமான இயல்பினை உள்ளீர்த்துக் கொள்ளல்.
- ✓ முதியோர்களான மக்களின் செயலாற்றுகையை அளவிடுவதற்கும் மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் தேவையான விதிமுறைகளை வழங்குதல்.
- ✓ முதியோர்களான மக்களின் வெற்றிகரத்தன்மை மற்றும் மூலோபாய ரீதியான கொள்கைகளிலுள்ள குறைபாடுகளை மேலேடுத்துக்காட்டுதல்.

மாணவி : உலக முதியோர் வாழ்க்கைத்தர அளவீட்டு சுட்டெண்ணின் உள்ளமைப்பைச் சுருக்கமாக விளக்குக.

ஆசிரியர் : இந்தச் சுட்டெண்ணை தயாரிக்கும் பொருட்டு வருமானப் பாதுகாப்பு, சுகாதர மட்டம், கல்வி மற்றும் தொழில் நிலை அத்துடன் வாழ்வதற்கு உகந்த சுற்றுச்சூழல் ஆகிய பிரதானமான 4 துறைகளின் கீழ் வருகின்ற 13 சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மாணவி : வருமானப்பாதுகாப்பு என்னும் துறையில் உள்ளடங்கும் சுட்டெண்கள் எவை?

ஆசிரியர் : இங்கு 4 சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன,

1. இளைப்பாற்று வருமானக் கணிப்பீடு
2. முதியோர் பருவத்தில் வறுமை வேகம்
3. முதியோர் சனத்தொகையின் ஒப்பீட்டு ரீதியான நலனோம்புகை
4. தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி

மாணவி : சுகாதாரமட்டம் என்னும் துறையினுள் உள்ளடக்கப்படும் சுட்டெண்கள் எவை?

ஆசிரியர் : இங்கு 3 சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன அவையாவன,

1. 60 வயதில் ஆயுட்கால எதிர்பார்ப்பு
2. 60 வயதில் ஆரோக்கியமான வாழ்க்கையின் எதிர்பார்ப்பு
3. உள ஆரோக்கியம்

மாணவி : தொழில் மற்றும் கல்வித்துறையில் அடங்கும் சுட்டெண்கள் எவை?

ஆசிரியர் : இங்கு இரண்டு சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன அவையாவன

1. முதியோர் சனத்தொகையின் தொழில் நிலை
2. முதியோர் சனத்தொகையின் கல்வி நிலை

மாணவி : வாழ்வதற்குகந்த சுற்றுச் சூழல் என்னும் துறையில் உள்ளடங்குகின்ற சுட்டெண்கள் எவை?

ஆசிரியர் : இங்கு 4 சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன அவையாவன

1. சமூகத் தொடர்புகள்
2. உடல் பாதுகாப்பு
3. சுதந்திரமாக வாழ இயலுமாக உள்ளமை
4. பொதுப்போக்குவரத்துக்கு அணுகக் கூடியதான இயலுமை.

மாணவி : இச் சுட்டெண் எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது

ஆசிரியர் : மேலே கூறப்பட்ட வருமான பாதுகாப்பு, சுகாதார மட்டம், கல்வி மற்றும் தொழில் நிலை, வாழ்வதற்குகந்த சூழல் ஆகிய 4 துறைகளின் எண்தகவு மையப்புள்ளியின் மூலம் ஒட்டுமொத்த பெறுமானம் கணிப்பிடப்படுகின்றது.

மாணவி : நன்றி சேர் இவ்வளவு நேரம் எங்களுக்காக உங்களுடைய அருமையான நேரத்தை செலவிட்டு இலகுவாக புரிந்து கொள்ளும் வகையில் விளக்கம் தந்தமைக்கு நன்றி

ஆசிரியர் : நன்றிகள் மீண்டும் என்னைத் தெரிவு செய்து என்னிடம் வினாக்களை கேட்டு தெளிவுற்ற உமக்கும் யாழ்/இந்து மகளிர் பாடசாலை சமூகத்துக்கும் குறிப்பாக வர்த்தக மாணவர் மன்றத்திற்கும் வர்த்தகத்துறையில் கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள்

மாணவி : மீண்டும் ஒரு முறை நன்றி கூறி விடை பெறுகின்றேன். வணக்கம்

**நீங்கள் இழப்பதற்கு ஒன்றுமே இல்லை**

**அடிமைத்தனத்தை தவிர,**

**ஆனால் வெல்வதற்கு இந்த உலகமே**

**இருக்கிறது!**



## செயலாளரின் நன்றிகள்..........

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரியின் வணிக மன்றச் செயலாளராக செயற்படுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நன்றியுரை கூற முற்படும் போது முதலில் நாம் எப்பணிகளை செய்தாலும் அப்பணிகளுக்கு ஆதரவும், ஆசியும் வழங்கிய எமது கல்லூரி முதல்வருக்கு முதற்கண் எம் மனமார்ந்த நன்றிகள்.

ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கிய சான்றோர்களுக்கும் எம் வணிக மன்றத்தின் "வணிக வனிதை" என்ற மலரிற்கு ஆக்கங்கள் வழங்கி மலர் வெளியீட்டுக்கு உதவிய சகோதரிகளுக்கும், பெரியோர்களுக்கும் மிகுந்த நன்றிகள்

எமது வணிக மன்றத்தின் அனைத்து செயற்பாடுகளையம் சிறப்புற நடாத்துவதற்கு வழிகாட்டிய அதிபர், பிரதியதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும் நாம் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

இதழின் வெளியீட்டுக்கு விளம்பரம் தந்துதவிய வர்த்தகர்களுக்கும் எமது நன்றிகள். மேலும் இவ் இதழை அழகுற வடிவமைத்த *"Colombo Printers"* நிறுவனத்தினருக்கும் எமது வணிக மன்றம் சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்கிறோம்.

அத்துடன் எமது மன்றத்துக்கு முழுப்பங்களிப்பையும் வழங்கிய அதிபர் அவர்களுக்கும் எம்மை உற்சாகப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எம்மோடு தோளோடு தோள் கொடுத்த கல்லூரி தோழிகளுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

*செல்வி.சி.டிலக்சி*
**2017 (B) வர்த்தகப்பிரிவு**
**செயலாளர்**
**வணிகமன்றம்**

# JAFFNA TEX

Colombo fashion

No.203, Power House Road,
Jaffna.

0778093050

# பாரதி கல்வி நிலையம்

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

## BARATHY EDUCATION *Institute*

## தரம் 6 முதல் O/L வரை

எமது தேசத்தின் மாணவர்களுக்கான கல்வியறிவை
மேம்படுத்தும் நோக்கில் கற்றல், கற்பித்தல்
அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாமின் சேவையில்
மாதாந்த பரீட்சைகள் நடைபெறுதல், ஒழுக்கக்
கட்டுப்பாடுகளுடன் கூடிய கற்றல் நடவடிக்கைகள்
ஒவ்வொரு தவணை முடிவிலும் மதிப்பீட்டறிக்கை
வழங்கப்படுதல், பெற்றோர் சந்திப்புக்கள்
இடம்பெறுதல், விசேடமாக கவின்கலை வகுப்புக்கள்
நடைபெறும். யாவும் உங்கள் வாழ்விற்கு
உயர்வு வழிகாட்டவே

O/L மாணவர்களுக்கான சுகாதாரம், ICT,
குடியியல், வர்த்தகம் என்பனவும்
நடைபெறுகின்றன.

**AUTHORIZED DEALER
FOR SERVICE & MECHANICAL
REPAIRS**

SUZUKI

## WE PROVIDE ALL KIND OF SERVICE & REPAIRS

***DOOR TO DOOR SERVICE***

JUST CALL
0778222929

NO.316/5, CLOCK TOWER ROAD,
JAFFNA.

வணிக வனிதை சிறப்புற எமது வாழ்த்துக்கள்

# கணக்கீட்டுக் கல்லூரி

கல்வியங்காடு

## வர்த்தகப் பிரிவு

ஆசிரியர் குழாம்

வணிகக்கல்வி – V.K.ரவிகரன்

பொருளியல் – K.பிரதீபன்

கணக்கீடு – R.சுகீர்தன்

NEW YARLTTON
MULTI CENTRE
Importers Wholesale &
Dealers of
No.48, Kasthuriyar Road,
Jaffna.
T.P :- 021 222 4405

அமுதா
மல்ரி சொப்
Amutha
Multi Shop
All Kind of Mobile Phones unlocking, Soft ware updating & Repairing.All Model Phones Sales, Accessories, I Phone unlocking, All Network Reloads and Cards.
T.P: 021 222 4244, 077 2534615
E.mail : amuthamultishop@gmail.com
284, Navalar Road,
Navalar Jaffna.

மயூரி இரும்பகம்
லிமிடெம்,
தரமான இரும்பு வகைகள், பெயின்ற் வகைகள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள், இடியப்ப உரல்கள், மின்குமிழ் வகைகள் என்பவற்றை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம் இதுவே....
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
உரிமையாளர் : வை. சோதிநாதன்

MOBILE GENIUS
Phone Shop
228B, Ramanathan Road,
Thirunelvely,
Jaffna.
077 4910 633
E.mail : 0778678651@gmail.com


NO.1
VIJITHA RICE MILL
விஜிதா நம் 1 தரமான அரிசி
உற்பத்தியாளர்களும், விநியோகஸ்தர்களும்
T.P :- 021 222 6658
Thavady South,
Kokuvil.
தாவடி தெற்கு,
கொக்குவில்.


சுத்தமான நீர் அருந்தி
நோயற்ற வாழ்வே குறைவற்ற
செல்வமமென வாழ்ந்திடுவீர்
AQUAFINA
Distributors : KAJAMUGAN HARDWARE
57/47, Stanley Road,
Jaffna,
Tel : 021 222 7282
Fax : 021 222 2368
kajamuganhw@hotmail.com


SUJANAS
hanaers
Tel : 021 222 8040
021 222 5843
021 222 1560
No.229-231, Power House Road, Jaffna.
No.24/A, Power House Road, Jaffna.
30, 1st Floor, Modern,
Market Power House Road, Jaffna.


ISHARA
இஷாரா
நியூ டிறெஸ் மார்ட் (பிறைவேட்) லிமிடெட்
Number One Name
In The
Fashion World....!
T.P: 0212283353,
0772628933
No.199/A, 199/B,
Power House Road,
Jaffna.
Web : www.isharanewdressmart.com
E.mail : senura@isharanewdressmart.com


சங்கீதா
மல்ரி சென்ரர்
அனைத்து வகையான
அன்பளிப்புப்
பொருட்களுக்கும்
தனித்துவமான
ஒரே இடம்
இல.05. நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


ஜனா பான்சி
ஹவுஸ்
பென்சி பொருட்கள்,
அழகுசாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள் மற்றும்
நவீன Bag வகைகளை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
e.mail : ketharanathan.janakam@gmail.com
இல.16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P :- 077 2658100,
0212219610

# MCS IT CAMPUS

DIT (NVQ5), BIT - University of Colombo CIMA_UK, Computer Engineering USA

Web(HTML, Javascript, PHP) / Network (MCSE, CCNA)
/ Software Engineering (C,JAVA, Python, JAVA)
Special offer for Students 50% discount.
Get MTA, MCs, MIEEE, MBCS, OCJP, CCNA qualifications
and get hight scale jobs.

Win 100% Scolarship! The Length of IPV6 address is

a) 16 bit b) 32 bit c) 64 bit d) 128 bit

## MCS IT CAMPUS

Near University of Jaffna, 0772 395 895

For original file pls send email mcsjaffna@gmail.com


# எமக்கு விளம்பரம் தந்து உதவிய அனைவருக்கும் நன்றிகள்

வணிக மாணவர் ஒன்றியம்




## யாழ்ப்பாணம்

முதலாம் கடைச் சந்தி,
பருத்தித்துறை.
021 492 3201
071 454 6958

இல. 227/6, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.( மதவடி அண்மையில் )
021 224 2022
071 454 6956

விக்னேஸ்வரா
கல்லூரி வீதி, நெல்லியடி.
021 300 6550
071 454 6957

கண்டி வீதி, சாவகச்சேரி.
(நீதிமன்றம் அண்மையில்)
021 492 3202
021 227 0700

யாழ்கச்சேரியடி
யாழ்ப்பாணம்
36, கச்சேரி நல்லூர் வீதி
021 222 6699,0767 225 292

ஓம் பிளாசா பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்
021 222 6688
0772 422 022

## கிளிநொச்சி

A9 வீதி, கிளிநொச்சி.
(கச்சேரி முன்பாக)
021 228 5505
071 454 6955

வாடியடி சந்தி,
பூநகரி.
021 320 1818
071 454 6955

புளியடிச்சந்தி,
முல்லை வீதி, விசுவமடு.
021 320 1515
071 454 6955

நாச்சிக்குடா சந்தி
மன்னார் வீதி, முழங்காவில்.
021 300 6544
071 454 6955

## மன்னார்

இல. 94, பிரதான வீதி,
மன்னார்.
023 225 1656
077 847 2732

## வவுனியா

216, A9 வீதி, வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்)
024 222 7777
0777 100 444

HINDU LADIES COLLEGE
31 JAN 2017



பரீட்சைக்குப் பின்
யாழ்ப்பாணத்தில்
சிறந்த உயர்கல்வியினை தொடர்வதற்கான சந்தர்ப்பத்தையும், தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் பாட நெறிகள்
edexcel
PEARSON
CIOB
RICS
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
INTAKE NOW ON
HND
BUSINESS MANAGEMENT MARKETING | HRM
Leading to BA (Hons) from the UK Universities
HND
QUANTITY SURVEYING
Leading to BSc (Hons) from the UK Universities
HND
BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY
Leading to BSc (Hons) from the UK Universities
HND
CIVIL ENGINEERING
Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LLB
LAW
Leading to LLB (Hons) from the UK Universities
UGC Recognized
TVEC Approved
HND
COMPUTING
Leading to BSc (Hons) from the UK Universities
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA 077 710 2131
077 960 3753
COLOMBO 077 283 4595
Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna.
Corporate Office
32, Dharmarama Road, Colombo 6.
T : 0112597217
18 YEARS
ISO 9001:2008 CERTIFIED
Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka by Pearson UK @ BTEC Higher Education Forum 2016
Educational Institute with Best Academic & Industry Interface by South Asian Partnership Summit & Business Awards 2016
Academic Impact Winner by QSi - UK 2016
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) Survey by LMD 2014
BTEC Gold Partner by Pearson - UK 2013
Performance Excellence Award by Pearson - UK 2011
HOTLINE : 021 221 9910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk